# காவேரி

சர்வஜித் - மாசி




579
OFFICE OF THE REGISTRAR ... MADRAS



# தற்கால கட்டிட நிர்மாணம்

## தானியக் குதிர்கள்.

உற்பத்தியாகும் எல்லா உணவுப் பொருள்களையும் சேமித்து பாது காக்க வேண்டிய அவசியம் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள இத்தரு வாயில், எலிகளினாலும் பூச்சிகளினாலும் ஆயிரக்கணக்கான டன் தானியங்கள் நாசமாய்ப் போகும்படி விட்டுவிட முடியாது.

கான்கிரீட்டின் உதவியால் எலிகளைத் தடுக்கலாம். தனி உபயோ கத்திற்கும் தேவையுள்ள சாஸ்வதமான தானியக் குதிர்கள் (தரை மட்டத்திற்கு மேலாகிலும் பூமிக்குள்ளாகிலும்) கட்டுவதற்கு, எலி களினாலும், நெருப்பினாலும், பாதிக்கப் படாததும், சுகாதாரமான தன்மை மிகுந்ததுமான சாதனம் கான்கிரீட். தவிர கான்கிரீட் குதிர்கள் ஈரத்தினால் பாதிக்கப் படா. சொற்ப செலவில் நீடித்த உழைப்பைக் கொடுக்கும்.

உங்களுக்கு உதவி தேவையானால் ஸி. எம். ஐ. யின் டெக்னிகல் ஸ்தாபகமான தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா (199, மவுண்ட் ரோட், மதராஸ்)க்கு எழுதுங்கள்.

**தி சிமெண்ட் மார்கெடிங்.கம். ஆப் இந்தியா லிட்.**

OF THE REGISTRAR
28 FEB 1948
MADRAS


# நியோசிட் DDT யினால் பேன்களை நிச்சயம் ஒழிக்கலாம்



தலைப் பேன்களால் மிகுந்த தொந்தரவுமாத்திரமின்றி தேகாரோக்கியத்திற்கும் அவை பெரிதும் ஆபத்தாயிருக்கின்றன ; ஏனெனில் டைபாயிட் ஜுரம் பரவுவதற்கும் காரணமாயிருக்கின்றன. 10 சதவிகிதம் DDT கலந்துள்ள நியோஸிட்டினால் அவற்றை எளிதில் கொன்றுவிடலாம். தலை பேன்களை ஒழிக்க நியோஸிட் பவுடரைத் தலைமீது நன்றாக அழுத்தித்தேய்க்கவும். சீலைப் பேன்களை ஒழிக்க அவை கடிக்கும் இடங்களிலும், ஆடைகளிலும் குறிப்பாகச் சட்டைப்பை, மற்றும் தையல் இடுக்குகளிலும் நன்றாகப் பவுடரை தூவிவைக்கவும். துடைத்தோ, கழுவியோ போக்கிவிட்டால் மீண்டும் பவுடரைத் தூவவேண்டும். புதிதாக உற்பத்தியான பேன்களை ஒழிக்க அதுதான் வழி (DDT ஈர்களைக்கொல்லாது). DDT உடனடியாகக் கொல்லாதென்பது தெரிந்த விஷயம். ஆனால் அது பூச்சிகள்மீது பட்டுவிட்டால் அவை சாவது நிச்சயம். அதன் நீடித்து வேலைசெய்யும் சக்தி வேறெந்த பூச்சிகள் நாசினிக்கும் கிடையாது.

# நியோஸிட்டை

## *சரியானபடி உபயோகியுங்கள்!*

**DDT Geigy DDT**

சென்னை ராஜதானியில் ஒப்பிவைக்கப்பட்ட ஜில்லாக்கள் தவிர. திருவாங்கூர், கொச்சி மற்றும் புதுக்கோட்டை சமஸ்தானங்கள் உள்பட வினியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ் அடிஸன் அண்ட் கோ லிட், மவுண்ட் ரோட், மதராஸ்.

மைசூர் சமஸ்தானம், கூர்ஜரம், பல்லாரி, அனந்தபூர், கடப்பை கர்நூல் ஆகிய ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள் :

மஹமத் ரஹீம் கலீலி.

99-B உஸ்மான்கான் ரோட், பெங்களூர் ஸிடி.

DJK 5476 TM

Heralding a Large Range of Fine Models for 1948

**EKCO** Proudly Present

**The 6 Valve AC Bandspread Model A-69!**

The Super-Set with R. F. Stage on ALL the Bands, PLUS your favourite EKCO Features standard in all EKCO Models. A Set really worth waiting for, and a Treasure to be proudly owned !! No wonder, IT WILL be YOUR Choice for 1948 !!!

WE take this opportunity to warmly thank ALL our friends & customers for their cooperation & patronage in the past, as WE enter the THIRD YEAR OF OUR PROGRESS, assuring YOU of our best and prompt services YOU can always command from us.

**ASVAMS**
(EKCO DISTRIBUTORS)
RADIO & ELECTRICAL DEALERS & ENGINEERS,
105, Big Street, KUMBAKONAM.



எல்லாவிதமான புத்தகங்கள்,
கலர் லேபிள்கள்,
ராப்பர் டிஸைன்கள்,
ஆபீஸ் பாரங்கள்,
லெட்ஜர்கள் முதலான


**ஜாப் பிரிண்டிங் வேலைகள்**

செய்துகொடுக்கப்படும்

•

# காவேரி கலர் பிரஸ்,

பெஸண்ட் ரோடு, :: கும்பகோணம்.



## ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. இது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

# மைசூர்
# சந்தன அத்தர்


MSK 16 TM

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

## உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.



உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக காலம் உழைக்கும்.




மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு:
கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.




### உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

## மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

**CALCUTTA CHEMICAL**







**லிவர்க்யூர்** பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.



## 1948-ஆம் ஆண்டு

### உங்களுக்கு

### வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிட லாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேருவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாக பலன் குறித்து ரூ. 2—8—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

★

**Shree**
**Swami Yogiraj Jyotish Asram,**
C. K. PHAGWARA. (Kapurthala State)


# கார்த்திகேயினி

## வெளியீடுகள்

| | | ரு. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | நமஸ்காரம் (சு. கி.) | 2 | 8 | 0 |
| 2. | சிப்பாய் ஹ்ருதயம் (சு. கி.) | 1 | 8 | 0 |
| 3. | அபூர்வ பிறவிகள் (மாறன்) | 2 | 8 | 0 |
| 4. | வளர் பிறை (மாறன்) | 3 | 0 | 0 |
| 5. | ஐந்தருவி (சோமு) | 1 | 0 | 0 |
| 6. | பிள்ளையார் சுழி (சாவேரி) | 2 | 0 | 0 |
| 7. | புகழ்ச் செல்வர் (தி. ஜ. ர) | 3 | 0 | 0 |
| 8. | வாழ்க்கைச் சித்திரம் (வ ரா.) | 2 | 8 | 0 |
| 9. | 1944 முதல் இன்றுவரை (ந. ராமரத்னம்) | 1 | 4 | 0 |
| 10. | ஆசியாவின் அறை கூவல் (பல்குநன்) | 0 | 12 | 0 |
| 11. | மீண்ட இந்தியா! (N. R. பத்மநாபன்) | 0 | 14 | 0 |
| 12. | தமிழ் உணர்ச்சி காலிகோ பைண்ட் | 3 | 8 | 0 |
| | சாதா ,, (சுத்தானந்த பாரதியார்) | 3 | 0 | 0 |
| 13. | திருமந்திர விளக்கம் (சுத்தானந்த பாரதியார்) | அச்சில் | | |
| 14. | சீனு எங்கே போகிறது! (R. ராமநாதன்) | ,, | | |
| 15. | மனிதன் (R. ராமநாதன்) | ,, | | |

**கார்த்திகேயினி பிரசுரம்**
இராமச்சந்திரபுரம்
(புதுக்கோட்டை ஸ்டேட்)






வேப்பின் சிறந்தசத்துக்கள் இதில் அடங்கி இருப்பதால்,
**கேரளா வேப் ஸோப்**
உங்கள் சருமத்தைப் பாதுகாத்து. அதிக அழகை உண்டாக்குகிறது சருமம் மாசு மறுவில்லாமல் இளமை வனப்புடனிருக்கச் செய்கிறது. நல்ல சரும ஆரோக்யத்திற்கு எற்ற ஸோப் இதுதான்.

*MANUFACTURERS :—*

**KERALA SOAP INSTITUTE**
...CALICUT...

FAS-KS-4

# FILM....

**ADVERTISEMENT CHARGES ON APPLICATION**

**PRODUCERS,**
**DISTRIBUTORS,**
**FILM STUDIOS,**
**THEATRES,**
**STUDIO EQUIPMENT**
**DEALERS, Etc. Etc.**

Are requested to send details such as Pictures produced and under production; Pictures distributed and available for distribution; Theatres, Location of Theatre, seating capacity, rates of admission & name of Proprietors, Partners, Manager, Address, etc. etc. in all the above lines in South India for publication

# FREE OF CHARGES

IN THE 1948 EDITION OF THE

**MADRAS DIRECTORY & WHO'S WHO,**

**117, AREMENIAN STREET, :: MADRAS—1.**

Post Box 1568






மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிருள்.

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street, — G. T. MADRAS.

**- நிச்சயமாகத் தவருது பலனளிக்கும் -**
**சில மருந்துகளை அறிமுகப்படுத்துகிருேம்**

**விமலா மாத்திரைகள் நெ. 1:**

பலவீனம், நரம்புத் தளர்ச்சி, இதர நரம்பு, மனக் கோளாறுகள், ஸ்பெர்மடேடரியா, தூக்கமின்மை, ஸ்வாசகாசம், மூல ரோகம், ரத்தக் கட்டிகள், கிரந்தி வீக்கம், புண், படை, ஸ்திரீகளின் மர்ம வியாதிகள், அஜீரணம், பிளவை முதலியவற்றை நிவாரணம் செய்யக்கூடியவை.

**விமலா மாத்திரைகள் நெ. 1 (ஸ்பெஷல்):**

க்ஷயரோகத்தை நிவர்த்திக்கும்.

**விமலா மாத்திரைகள் நெ. 2:**

சகலவிதமான ஜ்வரங்கள், சூதக வாய்வுகள், கீல் வாய்வுகள், கபம், இடுப்புப் பிடிப்பு, குஷ்டம், துர்நாற்றத்துடன் கூடிய ரணங்கள், காதில் சீழ் வடிதல், பீனிசம், வீக்கம் முதலியவற்றிற்கு.

**விமலா மாத்திரைகள் நெ. 2 (ஸ்பெஷல்):**

கப சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் நலமளிப்பவை.

**'எலீஷியம்' பாம்:**

மெல்லியலாருக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவதால் இதை ஸ்திரீகளின் உற்ற நண்பர், தோழன் என்று இதற்குச் சொல்லலாம்.

**காச (ஆஸ்த்மா) நிவாரணி:**

குறித்த காலங்களில் வருகிற காசநோயைக் கண்டிக்க இருவேளை மருந்தே போதும்.

**அக்னி எண்ணெய்:**

கீல்வாதம், சூலைக்கட்டு, தீவிரமான பக்ஷவாதம் முதலிய தீராதெனக் கருதப்படும் வியாதிகளை நிரந்தரமாக அக்னி எண்ணெய் நிவர்த்திக்கும்.

**கபக் கோளாறுகளுக்கு 'பேடண்ட்' மாத்திரைகள்:**

இருமல், மார்ச்சளி, காசம் (ஆஸ்த்மா) முதலிய வியாதிகளை உடனே போக்கடிக்கும். தீங்கற்றவை ஆகையால் எந்நேரமும் எந்நிலையிலும் உபயோகிக்கலாம்.

இன்னும் அநேக அற்புதத் தயாரிப்புகள் உள. எங்கள் கேட்லாக்குக்கு எழுதவும். பிரதிநிதிகள் இல்லாத பிரதேசங்களில் ஏஜண்டுகள் தேவை.

**KAVIRAJ N. C. MUKHERJI, Baidyasastri,**
10, Fakir Haider Lane, Kalighat, Calcutta 26.

# பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 7 — மாசி இதழ் 7

| | |
|---|---|
| மஹாத்மா அமரரானூர் | 10 |
| பிரிவாற்ருமை<br>பி. ஸ்ரீ. | 12 |
| காந்தி<br>வே. சாரநாதன் | 13 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்<br>ராமய்யா | 15 |
| சங்கப் பலகை | 20 |
| கண் திறக்குமா?<br>ஜி. எம். மணி | 25 |
| அறிவுப் பரீட்சை<br>ஆர். எம். | 30 |
| கைதியின் உள்ளம்<br>கிட்டு | 41 |
| வனஸ்பதி<br>சி வி. ராமகிருஷ்ணன் | 53 |
| கழுவேற்றிய கனவு<br>வே. ரங்கராஜன் | 56 |
| பக்த சிகாமணி ஸேனன்<br>கலாதாஸன் | 66 |
| நடன கலா<br>கே. சுந்தரம்மாள் | 73 |
| பரலோக வாசலில்<br>க. கணபதி | 82 |

குறிப்பு —: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# காவேரி

| சர்வஜித்து<br>மலர் 7 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | மாசி<br>இதழ் 7 |
|---|---|---|

## மஹாத்மா அமரரானார்



மஹாத்மா மறைந்தார். முடிசூடா மன்னன் பிடி சாம்பலானார். அஹிம்சையை நிலைநாட்டப் பாடுபட்டவர் ஹிம்சைக்கு இலக்கானார். வகுப்பு வாதத்தை ஒழித்து மக்கள் மனதைப் புனிதமாக்க உயிரைப் பணயம் வைத்து வெற்றி பெற்றவர் அதன் வெறியினால் உயிர் மாய்க்கப் பெற்றார்.

ஆனால் என்ன? உலக மக்கள் கண்ணீர் பெருக்கெடுத்தோடினால் என்ன? அவர் ஏற்றிய ஒற்றுமைச் சுடர் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விட்டது. அவர் அன்பு மக்களைப் பிணைத்து விட்டது. அவர் காட்டிய வழி ராஜபாட்டையாகி எல்லா மக்களும் அதன் வழியே நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர் ஆவி, அவர் நினைவு, அச் சாலைக்குத் தூங்கா விளக்காகப் பிரகாசித்து மக்களை உயரிய லக்ஷியத்திற்கு அழைத்துச் செல்லுகிறது.

மஹான்கள் தோன்றுவதும், மறைவதும் இயல்பு. ஆனால் காந்தி மஹான் காட்டிய வழி பாமரர்களையும் தாங்கிச் செல்லும் எளிய வழி. மதத்தையும் அரசியலையும் பிணைத்து ஒன்றும் உருக்குலையாமல், ஒன்றுக்கும் ஹானி விளைவிக்காமல், மக்களின் துயரத்தைப் போக்கிக் கொள்ள வழி கற்பித்தார்.

அவர் பூத உடல் மண்ணால் ஆகியது. எனவே அது மண்ணுடன் கலப்பது இயல்பு. உலக மக்கள் கண்ணீர் வடிப்பதும் இயற்கை. ஆனால் அவர் புகழ் உடலுக்கு மறைவேது? மக்களுக்குத் துணையாக என்றும் சஞ்சரித்துக் கொண்டே இருக்கும்.

அவதாரங்களும், மஹான்களும் நிறைந்த இவ்வுலகில் சாதாரண மக்களோடு மக்களாகப் பழகி விசித்திரங்கள் எதையும் செய்து மயக்காது காந்திஜி தம் தூயவழியினாலும், அன்பினாலும், எளியோரின் வாழ்க்கையோடு ஐக்கியமானதிலும் கோடிக்கணக்கான மக்களைத் தம் கடினமான, நெறிதவறா வழி நடக்கச் செய்தது

உலக சரித்திரத்தில் இதுவே முதன்மை யாகும்.

இதை எப்படிச் சாதித்தார்? இவருடைய வெற்றிக்கு என்ன காரணம்? அதிகாரம் அவரிடமில்லை. தந்திரமோ, மக்களைக் கவர்ச்சி செய்வதற்கான முறைகளின் சாதனங்களோ அவரிடமில்லை. பலாத்காரத்தை வெறுத்தவர். சாதாரண மனிதருள் தானும் ஒருவன் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டவர்.

எண் சாண் உடல். வற்றி வதங்கிய மேனி. குச்சி போல் குன்றிய சரீரம். கோவணம் தரித்த மூர்த்தி. எனவே தோற்றத்தில் வசீகரம் இல்லை.

ஆனல் அன்பில் தோய்ந்த உள்ளம். ஆத்ம குணத்தில் காணமுடியாத ஆழம். ஆண்டவனிடத்தில் அளவிலா நம்பிக்கை. இதோடு எஃகிலும் திடமான நெஞ்சம். பாருங்கல் என உறைந்த உறுதி. பேச்சிலோ நயம் மலிந்து கிடக்கும். ஒவ்வொரு வார்த்தையிலும் பணிவு ஒலிக்கும். வார்த்தைகள் இருதயத்திலிருந்து வெளிவரும். சொல்லில் திருகுதல், குத்தல் காண முடியாது. நேராக வந்து இருதயத்தைத் தாக்கும் தன்மையுடையது.

இவைதான் காந்திஜியின் போர்க் கருவிகள். இவற்றை வைத்துக் கொண்டு மக்களுக்குப் பணியாற்ற முற்பட்டார். அவர் பேச்சு கோடிக்கணக்கான மக்களைப் பணியச் செய்தது. ராஜ உத்தரவுக்கு மக்கள் பணிந்தாலும், பணியா விட்டாலும், காந்திஜியின் வாக்குக்கு அடி பணிந்தே தீருவார்கள். அவர் காட்டிய வழி சுலபமானதல்ல. பல சமயங்களில் பகுத்தறிவுக்கு முரணுகக்கூடத் தென்படும். எனினும் மக்கள் பணிவார்கள். இறுதியில் வெற்றியும் பெற்று விடுவார்கள். அஹிம்சை, உண்மை, தெய்வ நம்பிக்கை—இம் மூன்றும்தான் அவர் வழுவாது கடைப்பிடித்த கொள்கைகள். எத்தகைய நெருக்கடியான நிலை ஏற்படினும் அதனின்று தவருது போராடுவார். வெற்றியும் காணுவார்.

அடிமையாய்க் கிடந்த இந்தியர்களை எழுப்பி, சுதந்திரமடையச் செய்தது அவர் செய்த பெரும் பணியல்ல. இந்திய மக்கள் தங்கள் ஆத்மாவை இழந்து அடிமையில் மோகங்கொண்டு திரிந்தார்கள். இவர்களுக்குச் சுய உணர்ச்சி உண்டாக்கி ஆத்ம ஞானம் பெறும்படி செய்ததுதான் அவர் ஆற்றிய பெருந்தொண்டு. அநேக நாடுகள் இழந்த சுதந்திரத்தை மீட்டுக் கொண்டிருக்கின்றன. பல அரும் பெரும் தலைவர்கள் முன் நின்று உதவியிருக்கிருர்கள். ஆனல் மஹான் காந்தி இந்தியாவில் மக்களைத் தனி வழி நடக்கச் செய்து இழந்த சுதந்திரத்தை அஹிம்ஸா முறையில் மீட்டுக்கொள்ள வழி காட்டியது உலக சரித்திரத்திலேயே ஆச்சரியப்படத்தக்க ஒரு புதுமை இது.

அவர் வெற்றிக்கு இன்னுமொரு அடிப்படையான காரணம் கூறலாம். கிராமங்களில் உழலும் மக்களின் பிரதிநிதியாகத் திகழ்ந்து அவர்கள் உணர்ச்சிகளைக்கொண்டே, அவர்கள் நலனைக் கருதியே எந்தப் பிரச்னையையும் நோக்கினுர் காந்தி. எனவேதான் அவர் இந்தியாவில் கோடிக்கணக்கான மக்களின் லக்ஷிய மூர்த்தியாக விளங்கினுர். அவர் நுட்பமான அறிவு, பரந்த நோக்கம், மிகுந்த மனிதத் தன்மை—இவைகளை உதவியாகக் கொண்டு ஆசாபாசங்களை அடக்கி ஆளக்கற்று, உயரிய வகைகளில் பயன்படுத்தினுர். அவர் வேதாந்திதான். ஆயினும் காரியத்தில் நிகரற்றவர்.

இத்தகைய மஹான் பலாத்காரத்தினுல் மறைந்தது உலக மக்களை வியப்படையச் செய்துவிட்டது. ஆனல் அவர் காட்டிய வழி மறையாது. அதன் வழியே உலக மக்கள் நடக்கப் பழகிக்கொண்டால், இன்புற்றுவாழ்வது திண்ணம். மஹாத்மா அமரராகி விட்டார்.

# பிரிவாற்றாமை

(பி. ஸ்ரீ.)

உலகமெலாம் புகழ்ந்தேத்தும் உத்தமனே மறைந்தனையோ உயிர்க்கு ணங்கள்
இலகவே யிவ்வுலகில் எளியவர்க்காய் எளியவனாய் இருந்து வந்தாய்
நிலவெனவே குளிர்முகமும் நீள்கருணை பொழிவிழியும் நேராய்ப் பேசும்
நலமிகக்கொள் திருவாயும் நானிலத்தே யாரிடத்து நாங்கள் காண்போம்.

பெருந்துன்ப மிழைத்தவர்க்கும் பெருங்கருணை செய்திட்ட பெருமையோன்நீ
வருந்துன்ப மெதுவேனும் மலைபோலச் சலியாத மனத்தி னன்நீ
கருந்தனமாம் கீதையையும் இராமன்றன் காதையையும் கற்ற வன்நீ
பெருந்தனத்தை விரும்பாத பெருமையுள்ளம் படைத்தவன்நீ பெரியவன்நீ.

ஆவியொடு காயமுமிங் கழிந்தாலும் புவியிலுள்ளார் அகங்க லங்கிப்
பாவியென்ன வாழ்ந்திடுதல் பழியென்றும் பாவமென்றும் பண்பின் ஓர்ந்தாய்
நாவினுரை யோவாதே நலம்புரியும் சொற்களையே நவிலல் உற்றாய்
கோவியலும் மதச்சிறப்பும் குன்றாத புதுவழியைக் குறிக்கொண்டாய்நீ

பேச்சினிலும் எழுத்தினிலும் உளங்கொண்ட உண்மையையே பிறப்பித்தாய்நீ
ஏச்செல்லாம் துதியாக எண்ணியிடு மியல்புடைய ஏந்தல் நீயே
கோச்செல்வம் பெற்றோரும் குறைகள்பல வுற்றோரும் குணக்குன் றென்ன
மீச்சொல்ல விளங்குகின்றாய் வேறெவரே உனைப்போல மேம்பட்டோரே.

துயர்விளைக்கும் புயலென்னத் தோன்றியுள்ள கட்சிபல சூழ்வுற் றிங்கே
அயலவரெ லாம்நகைக்க அந்தோபல் கொடுவினைகள் ஆற்று மிந்நாள்
புயவலியும் படைவலியும் போயொழியும் ஆத்மபலம் போகா தென்றே
நயம்பெருகு நடையதனால் நாவலர்க்கு முணர்வித்த நல்லோன் நீயே.

எல்லாரும் இன்பமெய்தி யிருந்திடவே யுழைப்பனென எண்ணங் கொண்டாய்
கல்லாரும் கற்றாரும் கலந்துபுகழ்ந் திடுந்தகுதி கண்டோ முன்பால்
சொல்லாமே கேளாமே சூழ்வினைபோல் எமைத்துன்பம் தொடர்ந்து பற்ற
நில்லாமே நீசென்றாய் நீதியோ அறந்தானோ நீயே சொல்லாய்.

பாரதத்திற் பிறந்துநீ அதன்பண்பைப் பாரதனிற் பரவச் செய்தாய்
மாரதருங் காணாத வெற்றியையுன் மனமாண்பால் மகிழ்ந்து கண்டாய்
பேரதுவுங் காந்தியுன் பிறங்குசெயல் களுங்காந்தி பிரிந்தோ முன்னைக்
காரதனை யிழந்தபயிர் போலயாம் கலங்குகின்றோம் கடவுள் காக்க.

# காந்தி

**வே. சாரநாதன்**

"அச்சமில்லை, அச்சமில்லை" என்ற தேசத்திலிருந்து, அபய தேவதையின் தேசத்திலிருந்து, ஓ பேரானந்தமார்ந்த குரலே, வா! தெளிவான நம்பிக்கையுடனும், வெற்றிகொண்ட சாந்தமுடனும் வா!

அசத்யத்தின் புயலாம், பாயும் நீர் வெள்ளமாம், மோதும் அதிர்ச்சியாம், இவ்வுலகக் குழப்பத்தில், நம்மாத்மாவின் பெயர்த்தலற்ற, பரிபக்குவமான, ஆற்றலுள்ள அடக்கமொன்று உண்டு என்று, வாழ்க்கையின் உயிரூற்றுகள் வற்றியும், பிரமித்துக் குழம்பும் மானுடனின் செவியில் உரக்கச் சொல்! அக்குரலைக் கேட்ட வண்ணம் இருக்கிறோம். பசியின் கோப வெள்ளமானது ஓங்காமல், அது பொங்கி, அக்னி குண்ட நீரைப்போல் மனிதரைத் தாக்கி, மனித சுவர்க்கத்தையே தகர்க்காமல், அடக்குவது அச்சாந்தமயமான குரல்! நரனும், ஈசுவரனும் சேர்ந்து அமைத்திருக்கும் இவ்வரிய வாழ்க்கையைக் கசக்கிப் பிசைந்து உருவற்றதாகப் பசியென்ற கொடுமை செய்யவே கூடாது, என்று தடுக்கிறது அக்குரல்! ஐயோ, நரனும், ஈசுவரனும் ஒருங்கே களங்கமுற்று, தெய்வத் தன்மையை யிழத்தலாகாது என்று ஓதுகிறது அக்குரல்.

உன் சொல், பசியுற்றவருக்கு நிறைவையளிக்கிறது; ஹ்ருதயத்தை உறக்கத்திலிருந்து எழுப்புகிறது; உன் சாந்தமான தொண்டர்களின் கைகளுக்கு நிகரற்ற பலம் தருகிறது; அவரெல்லோரும், உன் யாகத் தீயில் உருக்கைப்போல் இசைத்தெடுக்கப்பட்டவர்; தோல்வியற்ற விசுவாசம் என்ற நிலத்தை அவர் உழுது சாகுபடி பண்ணுகின்றனர்; அடிமைகளை வெருட்டும் கங்காணியின் மணியோசை அவரை உழைக்கச் செய்வதில்லை; தங்களின் மனச்சாட்சி, தங்களின் இச்சை, தங்களின் பகுத்தறிவு ஒன்றே, கருணைத் தெய்வத்தின் கீதத்தில் நனைந்த பகுத்தறிவு ஒன்றே அவர்களை ஊக்குவதாம்! ஏ காந்தி மகானே, நீயே இஃதெல்லாமானாய்!

ஈசுவரனின் பிரகாசம் பெற்ற மா பெருந் துயரின் புண்ணியக் கிணறுகள் உனதாகும். "பரிசுத்தர்களே, எல்லா ஆயுதங்களையும் களைந்துவிடுங்கள். ஆனால் தெர்மாப்பிலிக் கணவாயில் நீங்களும் நில்லுங்கள். வீர சுவர்க்கமும் வேண்டாதீர்கள், அனாஸக்தி யோகமொன்றே நல்லது" என்ற கட்டளை உனதேயாகும்; உன் ஆசாரங்கள், விரதங்கள், புண்ணியப் பரம்பொருளுக்குச் செய்யும் வந்தனைகள், உனக்கே பொருந்தும். உன் தண்டனைக் கோல்—பகட்டினில் போலி வாழ்க்கை வாழும் செல்வர்களும் அதற்குப் பயப்படுகிறார்கள், இருந்தும் வந்து அணைத்து அதை நேசிக்கிறார்கள். இவற்றையெல்லாம் நோக்கி நாங்கள் வியப்புடனும் வணக்கத்துடனும் உன் முன் நிற்கிறோம். ஆனால் உன் அருமையான இனிய நாடோடிச் செயல் மனதைக் கவர்கின்றதே; மகிழ்வைப் பயக்கின்றதே.

எங்கள் ஆத்மாவின் தயக்கங்களைக் கண்காணிக்கும் ஓ மகிமையுற்ற காவலாளனே! நீ எப்படிச் சர்வதாமண்ணிற்குரிய இயல்பைப் படைத்த மானிடனை எழுப்புகிறாய்! உன் பெயரைச் சொல்லிக்கொண்டு, உன் பின்னோடு நடந்து வீரம் செறிந்த அம் மானிட அன்பு அழைக்கும் பாதையில் சென்று, சித்தியைக் காணச் செல்லும் நாங்கள் ஐயோ, என்ன பலவீன மானவர்கள், குன்றிய நம்பிக்கையாளர்கள்! அவ்வன்போ, அத்தீர சக்தியோ, உனது சக்தியோ, நம் சித்தார்த்தர் போன பாதையே செல்கிறது; அரசர்கள் முத்தமிட்ட பாதம், சித்தார்த்தர் பாதம்; அபலைகளான பெண்ணுலகம் முத்தமிட்ட பாதம்; எல்லா எளிய ஜந்துக்களும், பெரிய நாக சர்ப்பங்கள் சீறி வரும் வாழ்க்கையில் தனிமையான கோரமான காடுகளில் வேட்டையாடப் பட்டுத் தவிக்கும் எளிய பிராணிகள் யாவும் முத்தமிடும் பாதங்கள், புத்தரின் பாதங்கள், உன் பாதங்களுமே!

உலகம் மிருகத்தனம் பெற்ற வீரரைப் பணிந்து வந்தது; ஹிட்லர், முஸ்ஸோலினி, அல்லது வியாபாரக் குழாமின் தலைவன், சேம்பர்லின் போன்றவன், இவர்கள் உலகக்காப்பாளர்களாயிருந்த

னர். ஆனால் இதோ பார்! யாரிது சுழல் காற்றையும் கடிவாளம் போட்டுக் குதிரைச் சவாரி செய்கிறான், யாவற்றையும் ஆளுகிறான்; உலகமதங்களும், சமயங்களும் இணைந்து சேர்ந்து வாத்தியம் வாசித்துக் கோஷ்டியாய் அவனைத் தொடர்கின்றன; அவனோடு கடினமான உலக ரஸ்தாக்களில் மிக்க ஏழைகளுக்குத் துணையாய்த் துணிவிரித்துப் படுத்திருக்கிறான்; கொஞ்சமும் இரக்கமற்ற கோடி ராணுவப்படைகள் கர்வமாய்ச் செல்லும் விரிந்த பாதைகள் அவை! அதைப் பார்! சேனைகள் அவன் பக்கம், அவனைச்சுற்றி, சாதிக் கொள்கை வெறியேறிக் கோஷித்து நடக்கின்றன; பழைய ஸ்வப்னங்களிலீடுபட்டுச் சாந்த சுபாவ மணிந்து வாழ்க்கை நடத்தும் நம் சாதியாரின் புதிதாய்க் கண்டுபிடித்த ஐக்கியத்தைக் கொலை செய்வது அச்சேனைகளின் விருப்பமே. அம்மகான் சொல் நமக்கு எட்டுகிறது, அது இக்கொடிய சேனைகளுடன் வெகு நாகரிகமாய்ப் போராடுகிறது. "நம் லக்ஷியம், நம் தூது, நம்மியக்கம், நம் கடமை சரித்திர தேவதை தரும் போர்க்கத்திகளை ஏர்களாய் அடித்து நீட்டுவது; என் ஜனங்களின் சர்க்காக்கள் சுழன்று வரும்போது அவற்றின்மேல் திவ்ய புஷ்பங்கள் உண்டாகும். அவை மனிதச் செயல்கள். அவை தேவ கீதம் ஒலிக்கும் செய்கைகள். அவை நமக்குப் போதும், ராணுவ கர்வம் வேண்டோம். ஆதி ராச்சியம் வேண்டோம்'' என்று, நிரந்தரமான தெளிவு வருகிறது. ஓ வெண்மதியே, நீ அப்படியே உன் ஊடுருவிச் செல்லும் பார்வையை எங்களிடம் செலுத்தினாயே? எங்கே நீ மறைந்தாய்? ஐயோ, நீ மாய்வாயோ? இது நம் கதியோ?

---

ஒரு சமயம் உருளி என்ற சிறிய கிராமத்தில் காந்திஜி வசித்துவந்தார். ஓர் இரவு ஒரு குடியானவன் குடிசைக்குள் திருடர்கள் புகுந்து அவனை அடித்து அவனுடைய சொற்பப் பொருளை அபகரித்துச் சென்றனர். மறுமாலை, கொள்ளைபோன குடியானவன் காந்திஜி முன்பு அழைத்து வரப்பட்டான். காந்தியினிடம் முறையிட்டனர்.

இந்தத் திருட்டு விஷயத்தில் மூன்று உபாயங்களைக் கையாளலாம் என்றார் காந்திஜி. எல்லோரும் வழக்கமாகக் கையாளும் முறை போலீசாருக்குத் தெரிவிப்பது. அப்படிச்செய்வதினால் அநேகமாகப் போலீசார் லஞ்சப் பேய்க்கு உள்ளாக மற்றுமொரு வசதி அளிப்பதாக முடிகிறது; களவுபோனவனுக்குப் பொருள் கிடைப்பது என்னவோ துர்லபம். இரண்டாவது வழிதான் பெரும்பாலும் எளிய கிராம வாசிகள் கையாளும் முறை. அதாவது ஒன்றும் செய்யாமல் வாளா விருந்துவிடுவது. இது முற்றிலும் வெறுக்கத் தக்கது. பேடித் தனத்தினால் கையாளப்படும் முறையே இத. பேடித் தனம் உள்ளளவும் குற்றங்கள் கொழுந்து விட்டெரியத்தான் செய்யும்.

திருடர்களைத்தண்டிக்கத் தாம்கையாளும் வழி "சத்தியாகிரஹம் அல்லது அஹிம்சை'' என்றார். குழுமியிருந்த குடியானவர்களுக்குச் சொன்னார்: "மூன்றாவதான இந்த அஹிம்சா முறைப்படி திருடர்களையும் குற்றவாளிகளையும் உங்கள் சகோதர சகோதரிகளாகப் பாவித்து, 'குற்றம்' என்பது ஒரு வியாதி என்று கருதி அவ்வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள் அதனின்று குணமடைய நாம் முயற்சிக்கவேண்டும். குற்றவாளிக்கு ஒரு தொழில் கற்பித்து, தன்னுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளப் போதிய வசதிஅளிக்கவேண்டும்'' என்றார்.

"திருடனோ, அல்லது குற்றவாளியோ, உங்களைப்போல் அல்லாது ஓர் தனி இனத்தவன் அல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும். உண்மையில் உங்கள் உள்ளங்களை நீங்களே ஆராய்ந்தால், உங்களுக்கும் திருடனுக்கும் உள்ள தாரதம்யம் வெகு அற்பம் (One of degree) என்பதை உணர்வீர்கள்'' என்றார்.

தகாத முறையிலோ அல்லது பிறரை ஏமாற்றியோ மக்களைச்சூறையாடிப், பணம் சம்பாதிக்கும் தனிகன், பையிலுள்ளதை அபேஸ் செய்யும் அல்லது வீட்டினுள் புகுந்து கொள்ளை அடிக்கும் திருடனைக் காட்டிலும் எவ்வகையிலும் குறைந்த குற்றஞ்செய்தவனல்ல. ஆனால், தனிகன் கண்யம் என்ற போர்வையில் புகுந்து சட்டத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறான்.

நியாயப்படி பார்க்கப்போனால், தன்னுடைய தேவைக்கு மீகுந்த பொருள் குவிப்பதெல்லாம் திருட்டு என்றுதான் சொல்ல வேண்டும். உறுதியான சமூக நியாயம் நிலைத்து, பொருள் கட்டுப்படுத்தப்பட்டால், திருட ஹேது எதுவும் ஏற்படாது, எனவே திருடர்களும் இருக்கமாட்டார்கள்'' என்றார் காந்திஜி.




ராமய்யா

"சமூகங்களுடைய முன் நடையில் மூன்று பருவங்கள் உள்ளன; முதல் பருவத்தில் வனவாழ்க்கையின் நீதியே காணப்படும், கொடுமையும் சுயநலமுமே உயர்ந்தோங்கும். இரண்டாவது பருவத்தில் நீதி மார்க்க ஒழுக்கமும், சட்ட அனுசரணையும், நியாய ஸ்தலங்களும், போலீஸ்காரர்களும், சிறைச்சாலைகளும் காணப்படும். மூன்ருவது பருவத்தில் அஹிம்சையும் சுயநலமற்ற திருஷ்டியும் செழித்தோங்குவதுடன், அன்பும் நீதியும் ஒன்றுபட்ட தன்மையுடையதாய் இருக்கும். நாகரிகம் பெருகவே மானிட வர்க்கத்தின் கருத்து மூன்ருவது பருவத்தை நோக்கியே செல்லும். ஆண் மக்களும் பெண் மக்களும் பலாத்காரம் என்கிற சக்தியில் நம்பிக்கையை ஒழித்து, இராஜாதிகாரத்தால் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய நலங்களை இச்சிக்காமல், தத்தம் வீடுகள், தத்தம் பொருள்கள், தத்தம் சுயநலங்கள், அனைத்தையும் வீசி எறிந்து, பிரபஞ்சத்தில் மற்ற அனைவரும் சாந்தமாக வாழ வேண்டும் என்ற கருத்துடன் தத்தம் உயிர்களையே பறிகொடுக்கத் தயாராயிருக்கும் பக்ஷத்தில் மூன்ருவது பருவத்தை அதி சீக்கிரம் கைப்பற்றலாம். இத்தகைய கருத்துக்களை உடையவர் காந்தியடிகள். அவருடைய தத்துவங்களில் ஈடுபடாத அஞ்ஞானிகள் உலகத்தினின்று மறைந்து அவர்களுடைய பெயர்களே மறந்து போன பின்னரும், காந்தியடிகளுடைய பெயர் செழிப்புற்று ஓங்கும். தற்காலத்தில் அவருடைய லக்ஷணங்கள் பூர்த்தியடைவது கஷ்டமாயிருந்தாலும், நாளடைவில் பூர்த்தியாகும் என்பது திண்ணம். அவரைப் போன்ற மஹாத்மாவின் உடலைச் சித்திரவதை செய்தாலும், அதனுள் ஒளிக்கும் ஜோதியானது, சத்தியத்திலிருந்தும் அன்பிலிருந்தும் ஓங்கும் பிரகாசத்தைக் கவர்ந்ததால் அதை அணைக்க முடியாது. வருங்காலத்தில் தம்முடைய அன்பர்களுக்கு ஜீவன்கொடுக்கும் பொருட்டு, தம்முடைய உயிரையே அவர் உதறி எறிந்து விடுவார். அதன் பின் உலகம் முழுதும் அவரை நினைத்துக் கைகூப்பித் தொழுது, அவர் அனுஷ்டித்த லக்ஷணங்களுக்கு உரிய பருவத்துக்கு வெகு காலம் முந்தியே உதித்த அவதார புருஷன் என்றும், இருளடைந்து திருந்தாத பிரபஞ்சத்தில் சத்தியம் என்ற ஜோதியைக் கண்டு களித்த மஹா புருஷனென்றும் வாழ்த்துவார்கள்."

மேற்கூறிய வசனங்கள் தத்வஞான பேராசிரியர் டாக்டர் ராதாகிருஷ்ணன், 1942ஆம் வருஷத்தில் கல்கத்தா சர்வகலா சாலையில் சொற்பொழிந்த கமலா பிரசங்கங்களின் அந்தியில் கூறியவையாகும். இந்த வாக்குகள் அப் பெரியாரிடமிருந்து வந்தமையால் ஞான திருஷ்டி என்கிற சக்தியுடன் வந்ததுபோலவே காணப்படுகின்றன.

காந்தியடிகள் ஜீவன் முக்தி அடைந்து பத்துத் தினங்களாயின. ஒவ்வொரு தினத்திலும் பல பெரியோர்கள் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் வெளியிட்டிருக்கின்றனர். அநுதாபம் கூறிய அனேகர் காந்தியடிகள் அநுஷ்டித்த சத்திய மார்க்கத்தில் அன்பை நிலைநிறுத்தும் பொருட்டுத் தம் உயிரை யிழக்க ஒவ்வொரு நிமிஷத்திலும் தயாராயிருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். உயிரை இழந்ததற்கு ஒரு தினம் முந்திகூட அவர் எழுதிய ஒரு கடிதத்தில், மரணம் என்பது பலவித அவஸ்தைகளிலிருந்து விடுதலையே என்றும், அதைக் குறித்துத் துக்கிப்பது அநுசிதம் என்றும் கூறியிருக்கிறார். ஆகவே காந்தியடிகளின் ஜீவித லக்ஷணங்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் இனி அவைகளை நிலைநிறுத்துவதில் சாசுவதமான மார்க்கங்களைக் கைப்பற்ற வேண்டுமே யல்லாது, கேவலம் புலம்பல் என்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

"காவேரி" பத்திரிகையில் அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களைக் கட்டுரைகளாக எழுதி, முதல் மலரிலிருந்து நானும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறேன். சற்றேறக்குறைய எல்லாக் கட்டுரைகளும் ஹாஸ்யப் பொருத்தமாகவே இருந்து வருகின்றன. சங்கீதம், நாட்டியம், நாடகம், பேசும் படம், சமூக முன்னேற்றம், ஜநநாயக விவஹாரம் இதுபோன்ற விஷயங்களைக் குறித்து அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களைச் சுருக்கென்று உரைக்கும்படி சொல்ல வேண்டியவைகளைச் சிரிப்பு வரும்படி பரிகாசமாகவே எழுதியிருக்கிறேன். ஆனால் இந்தக் கட்டுரையில் அப்படி யெழுதச் சாத்தியப்படவில்லை. மனவேதனையால் கல்பனை சிதறுகிறது. ஆகவே இச்சமயத்தில் எங்களுக்குத் தோன்றும் யோசனைகளைப் பயபக்தியாக எழுதியனுப்ப முயற்சிக்கிறேன். என் முயற்சியால் சற்றேனும் பயன் உண்டாயின், இந்துதேச மக்களில் ஒருவனாக நானும் காந்தியடிகளுடைய லக்ஷணங்களுக்குச் செய்த ஒரு சிறிய தொண்டாகக் காணப்படும்.

மகாத்மாஜியைக் கொன்றவன் ஒரு ஹிந்துவல்லவா? பழிக்குப்பழி வாங்கலாகாது, தீமை செய்வோர்க்கும் நன்மையே செய்ய வேண்டும், எத்தகைய கொடிய பாதகங்களுக்கு இரையாயினும் ஹிந்துக்கள் சத்திய மார்க்கத்தையும், அஹிம்சா தர்மத்தையுமே கைப்பற்ற வேண்டும் என்று சொன்னதற்காகவல்லவோ அவர் தாக்கப்பட்டார். கொலையாளியின் கருத்து என்ன? மகாத்மாஜியின் கொள்கைகளைக் கைப்பற்றினால் இந்துக்கள் நசித்துப் போய் விடுவார்களென்பதும் இந்துக்களுடைய மத தர்மம் க்ஷீணித்துப் போய்விடு மென்பது மல்லவா? இத்தகைய மனோபாவத்தையுடைய வன் மானிடமேருவைப்போன்ற மகாத்மாஜியையே கொலை செய்வதற்கும் துணிந்தானல்லவா? ஆகவே, தற்சமயம் நமக்கு விளைந்திருக்கும் பெரிய ஆபத்து என்னவென்றால், இன்றும் பலபேரால் ஆமோதிக்கப்படும் அந்தக் கொலைகாரனுடைய போலி இந்துமதக் கொள்கையே! தேச நாசத்துக்கும், படு கொலைக்கும் இடங்கொடுக்கும் மத பேதம், ஜாதி பேதம், அவைகளைப் போற்றும் ஆசாரங்கள், சாத்திரக் குப்பைகள், சங்கங்கள், சபைகள், மடங்கள், ஆலயங்கள், அனுஷ்டானங்கள், எல்லாம் நமக்கு இனி சத்துருக்களே. இவைகளை ஒதுக்கிவைத்து இந்து சமூகத்தைச் சீர் திருத்தி, சமத்துவம், சத்தியம், அஹிம்சை இம்மூன்று தர்மங்களை மட்டுமே போஷித்து, நவீன இந்து சம்பிரதாயங்களைக் கைப்பற்றி, காந்தியடிகளுடைய புனிதமான லக்ஷணங்களைப் பிரசுரித்து, நமது தேசத்தை முன்னணிக்குக் கொண்டு வருவது நமது கடமையாகும்.

பிரும்மா, விஷ்ணு, சிவன் இம்மூவரும் எப்படி சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் என்கிற காரியங்களுக்கு மூலாதாரமாயிருக்கிறார்களோ, அப்படியே ஜனநாயக சமூகத்திலும், பிரபுத்துவம் (அரசாங்கம்) என்பது சம்ஹாரம் என்கிற வேலை

யைத் தன்னுடைய பிரத்தியேக சாம்ராஜ்யமாக அங்கீகரித்துக்கொண்டிருக்கிறது. மகாத்மாஜியின் வாழ்க்கைக்கும் தேசத்தின் க்ஷேமத்துக்கும் தீங்கு விளைவித்த துராத்மாக்களைச் சம்ஹாரம் செய்வது பிரபுத்துவத்தின் கடமையேயாகும். பழிக்குப் பழி வாங்குவதோ, அல்லது சீர்திருத்திப் பரிபாலனம் செய்வதோ, அரசாங்கத்தின் காரியமே யல்லாது, பொதுமக்களுடைய அலுவலல்ல. ஆகவே பிரதம மந்திரி நேருஜியும், சர்தார் படேலும் உபதேசித்ததுபோல், நாமெல்லோரும் இச் சந்தர்ப்பத்தில் பழி, பாவம் இவ்விரண்டையும்பற்றிச் சிந்திக்காமல், மகாத்மாஜியின் மரணத்தையொத்த கோர சம்பவம் இனி சம்பவிக்காமலிருக்கும்பொருட்டும், அவருடைய தத்துவங்களை நிலை நிறுத்தி, அவைகள் பெருகி நம்முடைய வாழ்க்கை லக்ஷணங்கள் புனிதமாகும் பொருட்டும், காந்தியடிகளின் ஞாபகச் சின்னமாகத் தேசமெங்குமுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு மந்திரம் ஸ்தாபிதப்படுத்தி வருங்காலத்து வம்சங்களுக்குத் தர்ம நிர்த்தாரணம் செய்யவேண்டும். இதுவும் நமது கடமையாகும்.

மூன்று தினங்களாக நானும் அம்மாஞ்சியும் மனக்கோட்டை கட்டி இன்று முடித்துவிட்டோம். எங்களுடைய கல்பனையால் கிடைத்த ஞாபகச் சின்னத்துக்கு, "காந்திமந்திரம்" எனப் பெயரிட்டிருக்கிறோம். தென் நாட்டிலும் வட நாட்டிலும் இந்தப் பெயருக்கு ஒரே அர்த்தம். தமிழில் "மந்திரம் என்றால் வீடு, அரண்மனை, தேவர் கோயில், மண்டபம், உறைவிடம், தயா விருத்தி பதினுன்கினுள் பிறர்க்கு வசிக்க இடமளிக்கும் அறச்செயல். ஹிந்தியிலும் சற்றேறக்குறைய இதே அர்த்தம் தான். ஆதலால் இந்தியா முழுதிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் (கிராமங்களிலும்கூட) பெரியதோ, சிறியதோ, ஒரு காந்தி மந்திரம் ஸ்தாபிதமாக வேண்டும் என்பது எங்கள் கருத்து. எங்கள் தோற்றத்தில் ஜொலிக்கும் காந்தி மந்திரம் எவ்விதமானது என்று சொல்லுகிறோம், கவனியுங்கள்.

பட்டணத்தில் ஜனசங்கை அதிகமாயில்லாத இடம். முற்றிலும் வட்டமான இடம். அதைச்சுற்றி எட்டடி மதில் சுவர். சிற்பம் இந்து முஸ்லீம் இரு சம்பிரதாயத்தையும் வழுவினதாக, மத்தியில் கோபுரமும், நான்கு எல்லைகளில் நான்கு கோரி சிகரமும் உள்ளன. உள்ளே செல்ல வழி ஒன்றுதான். மதில் சுவரின் ஆரம்பத்திலேயே பாதரக்ஷைகளைக் களைந்து, கால்களைச் சுத்திசெய்யத் தண்ணீர் வசதி இருக்கிறது. பாதை முழுதும் கடப்பைக் கற்களால் கற்பாவு செய்யப் பட்டிருக்கிறது. பதினைந்து அடி தூரம் நடந்தபின் அழகிய படிக்கட்டுகள் காணப்படுகின்றன. ஏறும் படிகளைக் கணக்கிட்டோம், மொத்தம் எழுபத்தொன்பது. உப்பு சத்தியாக்கிரஹம் செய்தபோது காந்தியடிகளுடன் சென்ற சீடர்களின் எண்ணிக்கை எழுபத்தொன்பதேயாம்; அதுவுமன்றி அவர் உயிர் துறந்ததும் எழுபத்தொன்பதாம் வயதில். ஆகவே காந்தி மந்திரம் ஒவ்வொன்றுக்கும் 79 படிக்கட்டுகள் வைத்தணிக்க வேண்டும் என்பதாக அறிந்தோம். எவ்வித வெள்ளத்திலும், மழையிலும் மந்திரத்தினுட் பாகத்தில் சுப்பிரமாக இருக்கவேண்டுமாதலால் மந்திரத்தின் ஸ்தாபனம் சுமார் நாற்பது அடியிலிருந்து அறுபது அடி உயரம் வரையில் (basement height) இருக்க வேண்டும் என்பதையும் அறிந்தோம்.

பாதை கற்பாவு செய்திருந்ததாக வன்றோ சொன்னோம்? பாக்கி இடங்களெல்லாம் பச்சென்று செழிப்பான புல் முளைத்த இடம். கல், முள், செடி, இலை காகிதம் ஒன்றும் கிடையாது. காந்தியடிகளுக்கு எதைப் பார்த்தாலும் மாசு மறுவற்றல்லவோ இருக்கவேண்டும். அவருடைய மனோபீஷ்டத்துக்கிணங்கே கட்டடமும் பால் வடிந்த வெண்மை நிலத்தோடமைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தோம். வட்டமான ஒரே ஒரு பெரிய அறைதான். குறுக்களவு சுமார் ஐம்பது அடியிருக்கும். மத்தியில் ஒரு பீடத்தின் மேல் மகாத்மாஜி பிரார்த்தனைக் கூட்டத்துக்குமுன் நின்றது போல் கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்கிறார். அவருடைய உருவச்சிலை வெண்மையான சலவைக்கல்லால் செய்யப் பட்டிருந்தது. வடக்குத் திசையை நோக்கி நின்றுகொண்டிருக்கிறார்; அவருடைய கண்ணும் கருத்

தும் வட இந்திய மக்களையே கவனித்துக் கொண்டிருந்தன.

சுற்றிலும் சுவரைப் பார்த்தோம். ஒவ்வொரு பகுதியிலும் கல்லில் செதுக்கப்பட்ட ஒரு மதச் சின்னம் பதிக்கப் பட்டிருந்தது. ஹிந்து மதத்துக்குரிய சங்கு, சக்கரம், திரிசூலம் இவைகளும், மகம்மதியருக்குரிய அரைச் சந்திரனும் நக்ஷத்திரமும், கிறிஸ்தவருக்குரிய சிலுவையும், பௌத்த மதத்துக்குரிய பத்ம தளமும், பார்ஸிகளுக்குவந்த அக்னி குண்டமும், இப்படி அமைக்கப்பட்டிருந்தன. மந்திரத்தினகத்து வேறு ஒன்றும் காணப்படவில்லை. நிசப்தம், நிரலங்காரம், இவைதான்.

வெளிப்புறத்தில் இரண்டு கட்டளைச் சட்டங்கள் ஸ்தாபனம் செய்திருந்தன. ஒன்றில் மகாத்மாஜியின் முக்கிய ஜீவித தத்துவங்களைக் கண்டோம். மற்றொன்றில் மந்திரத்தினுள்ளே பிரவேசிக்கும் மக்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகள் பதிப்பிட்டிருந்தன. அவையாவன: "இது ஒரு தேவாலயமல்ல; பிரார்த்தனை மண்டபமே. எங்கும் நிறைந்த பிரத்தியக்ஷ தெய்வத்தைக் குறித்துப் பிரார்த்தனை செய்யும் பல மதத்தினர்க்கும், பல சமயத்தினருக்கும் இது பொது ஸ்தலம். மானிட வர்க்கத்தினர் தெய்வத்துக்கு அர்ப்பணஞ்செய்யும் வஸ்துக்களில் அவர் அங்கீகரிப்பது பிரார்த்தனையொன்றேயாதலால், வேறு விதமான சமர்ப்பணைகள் ஒன்றும் மந்திரத்தில் செலுத்தலாகாது. எல்லா மதத்தினருக்கும் சம்மதமான சாம்பிராணி ஊதுவத்தி தூபமே குறிப்பிட்ட இடத்தில் சமர்ப்பிக்கலாம். பிரார்த்தனை செய்பவர்கள் மனதுக்குள்ளேயே சொல்லுவதைச் சொல்லிக்கொள்ளவேண்டும். அடுத்திருக்கும் வேறு மதத்தினருக்கு இம்சை செய்யலாகாது. இந்த மந்திரத்தில் கடவுள் பிதாவாகவும், பிரார்த்தனை செய்பவர்கள் குழந்தைகளாகவும் இருப்பதால், மந்தியில் பூசாரிகளே கிடையாது".

மந்திரத்துக்கு அடுத்தாற்போல் காலியிடம் தாராளமாயிருக்கிறது. மந்திரத்தின் செல்வாக்கு அதிகரித்தால் அந்த விடத்தில் சத்காலக்ஷேபங்களுக்காகப் பெரிய சாலையொன்று கட்டலாம்; அடுத்தாற்போல் காந்திஜியின் நூல்களையும் மற்றுமுள்ள அரிய நூல்களையும் சேமித்துப் புத்தக சங்கிரகம் ஏற்படுத்தலாம்; அவைகளைப் பரிபாலனம் செய்யும் சங்கத்தினர் காந்திஜியினுடைய "நிர்மாணத் திட்டம்" என்பதையும், ஹரிஜன் சம்ரக்ஷணை, சர்க்கா சங்கம் இவைகளையும் பெருக்கிடலாம். செல்வாக்குக்குத் தகுந்த மாதிரி ஒவ்வொரு ஊரிலும் மகாத்மாஜியின் கருத்துக்களையும், தத்துவங்களையும் பிரசாரம் செய்யலாம்.

தேசம் முழுவதிலும் காந்திஜியின் ஞாபகச் சின்னமாக ஸ்தாபனங்கள் ஏற்படப்போகின்றன. பலவிடங்களில் அவருடைய உருவச் சிலையை நிறுத்துவதாகவும் சொல்லுகிறார்கள். அம்மாஞ்சியும் நானும் இப்படிச் செய்வதால் ஏற்படக்கூடிய குற்றங்குறைகளைப் பற்றித்தான் மிகவும் கவலைப்படுகிறோம். உருவச் சிலைகளை வெளிப்படையான இடங்களில் நிலை நிறுத்துவது மேல் நாட்டாருடைய சம்பிரதாயம். ஸ்தூல சக்தி மாத்திரமே வகித்த பெரியோர்களுக்கு இந்தச் சம்பிரதாயம் பொருந்தினாலும் பொருந்தும். ஆனால் சூக்ஷ்ம சக்தி, ஆத்ம சக்தி பரிபூரணமாக வாய்ந்த மஹாத்மாவுக்கு இது பொருத்தமல்ல. காந்தியடிகள் செய்த தவத்தால் ஒன்பது அங்குலத்துக்கு அதிகமாயுள்ள அவருடைய உருவச்சிலைகள் எல்லாவற்றிலும் அவருடைய ஆத்ம சக்தியும் மூர்த்திகரமும் குடிகொண்டுவிடும். ஆதலால் உயிரோடிருந்தபோது அவருக்கு நாம் எத்தகைய போஷாக்குகள் செய்யத் தயாராயிருந்தோமோ அவையெல்லாம் அவருடைய சிலைகளுக்கும் செய்யவேண்டும். வெட்ட வெளியில் சிலையை நிற்கவைத்தால் வெயிலிலும், மழையிலும், பேய்க்காற்றிலும் அது அடிபட்டுக்கிடக்கும்; காக்கை, கழுகு அதின் மீது எச்சமிடும்; அசம்பாவிதமாக ஏதேனும் நேர்ந்தாலும் நேரலாம். ஆகவே இவைகளையெல்லாம் அனுசரித்து, எப்போதும் சாசுவதமாகவும், பொது மக்களுக்கு விவேகம், மனச்சாந்தி, சாத்வீகம் எல்லாம் ஏற்படும் பொருட்டும் ஞாபகச் சின்னங்களை ஸ்தாபிதப் படுத்த வேண்டும் என்று நாமெல்லோரும் உழைக்கவேண்டும்.

# காஷ்மீர்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தாகல் செய்த காஷ்மீரப் பிரச்னையை ஒத்திப் போட வேண்டுமென்று கேட்டுவிட்டு இந்தியப் பிரதிநிதிகள் ஊர் திரும்புகிறார்கள். கொள்ளைக் கூட்டத்தாருக்கு உடந்தையாயிருந்து காஷ்மீர் போரில் பாகிஸ்தான் கலந்து கொள்வதை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று கோரிய விண்ணப்பம் ஒரு மாதம் விவாதிக்கப்பட்டு இன்று அநேகமாக மனுதாரரே வாபஸ் பெறும் நிலைக்கு வந்துவிட்டது.

அங்கு நடந்த விவாதத்தில் பாகிஸ்தான் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க இஷ்டமில்லாதவர்கள் போல் பெரிய வல்லரசுகள் காட்டிக் கொண்டதோடு, பாகிஸ்தான் பிரதிநிதி ஸர். ஜாபருல்லாகான் கூறும் கட்சியை ஆதரித்தே அநேகமாக அவர்கள் பேச்சு அமைந்திருந்தது. நியாயத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் அங்கு எப் பேச்சும் அமையவில்லை. இதில் என்ன மர்மம் இருக்கிறது என்பதை ஆராயவேண்டும்.

காஷ்மீர் போர் ஆரம்பமாகு முன் ஹிந்து—முஸ்லீம் பிரச்னை காஷ்மீர் பிரதேசத்தில் எழவில்லை. வட இந்தியா முழுமையும் கொந்தளித்து லக்ஷக்கணக்கான மக்கள் உயிர் நீத்து, எஞ்சியுள்ளவர்கள் ஊரை விட்டு ஓடி அலைய நேரிட்ட பொழுதும் பெருவாரியான முஸ்லீம்கள் அடங்கிய காஷ்மீர் பிரதேசத்தில், யாதொரு கலவரங்களும் கிடையாது. அங்குள்ள பிரச்னை பாகிஸ்தானுடன் சேருவதா அல்லது இந்தியாவுடன் சேருவதா என்பதே. ஆனால் அதன் இந்து மஹாராஜா இந்தியாவுடன்தான் சேருவார் என்ற எண்ணம்மட்டும் பாகிஸ்தான் பிரமுகர்களுக்கு இருந்து வந்தது.

இப்படியிருக்கையில் திடீரென அக்டோபர் மாத 23உ 50,000 நபர்கொண்ட ஓர் ஆப்கன் கொள்ளைக் கூட்டம் நவீன ஆயுதங்கள் தாங்கி, பாகிஸ்தான் வழியே காஷ்மீருக்குள் புகுந்து அங்குள்ள மக்களைச் சூறையாட ஆரம்பித்தது. கொள்ளைக்கூட்டம் தலைநகரைத் தாக்க ஆரம்பித்துவிட்டது. பாகிஸ்தான் படையினரும் அதில் கலந்துகொண்டிருப்பதும், பாகிஸ்தான் இக்கூட்டத்தாருக்குப்பூரண உதவி அளித்து வருவதும் புலனாயிற்று.

இத்தறுவாயில் மஹாராஜா இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன் உதவியை நாடினார். இந்தியப் படைகள் வெற்றிமேல் வெற்றிபெற்று, நகரங்களையும், கிராமங்களையும் கொள்ளைக்கூட்டத்தாரின் பிடியிலிருந்து விடுவித்தார்கள்.

பாகிஸ்தான் இதை மறுத்ததுடன் நில்லாது காஷ்மீரில் முஸ்லிம்கள் அல்லலுறுவதைக் காணச் சகியாது, மலைப் பிரதேசத்திலுள்ள ஆப்கானியர்கள் காஷ்மீரிலுள்ள தங்கள் சகோதரர்களின் உதவிக்குச் செல்லுகிறார்கள் என்றும், அதைத் தடுக்க, தங்களால் இயலாது என்றும் கூறி, கொப்பல்ஸ் பிரசாரத்தில் இறங்கியது. காஷ்மீரைத் திடுக்கிடும் தாக்குதலினால் கைப்பற்றித் தேசத்தைப் பாகிஸ்தானுடன் இணைத்துக் கொண்டு விடலாம் என்ற எண்ணம் இந்தியத் துருப்புகளின் எதிர்பாரா உதவியினால் முறிந்து போகவே, பாகிஸ்தான் பிரதமர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு இச் சண்டையை விட்டுவிடுவது நலம் என்று கூறினார்.

ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபைக்கு மனு செய்துகொண்டது இந்தியாதான். அங்கு இன்று விவாதிக்கப்படும் பிரச்னையில் பாகிஸ்தான் பிரதமர் காட்டிய வழியே உசிதமானது என்பதுபோல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இந்தியப் பிரதிநிதி கூறுவதெல்லாம் சபையில் ஏறவில்லை.

இதன் மர்மம் என்ன? லார்ட் மவுண்ட்பேடனும், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளும், மறை முகமாகப் போதித்ததைக் கொண்டு பாகிஸ்தான் பிரதமர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதில் தலையிட வேண்டுமென்று பேசியபொழுது இந்தியா கவர்ன்மெண்டார் இது விசித்திர வாதமென்றார்கள். தோல்வி மனப்பான்மை என்று நினைத்தார்கள். ஆனால் ஒருமாதம் கழித்து இந்தியாவே அந்த ஸ்தாபனத்திற்கு மனு செய்துகொண்டதன் விளைவு இன்று நாம் வாபஸ் பெறும் நிலையிலிருக்கிறோம்.

பொய் மெய்யை வெல்லல முடியும் என்பது ஐ. நா, சபையில் நிதர்சனமாகக் காட்டப்படுகிறது. ஆனால், இதற்கான சூழ்நிலையும் அங்கு இருக்கிறது என்பதை நாம்

மறக்கலாகாது. பாகிஸ்தான் ராஜ்யம் பிரிட்டிஷ்சூழ்ச்சியினால் ஆனது என்பதும், ஜின்னா கோஷ்டியின் வகுப்பு மனப்பான்மையும் பிரிட்டிஷ் சூழ்ச்சியின் விளைவு என்பதும் உலகமறிந்த விஷயம். ஆனால், அமெரிக்காவின் நடு நிலைமையில் நாம் நம்பிக்கை வைத்து, மோசம் போனோம். ருஷ்யா என்ற பூச்சாண்டியைக் காட்டி, ஐக்கிய நாடுகளின் ஆதரவைப் பெற்று இருக்கிறது பாகிஸ்தான் என்று பல ஆதாரங்கள் மூலமாக அறிகிறோம். மேலும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் அமெரிக்கா, இங்கிலாந்து இந்நாடுகளுக்கெல்லாம் அதிருப்தி என்று அறிகிறோம்.

லார்ட் மவுண்ட்பேடன் பிரிட்டிஷ் சூத்திரதாரியாக இந்திய கவர்மெண்டில் இருந்து நேருவுக்கு யோசனைகள் கூறுவது, இந்தியர்வை ஆழப் புதைக்கச் சதி செய்வதாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு மனு செய்வதில் காந்திஜிக்குக் கூட திருப்தியில்லை என்று அறிகிறோம்.

ஐக்கிய நாடுகள் சபை என்ன சொல்லுகிறது? கொள்ளைக் கூட்டத்தாருக்கும் திருப்திகரமான அரசாங்கம் அமைத்தால் தானே சண்டையைநிறுத்தி அமைதி நிலவச் செய்ய முடியும். இந்தியத் துருப்புகளும் உடனே வாபஸ் செய்யவேண்டும். மஹாராஜாவிடமிருந்து அதிகாரத்தை நடு நிலைமை வகிக்கும் தற்காலீக அரசாங்கம் ஒன்றினிடத்தில் ஒப்படைத்துப் பிறகுதான் மக்கள் வாக்கை அறிய முற்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறது. பாகிஸ்தான் பிரதமர் சென்ற நவம்பர் மாதத்தில் சொன்ன கட்சியை இன்று ஐ. நா. சபையினர் கூறுகின்றனர்.

ருஷ்யாவுக்கும், சைனாவுக்கும் அருகாமையிலிருக்கும் காரணத்தினால் காஷ்மீர் பிரதேசம் ஓர் முக்யத்வம் வாய்ந்ததாக இருக்கிறது. பாகிஸ்தான் என்றும் பிரிட்டிஷ் பிடியில் இருக்கும் என்றும் ருஷ்யாவுடன் உறவு கொள்ள அது ஆசைப்படாதென்றும், ஆனால் இந்தியா, ஆசியா கண்டத்தில் பெரிய வல்லரசாகத் திகழலாம் என்றும் நம்பப்படுகிறது. ஆசியாவில் பெருத்த பலங்கொண்ட நாடாக எதுவும் இருக்கலாகாது என்பதுதான் மேற்கு வல்லரசுகளின் எண்ணம். எனவேதான் இந்தியாவுக்கு எதிரிடையாகப் பாகிஸ்தான். இந்தியாவைப் பலவீனப் படுத்தும் வகையில், பாகிஸ்தானைப் பலப்படுத்தும் வகையில் காஷ்மீரையும் அவர்களிடம் சேர்த்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு சூழ்ச்சி நடந்துவருகிறது. ஆசியாவில் உள்ள நாடுகளில் இந்தியாவில்தான் தேசீயம் தலை கொழுத்து நிற்கின்றது. அந்நாடுதான் சிறந்த வல்லரசாகத் திகழக்கூடும். ஆசியாவையே அது ஒன்று திரட்டக் கூடும்.


ஐரோப்பா, அமெரிக்கா இவைகளுக்கு இது பிடிக்காத விஷயம். ருஷ்யா இந்தியாவுடன் உறவாடலாம். காஷ்மீரிலுள்ள ஜில்கிட் என்ற பிரதேச மூலம் ருஷ்யாவுக்குச் செல்லப் பாதையுள்ளது. அதையும் பாகிஸ்தான் பெற்றுவிட்டால் இந்தியா வாலாட்ட முடியாது. சமுத்திரத்தில் பிரிட்டனுக்குள்ள சக்தி இந்தியாவுக்கு என்றும் கிடைக்காது. எனவே இந்தியாவை அசையாமல் செய்துவிடலாம் என்றெல்லாம் பெரும் திட்டங்கள் போட்டுக் காரியங்கள் நடைபெறுகின்றன. அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த உலக ஆதிக்கிய விஷயத்தில் ஒரே மனப்பான்மை கொண்டவை. எனவே மெய் ஓங்கவில்லை. இந்தியா கவர்மெண்டார் லார்ட் மவுண்ட் பேடன் ஆலோசனைப் படி நடந்ததின் பலனாக இன்று தாங்கள் கொடுத்த கேசை ஐ. நா. சபையிலிருந்து வாபஸ் பெறக்கூட முடியாமல் தவிக்கின்றனர்.

இந்தியா உடனடியாகச் செய்யவேண்டியது ஒன்றே. லார்ட் மவுண்ட் பேடனை பிரிட்டனுக்கு அனுப்பிவிடவேண்டும். தங்கள் வெளிநாட்டுக் கொள்கைகளைத் திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டும். வெளுத்ததெல்லாம் பால் என்று ஏமாறக் கூடாது. உலகில் எல்லா வல்லரசுகளும் அயோக்கிய சிகாமணிகள் என்று எண்ணிக் காரியங்களைச் செய்யவேண்டும். நல்லவன் என்று ஏற்படும் வரை, அவ்வகையில் எவரையும் நம்பலாகாது.

காஷ்மீர் பிரச்னையைப் பொறுத்த வரையில் ஐ. நா. சபைக்கு மறுபடியும் செல்லாது தானே அதைச் சமாளிக்க முயலவேண்டும். ஐ. நா. சபையிலிருந்து தன் அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்யவேண்டும். அஞ்சா நெஞ்சுடன் இதைச் சாதித்தாலொழிய மேற்கு வல்லரசுகளின் வலையினின்று தப்ப வழியில்லை.



மஹாத்மாவின் கடைசி யாத்திரை



வீதி ஊர்வலம். கவர் டாங்கிகள் முன் செல்ல, மக்கள் ரோடு ஓரங்களில் குழுமி நிற்கின்றனர்.



தகன கட்டத்தில் மவுண்ட் பேட்டன் தம்பதிகள் முதலியோர்.

# சங்கப் பலகை

**நா**ட்டில் பல துறைகளிலும் இருள் எழத் தொடங்குவதைக் கண்டு உள்ளம் நைந்தோம்—நைகின்றோம். அறத்திற்கே—இல்லை. அன்பிற்கே ஒரு மலைமேல் தீபமாய் விளங்கிய ஒரு சான்றோன் நேரில் மடிவதைக் கண்டுவிட்டோம். அவ்வொளி அவிந்தது. சிறையில் அடைபட்டுக் கிடந்த இருளின் வெள்ளம் பெருகுவதை நோக்கி அஞ்சுகின்றோம். அக்காரணம் பற்றியே மனச்செம்மை, நல்லறம், அருள்—கால அலை அலைகளால் சிதைவுறாத இம்மூன்று குணக் குன்றுகள்—மீது எங்கள் ஒளிக் கழகத்தை நிறுவி யிருக்கிறோம். அதன் கர்ப்ப கிருகத்தில் எங்கள் சங்கப் பலகை திகழ்கின்றது. அதில் ஏற்றப்படும் ஞான தீபம் இடையறாது ஓடுகின்ற காவேரியில் மிதந்து வரும். அதை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கப் போகின்றீர்கள். அதன் வனப்பைப் பருக உங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும் என்பதில் ஐயமில்லை.

எங்கள் சங்கப் பலகையின் அங்கத்தினரைப்பற்றி அறிய உங்களுக்கு மிக்க அவா இருக்குமன்றோ. உங்கள் தாகத்தைத் தணிக்க முன்வருகின்றோம்.

எங்கள் சங்கத்திற்கு நடுத் தீபமாய் திருநந்தா விளக்காய் நிற்பவரைப்பற்றி முதலில் இயம்புகின்றோம்.

இவர் கட்டைக் குட்டையான மனிதர்; சிவந்த மேனி, பரந்த முகம், சப்பை மூக்கு, முட்டைக் கண். கிரேக்க தத்துவ ஞானி சாகரடீஸ் என்பவருடைய படத்தைக் கண்டிருக்கிறீர்களா? கண்டிருந்தால், இவரை நீங்கள் கற்பனை செய்து கொண்டு விடலாம். இல்லாவிடில் இவரை யாவது பார்த்துச் சாகரடீஸ் என்ற மஹான் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்றாவது நீங்கள் ஊகித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது.

இவர் கல்வி கேள்விகளில் நிரம்பியவர் பழுத்த ஞானமுள்ளவர்; பெருத்த பெருத்த பட்டம் பெற்றவர்; பேராசிரியர் தத்துவ ஞானி என்றெல்லாம் சொல்லி உங்கள் காலத்தை நான் வீணாக்கப்போவதில்லை. ஏனெனில் அவர் எழுத்துக்களிலிருந்தே அவரை மதிப்பிடுவதற்கு உங்களுக்குத் திறமை உண்டு என்பது எங்களுக்குத் தெரியும். அவருடைய பெயர்—ஆனால் பெயரில் என்ன இருக்கிறது. இருந்தாலும் ரா. ய. ஸ்ரீ. என்றோ 'சித்ரா' என்றோ கையொப்பமிட்டு எழுதியதெல்லாம் இவர் பேனா ஊற்றிலிருந்து பெருகியவை என்று நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

மற்றொருவர் ஒரு வேதாந்தி. அவர் ஒரு நெட்டையான மனிதர்; ஒடிந்து விடுமோ என்று நினைக்கும்படியான ஒல்லியான சரீரம். மா நிறம். நீண்ட முகம். கறுப்புக் கண்ணாடியணிந்த சிறிய கண். சிறிய வாய். இவர் நடையிலே ஒரு வேகம் இருக்கும். இவருக்குப் 'போட் மெயில்' என்ற ஒரு பெயர் உண்டு என்று நாங்கள் அறிகிறோம். காயமது பொய்யடா, காற்றடைத்த பையடா என்று அடிக்கடி இவர் முணுமுணுத்துக்கொண்டிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். அதற்காக ஜகன் மித்யா வாதப்படி இவர் உரைப்பது மித்தை—உண்மைக் கலப்பற்ற பொய் என்று நீங்கள் தள்ளிவிட வேண்டாம். இவர் பெயர் கி. ச. ம்.

இவர் ஒரு வேதாந்தி என்று குறிப்பிட்டோமன்றோ. இவர் குறுகிய நோக்கமுடையவரல்லர். வெறும் வாசா கைங்கரியம் செய்கின்ற ஏட்டுச் சுரைக்காய் வேதாந்தியல்லர். வேதத்தை விலைக்கு விற்று வீடு வாசல் கட்டும் வேதாந்தி வணிகர்களின் வகுப்பைச் சார்ந்தவரல்லர். மனமொன்று நாடும், வாயொன்று பிதற்றும், உடல் வேறொன்றைச்செய்யும். இப்படி மூன்றுவிதமான ஜாலங்களைக் காட்டும் ஆற்றல் வாய்ந்த வேதாந்திகள் அநேகருண்டு. ஆனால் அத்தகைய சாமர்த்தியம் இவரிடத்தில் காணமுடியாது. இவரிடத்தில் உள்ளம், உரை, செயல் எல்

லாம் ஒன்றுய்க் காட்டும். பல்வேறு மதங்களைத் துருவி ஆராய்ந்தவர். எல்லா மதங்களும் ஆண்டவனை அடையக்கூடிய பலவிதமான மார்க்கங்கள் என்று உள்ளந்தேர்ந்தவர்.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடியடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதி விகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவை யவை தோறு
அணங்கும் பலபலவாக்கி நின் மூர்த்தி பரப்பி வைத்தாய்
இணங்கு நின்ரேரை யில்லாய்! நின் கண் வேட்கை யெழுவிப்பனே

என்ற பாசுரங்களை அடிக்கடி பாடுவார்.

எல்லாமதங்களிலுமுள்ள உண்மையைக் காண முயலுவார். இவர் பேசுகின்ற பேச்சுக்கள் எங்கள் உள்ளங்களில் ஒரு தனித் தூய்மையை எழுப்பும்.

இன்னெருவர் எங்கள் கழகத்தை அலங்கரிக்கின்ருர். இவர் உயரமும் இல்லை, குள்ளமும் இல்லை, நடுத்தரம். நிறம் கறுப்பு, பரந்த நீண்ட முகம். இவர் பேசும்பொழுது இவர் வாயைச் சுற்றி விழும் கோடுகளை நீங்கள் கவனித்தால் யாரையாவது இவர் ஏளனம் செய்கிருரோ என்று உங்களுக்குத் தோன்றும். உண்மையில் அப்படி ஒன்றுமில்லை. இவர் பத்திரிகைத் தொழிலைப் பதம் பார்த்தவர். இவர் அரசியல், பொருளாதாரம் முதலிய சாத்திரங்களைக் கரை கண்டவர். எல்லாவற்றையும் நடுவு நிலையிலிருந்து ஆராயுந் தன்மை வாய்ந்தவர். இவர் பெயர் நி. ர. பு.

எங்கள் விமர்சனக் காரரைப்பற்றிச் சொல்லுகிறேம்; கேளுங்கள். இவருக்கு விருப்பு, வெறுப்பு ஒன்றுமில்லை. எப்பொழுதும் நூல்களைத் துருவி ஆராய்ந்து கொண்டே இருப்பார். இவர் உள்ளம் பல இலக்கியங்களில் பயின்ற பயனுக ஓர் உரை கல்லாய் அமைந்திருக்கிறது. இலக்கியத் திருட்டுகளை வெகு விரைவில்கண்டு பிடித்து விடுவார். தம் உள்ளமாம் உரை கல்லில் உரைத்துப் பார்த்து நூல்களின் தன்மையை உள்ளபடி கூறி விடுவார். உண்மைக்காகத் தன் தகப்பனையே எதிர்த்த ஒரு பிரகலாதனைப் போல, தெய்வத்தை எதிர்த்த நக்கீரரைப்போல், யமனேடு வாதாடிய நசிகேதசைப்போல நம் நாட்டில் மனிதர்களைப் படைத்துத் தரவேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். முன்பு கோயில்கள் உண்மைக் களங்களாய், ஆராய்ச்சிக் களங்களாய் அமைந்திருந்தன. இப்பொழுது கோவில்களைத் தள்ளி நாடக சாலைகளுக்கு ஜனங்கள் போவதால், அவைகளைப் புனிதமாக்க வேண்டும் என்பார். அங்கேயுள்ள ஊழல்களை ஒழித்து அங்கே அன்பு நீர் பாய்ச்சி, அறிவு விளக்கை நாட்டவேண்டும் என்று சொல்லுவார்.

இவர் உடலமைப்பைச் சித்திரிக்க எங்களுக்கு விருப்பமில்லை. ஏன் உண்மை சொல்லுகிருய், ஏன் அறிவாளியாயிருக்கிருய்—என் அன்பு காட்டுகிருய் என்று நாங்கள் தந்த அடையாளங்களைக் கொண்டு இவரைக் கொன்றுவிட்டால் நாங்கள் என்ன செய்வோம். தூய வாழ்வு நடத்துகிறவர்களுக்கு, அன்பு நெறியைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆபத்தான காலமன்ரே இது, தமக்கொரு அச்சமும் இல்லை என்கிருர் அவர். ஆனல் நல்லதொரு மாணிக்கத்தை இழக்க எங்களுக்கு நெஞ்சு துணியாது.

எங்கள் கழகத்தில் பௌதிக சாத்திரி ஒருவர் இருக்கிருர். அவர் எல்லாவற்றையும் நம்பிவிடாதே, எதையுஞ் சோதித்துத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவார். எதையும் ஆதாரமின்றி நம்பக்கூடாது என்ற ஆத்ம சக்தியைப் பலப்படுத்திக்கொள் என்று அடிக்கடி கூறுவார். இவருக்கு ஒளிநாடி என்ற பெயரை அளித்திருக்கிருேம்.

எங்கள் கவியைப்பற்றி உங்களுக்கு மொழிகின்ருேம். அவரைப் பார்த்தால் ஏதோ ஆகாயத்தில் பறப்பதுபோலத் தோன்றும். ஆகாயத்தில் பறந்தாலும், பூமியையும் அவர் உள்ளம் நாடும். அவர்

ஒரு கானப் பறவை. பறவை விண்ணிற் பறந்தாலும் மண்ணின்மீதுள்ள கூட்டில் வந்தடையுமன்றே.

அந்தப் பறவை போலத் தம் இன்ப வெறியில் பாடுவார். அதைக்கேட்டு உலகம் இன்புறும். வள்ளல்களைப் பாடுகின்ற வாணிகக் கவி அல்லர் அவர். விண்ணிற்கும் மண்ணிற்கும் ஒரு பாலம் அமைத்து விட வேண்டுமென்ற முயற்சியை உடையவர். தெய்வம் தந்த சக்தியைத் தெய்வத்திற்குச் சமர்ப்பணஞ் செய்ய வேண்டும்.

வாய் கொண்டு மானிடம் பாட வந்த கவியே னல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரான் எனக்கே உளன்
சாய் கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீ கண்டு கொள்ளென்று வீடும் தரும் நின்று நின்றே

என்ற பாசுரத்தை அவர் உதடுகள் முணுகிக் கொண்டே இருக்கும்.

பண்டை நூல்களை ஆராயாது, கவி மரபு தெரியாது சோம்பேறித்தனத்தால் குடித்துவிட்டு மனம்போலப் பாடுகின்ற கோஷ்டியைச் சேர்ந்தவரல்லர். கஞ்சாப் பாட்டன்று, கள்ளுப்பாட்டன்று, தம் வாழ்க்கையை ஒரு பெருங் காப்பியமாகச் செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றத் துஞ்சா உழைப்பைப் புரிந்து வருகின்றார், இவர் பெயர் மதுர கவி.

கவிதைக்கு மேலாயுள்ளது சங்கீத மன்றே. சங்கீதத்திற்கு அப்பாலுள்ளது எது தெரியுமா? ஆம், தெரியும். அது தான் மௌன மௌலி, அதைத்தான் இறுதியில் ஒவ்வொருவரும் அடைய வேண்டும். எங்கள் சங்கப்பலகைச் சங்கீத வித்வானைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அவரை உங்கட்கு அறிமுகப் படுத்துகிறேன்,

எழுதப்படிக்கத் தெரியாத-கையெழுத்துக்கூடச் சரிவரப் போடத் தெரியாத சங்கீத வித்வான்களின் கோஷ்டியைச் சார்ந்தவரல்லர். நிரம்பப் படித்தவர், சங்கீதக் கடலுக்கு எல்லை தேர்ந்தவர், சரீரத்திலிருந்துதான் சாரீரம் வந்தது என்றது அவருக்குத் தெரியும். உடலையே ஒரு யாழாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று இடையறாது சொல்லுவார். சங்கீத வித்வான் என்றால் சிற்றின்பப் பிரியர் என்ற வசைச் சொல்லை மாற்ற வேண்டும். அது நம் கடமையாகும் என்ற தீர்மானமும் உடையவர். வெறுங் குரலைக் கண்டு ஏமாந்து போகிற மனிதரல்லர். கோகிலம், இசைவாணி என்றெல்லாம் பத்திரிகைகளில் வருகின்றனவே, அத்தகைய புகழை அவர் விரும்புகிறதில்லை.

ராகத்தின் உயிர் நிலையை—ஆத்ம சுவரூபத்தைப் பாடகன் தொடுகின்றானா? இராகம் வழுவின்றிப் பாடப் படுகின்றதா? என்றெல்லாம் நோக்குவார். பாட்டைக் கண்ட இடத்தில் பாடமாட்டார். அது பகவானை அடைய வேண்டிய ஒரு தெய்விகக் கருவி, அதை உபாசித்தால் பகவானை உபாசித்ததுபோல ஆகும் என்ற நோக்கமுடையவர். பணத்திற்காகப் பாடமாட்டார். எங்கள் சங்கப் பலகைப் பக்கத்தில் ஒரு சிறு பூஜை அறையுண்டு. அந்த அறை முன் அவர் நின்றுகொண்டு மெய் மறந்து பாடுவார். நாங்கள் அதைக் கேட்போம். சங்கீதத்தோடு எங்கள் காலை விடியும், சங்கீதத்தோடு எங்கள் இரவு முடியும். எங்கள் சங்கப் பலகைக்கு அனுப்பப்பட்ட மாயம் என்ற பாட்டை இசையோடு பாடுவார்.

## மாயம்

தேன்மணக்குது பழனியிலே—நல்ல
தினை மணக்குது தணிகையிலே,
வான் மணக்குது செந்தூரிலே—என்
மனம் மணக்க வழியுண்டோ?

கால் குழையுது தள்ளாடி—நெடுகக்
கை நடுங்குது குவித்து நின்று,
வேல் பளிச்சிடும் வேலையிலே—உண்மை
மின்னல் காண்பதும் பாழாச்சோ?

தோள் சுளுக்கிடத் தூக்கிவந்து—தெருவில்
தூக்கியாடினேன் காவடியை;
நாள் சுருங்கிட நலிந்துபோனேன்—உலகம்
நகைக்கவென்னை மறந்தாயோ?

அருள் பெறுமோர் ஆசையினுல்—நெடுநாள்
அஞ்சி விரதம் பூண்டேனே!
இருள் செறிந்த மனக்குகையில்—நீதான்
எங்கொளிந்து கிடப்பாயோ?

களங்கமில்லாக் குழந்தைமனம்—ஒன்றைக்
காணிக்கையாய்த் தமிழ் மலேயில்
விளங்குதிரு மாலினிடம்—அன்பாய்
விட்டுவந்தேன் அற்புதமே!

பாலனந்தப் பருவத்திலே—உன்னைப்
பார்க்கவந்தேன் செந்தூரிலே,
நீலமேனிப் பாலகனுக்—கனவில்
நினைத்தபோது பேசினுயே.

ஊழிவென்றிடும் தெய்வப்புள்—அரசும்
உலகம் காத்திடும் சக்கரமும்
வாழிவேங்கடம் காட்டி நின்ருய்—இன்னும்
மாயமெத்தனை செய்வாயோ?

பொய்யுரைக்க மனமில்லை—பழைய
புனிதநெஞ்சும் பரவசமும்
மெய்யுணர்வும் கதையாச்சே—எல்லாம்
மீளுமென்ற நினைவு போச்சே.

கோயிலெங்கும் அன்பர்துதி—வெளியே
கூத்தாடும் பாடலொலி,
வாயிலண்டை நோன்பிருப்பார்—உருகி
வாய்மூடிக் கண்புதைப்பார்,

பார்த்து நின்றேன் காட்சியெல்லாம்—உண்மை
பரவமனம் துடித்தாலும்
மூர்த்தியொன்றும் பேசவில்லை—வெறித்த
மோனவெளி சிரிக்குதையோ!

கவி பாட்டெழுதுவார். அதை யாழொத்த குரலில் எங்கள் காயகர் 'ரிதம்' பாடுவார். உயர் சங்கீதம் போல வாழ்வு ஆகவேண்டும் என்று அவர் இயம்புவார். பாட்டில் ஒரு அபஸ்வரம் எழுந்தால் அதைப் பாடகன் செவி உணர்ந்துவிடுகிறது. ஆனுல் அவர்கள் வாழ்க்கை முழுவதும் அபஸ்வரம் பேசுகிறது. அதை அவர்கள் உணரவில்லையே என்று உள்ளம் நைவார். ஆனுல் அவருடைய காரியம் கைகூடும். இதோ சங்கப் பலகை அரசு செலுத்தத் தொடங்கி விட்டது.

இத்தகைய அங்கத்தினர் கொண்ட சங்கப் பலகையின் நோக்கங்களை நீங்கள் அறிந்திருக்கக்கூடும், நாங்கள் எதைப் பற்றி எழுதப்போகிறோம் என்று கேட்கிறீர்களா? எதைப்பற்றி எழுதப் போவதில்லை என்று நீங்கள் கேட்டிருந்தால் பதில்சொல்வது ஸுலபமாயிருந்திருக்கும். காதல் கடிதம், கண்ணீர். கண்ணீர் கடிதம், காதல்—இப்படித் திரும்பத் திரும்ப வரும் கதைகளை வரையப்போவதில்லை. அப்படியே எழுதினுலும் அவையே முக்கியமாய் இரா. சங்கப்பலகை எல்லாவற்றிற்கும் இடங் கொடுக்குமன்ருே? எல்லா அம்சங்களையும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

இதோடு எங்களைப்பற்றிய பேச்சைத் தற்பொழுது நிறுத்திக் கொள்கிருேம். எங்கள் வேதாந்தி கி. ச. ம் தற்கொலையின் பெருமையைப் பற்றிப் பேசுவார். தற்கொலை என்றவுடன் திடுக்கிடாதீர்கள். ஏதோ தற்கொலை பண்ணிக் கொள்ளும் சங்கம் ஒன்றிருக்கிறது என்று போலீசாரிடம் தெரிவித்துவிடாதீர்கள். தெரிவித்தாலும் பாதகமில்லை. அவர்களையும் தற்கொலை செய்துகொள்ளும்படி வற்புறுத்துவோம். நீர் நுமது, எமது என்றதைத்தான் வேரோடு மாய்க்கப் போகிருேம். அதில் தானே அழியாச் செல்வத்திற்கு—பேரின்ப வீட்டிற்கு வழி இருக்கிறது. தற்கொலை ஒரு மங்களகரமான காரியம். எங்கள் சங்கப் பலகை நீடூழி வாழ மங்கள வாழ்த்து வேண்டாமா? அரை நொடியில் பத்திரிகைகளுக்கு மங்களம் பாடுகிற ஆசிரியர் தேவை இல்லை. நாங்கள் விரும்பவும் இல்லை. நாங்களே மங்களத்தைப் பாடி-கி. ச. ம்.கட்டுரையை வெளியிடுகின்ருேம்.

சங்கப் பலகையின்
செயலாளர்
பாஞ்சசன்னியம்.

---

## தற்கொலையின் மேன்மை

ஒருதரமாவது தற்கொலை செய்துகொள்வதைப்பற்றித் தீவிரமாய் யோசித்திராத மனிதன் உலகத்தில் வாழ்வதற்கே யோக்யதை யற்றவன் என்கிருர் ஓர் ஞானி. உண்மைதான்.

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்ட கனவென்ற வாழ்வை நம்பி, உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரை தேடி ஓயாமல் இரவு பகலும் உண்டுண்டு உறங்குவதைக் கண்டதே யில்லாது ஒரு பயன் அடைந்திலேனே என்று கதறுகிறுர் மற்ருெருவர்.

காலனிர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்பநகர் கனவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய்
முயலின் கோடு

என்று அறுதியிட்டு ஆணையிடுகிருர் இன்னெரு ஞானி. உலகமே ஓர் போரரங்கம்; மனிதர்கள் எல்லாருமே அதின்மேல் நடிக்கும் வேஷதாரிகள்தான் என்கிருர் ஓர் பிரபல மேனுட்டுக்கவி. ஜகன் மித்யா என்று வேதம் முழங்குகின்றது. உண் முக நோக்கிச் சிந்தித்து ஆராயும் ஆற்றல் பெற்ற யார்தான் கானல் நீர்போல் ஏமாற்றும் இவ்வுலக சுகத்தில் திருப்தி யடைய முடியும்? ஓட்டைத் துருத்தி யென்றும் உடையும் புழுக் கூடென்றும், காயமதுபொய் காற்றடைத்த பை என்றும் சித்திரிக்கப்படும் இவ்வுடலை வைத்துக்கொண்டு இன்பத்தை எதிர்பார்த்தல் என்பதுதான் எங்ஙனம் அமையும்? ஆகவே தற்கொலை செய்துகொள்வது தான் ஓர் சிந்தனையாளன், ஞானி, செய்யக்கூடிய செயல்.

மற்றப் பிராணிகளைவிட மனிதனுக்கு எதனுல் ஏற்றம் என்று யோசிப்போமானுல் தன்னைத்தான் மாய்த்துக்கொள்ளும் இந்தச்சக்தியினுல்தான் என்று கூசாமல் சொல்லலாம். மனிதனைவிட வெகு காலம் ஜீவித்திருக்கும் பிராணிகள் எத்தனையோ இருக்கின்றன. புலனுணர்ச்சியில் நீசமான ஒரு பன்றிக்கு மனிதன் ஈடாகமாட்டான். நாய் காட்டும் நன்றியும் யானையின் அறிவும் மனிதனைத் தலை குனியச் செய்கின்றன. புத்தி சக்திகளில் தேவர்கள் மேம்பட்டவர்களே. ஆனுல் இந்த ஒரு சக்தியில், தன்னை யொழித்துக் கொள்ளும் இந்தத் தனிச் சுதந்தரத்தில், மனிதன் மற்றெல்லா ஜீவராசிகளையும் மிஞ்சிவிடுகிருன்.

ஒரு மனிதனுக்கும் மற்ருெருவனுக்கும் இடையே எழும் கேள்வி எது? நீ என்னைக் கொல்லுகிருயா அல்லது நான் உன்னைக் கொல்லட்டுமா என்பதுதான் என்கிருர் கார்லைல். தன்னையே மாய்த்துக் கொள்ளும் சக்தி தன் கையில் இருக்கும் பொழுது இந்த வினுவுக்கு இடமில்லை. அப்படியானுல் வாழ்க்கையே சுலபமாகி விடுமே, வேண்டியதெல்லாம் ஒரு நாலு முழக் கயிறுதானே என்று கேட்கலாம். ஆம், அதுகூடத் தேவையில்லை. கையசைக்கல் காலசைக்கல் மெய்யசைக்கல் இன்றியே தன்னை ஒருவன் மாய்த்துக் கொண்டுவிட முடியும். கத்தியின்றி, இரத்தமின்றிச் சண்டை யொன்றும் உண்டா? இதென்ன விந்தை? கத்தியின்றிக் கயிறுமின்றி, வெடியுமின்றி, விஷமுமின்றி, நீருமின்றி நெருப்புமின்றித் தற்கொலை என்பது உண்டா? உண்டு உண்டு என்றுதான் சாத்திரங்கள் முறையிடுகின்றன. ஞானிகளும் அனுபவிகளும் சாற்றுகிருர்கள்.

போய்ச் சேரவேண்டிய ஒரு ஊருக்கு வழியை அங்குப் போய்வந்தவனைக் கேட்டுத் தெரிந்துகொள்வதுபோல, இதற்கு வழியை இறந்தவனைக் கேட்டுத்தான் அறிந்துகொள்ள வேண்டும். நம்மிடம் தக்க ஆற்றல் மட்டும் இருந்துவிட்டால் வழியை எளிதில் அறிந்து பின்பற்றலாம்.

சுலபமான, உண்மையான தற்கொலைக்கு வழி என்ன என்பதை மற்ருெரு சமயம் ஆராய்வோம்.

# கண் திறக்குமா?

ஜி. எஸ். மணி

கண் திறக்குமா? தீமை நீங்குமா? அசுரத்வம் அழியுமா? அமரத்வம் அடையுமா?

பலவிதமான கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்; ஆனால் பலன் கிடைக்குமா?

கிடைக்குமென்ற நம்பிக்கைதான்; அந்த அசட்டு நம்பிக்கையின் மீதுதான் நானும் ஆசைவைத்தேன். ஆனால் என் ஆசை நிராசையாகி என் நம்பிக்கையும் தவிடு பொடியாகிவிட்டது.

மீண்டும் சொல்வதில் லாபமென்னவென்றுதான் நினைத்தேன். ஆனால் சொல்லாவிட்டாலோ—என் உடல் சிதையில் எரியும்போதுகூட நெஞ்சுமட்டும் வேகாது என்று தோன்றிவிட்டது.

என் மனத்தை அழுத்தும் வேதனையை யாரிடம் சொல்லி அழுவேன்? அழுதாலும்தான் யார் ஏனென்று கேட்கப் போகிறார்கள்? ஒரு அபலையின் துக்கத்திலே யார் சிரத்தை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்?

எங்கேயாவது ஒரு சிலர் எனக்காக அனுதாபப் படலாம்; ஆனால்—வெறும் அனுதாபம் மட்டும் துக்கத்தை ஆற்றிவிடுமா? என் உள்ளத்தவிப்பை உள்ளபடி யாரால் அறிய முடியும்?

இந்தியா ஸ்வதந்தரம் அடைந்து விட்டதாக உலகெல்லாம் உணர்கிறது; உத்தமமான தேசத் தலைவர்கள் ஆனந்த வாழ்வைக் காட்டி கைநீட்டி அழைக்கிறார்கள்; எந்த விதமான வேற்றுமையும் இன்றி எல்லோருக்கும் இடமும், உணவும், காற்றும், ஒளியும் தேசம் தருகிறது. இவ்வளவிருந்தும், அடிமையுணர்ச்சி மாறாத சில கயவர்களின் கலகத்தால்—அபலைகள் — அனாதைகள் — அகதிகள்—என்றெல்லாம் பலவிதத்தில் பலஹீனமான நாமகரணம் கொண்டு நிரபராதிகள், என்னைப்போல், எவ்வளவு பேர்கள், நிர்க்கதியாய், நிற்கவும் இடமின்றி, நிசாசரர்களாய் அலைகிறார்கள் தெரியுமா?

மாண்பு மிக்க மனித ஸமுதாயம் என்று மதிப்புடன் சொல்லப்படும் இந்த உலகத்திலே இந்தப்பலஹீனம் எங்கிருந்து வந்தது? மனித நாகரிகத்தை மண்ணில் துவைத்து மிதிக்கும் மிருகத்தன்மையின் சிருஷ்டி கர்த்தா யார்?

அட, தெய்வமே—மனித ஸமூகத்திலே நான் இழந்துவிட்ட ஸ்தானத்தை மறுபடியும் பெற முயற்சிக்கவில்லை; எப்போதோ—என் கணவனின் ஹ்ருதய பீடத்தில் நான் பெற்றிருந்த இடத்தை மீண்டும் கைப்பற்றவும் நான் கனவு காணவில்லை; இதெல்லாம் ஒன்றும் நடக்காது என்று எனக்கே தெரியும்.

என் கணவனுடைய ஆதரவாகிய நிழலிலே நிற்க, கொஞ்சம் இடம் கேட்டேன்: அவ்வளவுதான். அதற்குக்கூட கொடுத்துவைக்காத பாவியா நான்? அதையும் மறுத்துவிட்டான், பாவி!

காரணம்: பர புருஷன் என் உடலைத் தீண்டிவிட்டானாம்.

நான் விரும்பியா அவனைத் தீண்டவிட்டேன்?

என் புருஷனின் கண்ணுக்கெதிரே நடந்த அக்கிரமம்தானே அது? ஒளிவு—மறைவில் நடந்த சம்பவமா?

வகுப்புவாதத்தின் விளையாட்டு அது?

பத்து—இருபது பேர்கள் கொண்ட முரடர்கள் கூட்டமொன்று வாயிற் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே தட தடவென்று நுழைந்தது. என் கணவனைக் கட்டிப் போட்டுப் பலவிதத்திலும் ஹிம்ஸித்தது. பலாத்காரமாக என்னைத் தூக்கிச் சென்றது.

பத்துப் பேர்களுக்கு எதிராக ஒன்றும் செய்ய வகையின்றி ஒரு புருஷனே ஓய்ந்துவிட்டானே; பகுத்தறிவையும், மனிதத்

தன்மையையும், காற்றில் பறக்க விட்டு விட்டுக் குதிபோடும் அந்த அசுரப் படைகளிடம் ஒரு பெண் எப்படிச் சமாளிக்க முடியும்?

நான் சொல்லுகிறேன், இந்த ஒரே விஷயத்தில்தான் பெண் துர்ப்பலே யென்று; ஒரு ஆணுடன் மல் யுத்தத்தில் அவள் அதிக நேரம் போராடி ஜயிக்க முடியாதென்பது.

மற்றப்படி தந்திரத்தில், எதிராளியை வெல்வதில், எப்படிப்பட்ட வீரதீர பராக்ரமமுடைய ஆணும் பெண்ணுடன் போட்டி போட முடியாதென்று நிச்சயம் சொல்லுவேன்.

குண்டர்களின் முரட்டுத் தனத்தின் முன்னே நான் மண்டியிட்டதைத்தான் என் கணவன் கண்டான். அதன் மூலம் என் கற்பே நழுவி விட்டதாகக் கருதி விட்டான்.

ஆனால் — ஸத்தியமாகச் சொல்லுகிறேன்: என் கற்புக்கு எள்ளளவும் பங்கம் நேராமல் நான் காப்பாற்றிக்கொண்டேன்; தெய்வமும் எனக்குத் துணையிருந்து வழிகாட்டியது; அதன் மூலம் பகைவர்களை வெற்றி கொண்டேன்.

எப்படி யென்று கேட்கிறீர்கள்? நான் வெற்றி கண்ட வழியைச் சொல்லாவிட்டால் நீங்களும் நம்பமாட்டீர்களோ?

என்னை யாரும் நம்பவே வேண்டாம்; கொண்ட கணவனே நான் சொன்னதை நம்பவில்லையே; வேறு யார் நம்பினாலென்ன; நம்பாவிட்டால்தான் என்ன?

பெண்கள் மட்டும் புருஷர்களை நம்பித்தான் இருக்க வேண்டுமென்பது மட்டும் என்ன நியதியோ? வாழ்க்கையிலும் ஸரி, சொல்லிலும் செயலிலும் ஸரி, பெண்கள் புருஷர்களை நம்பத்தான் வேண்டுமா?

எவ்வளவு பேர்கள் வெளியில் ஸ்திரீ லோலர்களாகவே திரிந்துவிட்டு வீட்டுக்குள் வந்ததும் ஒன்றுமே தெரியாதவர்கள்போல் வேஷம் போடுகிறார்கள்! பெண்கள் அவர்களை நம்பாமலா இருக்கிறார்கள்? பின்னாடி குட்டு வெளிப்பட்டால்கூடப் பெண் உள்ளம் அந்தப் புருஷனை ஸஹித்துக்கொள்வதில்லையா? அவனை வெளியிலா துரத்திவிடுகிறாள்?

புருஷர்களுக்குப் பெண்ணின் கற்பு விஷயத்தில்மட்டும் ஏனிந்தப் பகை?

புரட்சிகரமான விஷயம்தான்; உலகெங்குமேதான் புரட்சி அசுர வேகத்துடன் பொங்கிப் பெருகுகிறதே!

ஆனால் பெண்ணுள்ளம் அதிகமான புரட்சியை விரும்பாது; அது அநேகமாக இயற்கையைத்தான் அனுசரிக்கும்.

தாலி கட்டிய கணவனைப் பிடிக்காமல், மனசுக்குப் பிடித்த காதலனுடன் போகும் பெண் மீண்டும் பந்தத்தால் பிணைக்கப்பட்ட கணவனை அணுகவே மாட்டாள். ஆனால் பலாத்காரமாகத் தூக்கிச் செல்லப்பட்ட ஒரு பெண், எவ் விதமாகவோ தன்னைக் காப்பாற்றிக் கொண்டு. கணவனிடம் ஆதரவை நாடி மீண்டு வரும் பெண்......

ஆதரவு! அதை நாடித்தான் நானும் கஷ்டப்பட்டு என் கணவனிடம் திரும்பினேன். அன்பை நாடவில்லை; ஆசையை நாடவில்லை; இழந்த பதவியைத் திரும்பப் பிடிக்க வரவில்லை; ஆதரவைத்தான் நாடினேன். இருந்தும் என்ன நிஷ்டூரமாகப் பேசினான் என் புருஷன்!

"உன் வார்த்தையை நம்பினாலும் உன் கற்பின் தூய்மையை என்னால் நம்ப முடியவில்லையே?" என்று வாய் கூசாமல் சொன்னானே.

எப்படித்தான் என் தூய்மையை வெளிப்படுத்திக்கொள்வேன்?

காம வெறிகொண்ட அந்தத் தடியன்கள் என்னைத் தூக்கிச் சென்றது உண்மைதான். கொண்டுபோய்க் காவலிலும் வைத்தார்கள். யாரோ ஒருவனுடைய மேற்பார்வையில் என்னைப் பத்திரப்படுத்திவிட்டு, மற்றவர்கள் தம் திருவிளையாடலைத் தொடர்ந்து நடத்த எங்கேயோ போய்விட்டார்கள். என்னை அறியாமலே ஆரம்பித்துவிட்டேன்; சொல்லியே விடுகிறேன். தனித்திருப்பதைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணியவனும் அவன், துராசையுடன் என்னை நெருங்கினான்; ஸந்தர்ப்பத்தையெண்ணி துக்கித்தவளாய், நான், பதட்டம் கொள்

ளாமல், அவனை மயக்க முன் வந்தேன். நய வஞ்சகத்தால் தப்பிவிட நினைத்துக் கொண்டேன். பெண்ணின் மாயத்திலே மயங்காத முரடனும் உண்டோ? அவனை எனக்கு மிகவும் பிடித்துவிட்ட தாகவும், இஷ்டப்படி இருக்க ஆக்ஷே பணையில்லையென்றும் சொல்லிப் புன்னகை புரிந்தேன். அவன் என்னை நம்பினான். திடீரென்று இயற்கை அவசரப் படுத்து வதாகவும், வெளியே போய்விட்டு வந்து விடுவதாகவும் சொல்லி அவனை வேண் டினேன். எனக்குத் துணை வருவதாகச் சொல்லி அவன் என்னைப் பின்தொடர்ந்து வந்தான். சற்றுத் தூரத்தில் அவனை இருக்கச் சொல்லிவிட்டு, நான் மரங்க ளடர்ந்த ஒரு பகுதியில் மறைந்து பதுங் கினேன். தெய்வத்தை நம்பினேன்; அதன் துணையை நாடிப் பிரார்த்தித்தேன். அந்தக் கருணை ஸமுத்ரம் எனக்கு வழி காட்டியது. அந்தப் பிரதேசம் மலைப் பாங்கான இடம்; நான் மறைந்திருந்த பக்கத்திற்கு அருகிலே ஒரே கிடுகிடு பாதாளமாயிருப்பதை மங்கிய ஒளியில் தெரிந்துகொண்டேன். சட்டென்று ஒரு யோசனை உதித்தது; அந்தப் பாதா ளத்தில் விழுந்தவன் ஸுலபத்தில் மேலே ஏறி வர முடியாது. விழும் வேகத்தில் அடிபட்டுவிட்டால் உயிருடன் எழுந்திருக்கவே முடியாது. அங்கிருந்த படியே திடீரென்று "பாம்பு பாம்பு!" என்று கூச்சலிட்டேன். எட்டி நின்றவன் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தான். நான் துணிவுடன் சடேரென்று அவனுக் குப் பின்புறமாக ஒதுங்கி, அவன் வந்த வேகத்திலேயே, என் முழுப் பலத்தையும் கொண்டு அவனை ஒரு உந்து உந்தி அந்தப் படு குழியிலேயே தள்ளிவிட்டேன்.

அப்புறம் ஒளிந்து மறைந்து வந்து கொண்டே வெகு தூரத்திற்குப் பிறகு ஜன நடமாட்டமுள்ள ஒரு பாதையை அடைந்தேன். அருகில் அகதிகள் முகாம் ஒன்று இருந்தது. அதில் தங்கிய பிறகு, தகுந்த துணையுடன் என் கண வனின் இருப்பிடத்தை அடைந்தேன்.

எவ்வளவு ஆர்வத்துடன் அவனை அணுகியிருப்பேன்! அவனது மடியிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு கதறி யழுது என் துக்கத்தைத் தணித்துக் கொள்ள என் நெஞ்சு எப்படித்தான் துடித்தது!

ஆனால் கிடைத்தது என்ன?

அவன் என்னை இந்த நிலையில் எதிர் பார்க்கவில்லையாம்!

மானமழிந்துதான் வருவேனென்று எதிர் பார்த்தானோ?

மானமழிந்து போயிருந்தால் மறுபடி அவனைக் காண உயிருடன் திரும்புவே னென்று எண்ணினான் பேடி!

அப்படியேதான் வைத்துக் கொள் வோம்; அதற்கு மன்னிப்பே கிடையாதா? வேண்டுமென்று செய்வதற்கும் பொல் லாத காலத்தால் சம்பவிப்பதற்கும் வித் யாஸம் இல்லையா?

இந்திரனால் அஹல்யை கெட்டாள்; கௌதமரின் சாபம் அவள் பட்ட மாசைத் துடைக்க வழிகோலி விட்டது. என் புருஷன் இடும் சாபத்திற்கு நானும் உள்ளாகத் தயார்தான்; ஆயினும் சாபம் கொடுக்கும் சக்தியின் மூலம் பாபத்தைப் போக்கும் பரிஹாரம் இந்தக் காலத்துப் புருஷர்களுக்குத் தெரியுமா?

வெகுகாலம் ராவணனிடம் வாசம் செய்த ஸீதையின் கற்பு நிலையைப் பற்றி ராமனும்தான் ஸந்தேகப்பட்டான். தன் தூய்மையை நிரூபிக்க ஸீதை அக்னிப் பிரவேசம் செய்தாள். நானும் அக்னிப் பிரவேசம் செய்யத் தயார்தான்; ஆனால் ஸீதையைப்போல் உயிருடன் மீண்டுவர முடியாது. ராமனுடைய அந்தக் கரண சுத்திதான் ஸீதையை அக்னியின் நாக்கி லிருந்து காப்பாற்றியது; இந்தக் காலத் துப் புருஷர்களின் ஹ்ருதய சுத்திக்கு அத்தகைய சக்தி வருமோ?

உலகம் உண்டான கால முதலாகவே துராத்மாக்கள் பெண்களைத் தூக்கிச் சென்று ஹிம்ஸிப்பதும், தொட்டதற் கெல்லாம் புருஷர்கள் ஸ்திரீகளின் நடத் தையிலே அர்த்தமற்ற ஸந்தேகம் கொள் வதும் மிகவும் விபரீதமான பரம்பரை வழக்கமாக இருந்து வருகிறதுபோல்தான் தோன்றுகிறது.

இந்த அநியாயத்திற்கு ஒரு முடிவு கிடையாதா?

தேகத் திமிர்கொண்ட ஆண் மக்கள் அகம்பாவத்தினுல் ஆரம்பிக்கும் அர்த்த மற்ற கலகங்களுக்கும், நிரபராதிகளாக நிற்கும் பெண்களின் கற்புக்குக் கேடு விளைவிப்பதற்கும் என்ன ஸம்பந்தம்? துராசை கொண்டு திரியும் துஷ்டர்களின் மனப்போக்கிற்கு, அன்பையும், ஆதரவை யும் நாடி நிற்கும் பெண்ணினம்தானு விளையாட்டுப் பொம்மை? தங்கள் ஆத்தி ரத்தை இங்கே பெண் வேட்டை யாடு வதில் காட்டிக்கொள்ளும் தீரர்கள் காட் டிற்குப்போய் புலிவேட்டை யாடட்டுமே?

இந்த விபரீத மனப்பான்மை அடியோடு மாருத வரையில் மனித ஜாதிக்கு என் றென்றும் விமோசனமே கிடையாது என்று தாங்க முடியாத வயிற்றெரிச்ச லுடன் சபிக்கிறேன்.

தேக பலம் அதிகம் என்கிற ஆணவத் தினுல்தானே பெண் குலத்தை இழிவு படுத்துகிறீர்கள்? ஆண்கள் ராஜ்யம் என்கிற அகம்பாவத்தினுல்தானே, எடுத் ததற்கெல்லாம் பெண்மையைப் பரிஹா ஸம் செய்கிறீர்கள்? அத்தகைய ஆண்கள் ராஜ்யம் அழிக! பெண்களின் பெருமை ஓங்குக!

ஆம்; பெண்ணிற்குச் சாபமிடும் சக்தி யும் உண்டு; வாழ்த்தும் சக்தியும் உண்டு. அவள் எது சொன்னுலும்—எது செய்தா லும் பலிக்கும். ஆக்கும் சக்தியும்—அழிக் கும் சக்தியும் நிச்சயமாய்ப் பெண்ணுடை யதே; கண்ணகி மதுரையை அழிக்கவில் லையா? அதே மதுரையை மீனுக்ஷி அஷ்ட லக்ஷ்மியும் பொங்க அரசாளவில்லையா?

ஸ்திரீகளின் ராஜ்யத்தில் அக்கிரமம் ஒரு போதும் தலையெடுக்காது; அநியாயம் என்பது திரும்பிக்கூடப் பார்க்காது. அர்த்தமற்ற கலகங்களுக்கு அங்கே இடம் இல்லை; அனுவசியமான சந்தேகங் களுக்கு அவ்விடம் ஆதரவும் இல்லை; ஸ்திரீகளின் கை ஓங்கினுல் அந்த ராஜ்யத் தில் ஆடவர்களுக்கு அவசியம் ஆதரவு அளிக்கப்படும்; அபயம் கொடுக்கப்படும். பெண்கள் ஆண்களைப் பலாத்காரம் செய்ய மாட்டார்கள்; ஒருபோதும் அவர் களைத் தூக்கிச் சென்று அவமானம் இழைக்க மாட்டார்கள். அன்பும், ஆர்வ மும், காதலும், சாந்தியும், அமைதியும், நியாயமும் ஸ்திரீகளின் ராஜ்யத்தில் பொங்கிப் பெருகும்.

நடக்குமா?..................

கற்பனை!

ஆம்; கற்பனைதான்; ஆண்களின் ராஜ் யத்தில் மிதிபட்டு, உதைபட்டு, அவமா னம் இழைக்கப்பட்டு அவதிப்படும் ஒரு அபலையின் கற்பனை. ஆதரவையும், ஆறுதலையும் வேண்டி நின்று, உப்பையும், விஷத்தையும் ஒருங்கே பெற்று, நொறுங் கிவிட்ட நெஞ்சின் பிதற்றல்! பயந்த வளின் மனப் பிராந்தி.........

எனக்கு இனி இங்கே இடம் இல்லை.

அதோ—ஆரவாரத்துடன் அலை வீசிக் கை நீட்டி அழைக்கும் ஆழியின் ஆழத் திலோ—அல்லது சிவக்கச் சிவக்க சிரித் தழைக்கும் நெருப்பின் நெஞ்சிலோதான் இடம் கேட்கவேண்டும்.

கருணையின்றி அவையும் எனக்கு இட மளிக்க மறுத்துவிட்டால்.........ஆம்...... கருணு ஸமுத்ரமென்று அழைக்கப்படும் அந்தத் தெய்வம்கூடவா ஓடிவிட்டது?

ஆவியாகிக் காற்ருகி அதனிடம் போய் இடம் கேட்பேன்.

அதுவும் இடம் கொடுக்க மறுத்து விட்டால்......?......

அதுவும் மறுக்குமா?—அதுகூடவா மறுக்கும்?

ஆம்—ஏன் மறுக்கக்கூடாது?—கர்ம பூமியில் கதியற்றுத் தவிக்கும் அபலை தானே—என்று சிரித்தால் — ? — பொல் லாத காலம்தான்—


அப்போது நான் என்ன செய்வேன் தெரியுமா?

"பகைவன்தான் பெண்மையை இழிவு படுத்தினுன்; கொண்ட கணவனும் நம்பா மல் தூற்றினுன்;எல்லாம்அறியும்,ஏ,தெய் வமே! நீ கூடப் பெண்மையின் உயர்வை ஒப்புக்கொள்ளப் பயந்தோடுகிருயோ?" என்று கேட்டுக் குளிர்ந்த நீரிலே நெருப் பால் எழுதி, அதை வான மண்டலத்திலே பறக்க விடுவேன். அது பேய்க் காற்ருல் தூண்டப்பட்டு உன்னைச் சுடும்; அவனை சுடும்; எல்லோரையும் சுடும்; இந்த உல கத்தையே சுடும்; மனித ஸமூகத்தையே சுட்டுப் பொசுக்கிவிடும்......!.........



Picture courtesy Kodak Ltd.


பனி படர்ந்த
புஷ்பம் போல்
புதுமையானது




ப்ரூக்
பாண்ட்
தேயிலை

இரு இலையும் ஒரு மொட்டும்




ஆர். எஸ்.

அந்த அழகான மண்டபத்துக்கு எதிரில் ஒரு எழில் படர்ந்த குளம். நல்ல வேனிற்காலம், குளத்தில் நீர் வற்றிக் கிடந்தது. இருந்தாலும், உள்ள தண்ணீரின் குளிர்ச்சி காற்றில் மிதந்து வந்து அந்த மண்டபத்தின் வெம்மையைப் பறந்தோடச் செய்துகொண்டிருந்தது. குளத்துக்கப்பால் அடர்ந்து படர்ந்த நாணல். அதற்கும் அப்பால் ஒரே பொட்டல் நிலம். நடுப் பகல் வெயிலில் கண்ணுக் கெட்டிய வரை மனித சஞ்சாரமே தெரியவில்லை.

மண்டபத்தில் இரண்டு அந்தணர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள், ஒருவனுக்கு நல்ல தேகம். அவன் வைரம் பாய்ந்த உடல் அவன் கடின சித்தத்தை எடுத்துக் காட்டியது. அவன் சிகை அவிழ்ந்திருந்தது. சிவந்த நெற்றியில் நீறு அனல்போல் ஒளிர்ந்தது. மற்றொருவன் அவ்வளவு வலியவன் இல்லை. அவன் வறிய நிலை அவன் உடைகளில் நன்றாய்த் தெரிந்தது.

வறுமை ஒரு நெருப்பு. ஆனால் நெருப்பில் விழுந்த தங்கம் அழிந்து போவதில்லை. அவன் வறுமை அவனைப் புடம்போட்டு எடுத்திருந்தது. எளிமையிலும் அவன் அறிவு அவன் கண்களில் நன்றாகத் தெரிந்தது.

இருவரும் முதல் இரவுதான் சந்தித்தார்கள். ஆனால் மற்றவன் தன்னுடைய இரகசியங்களை வெளியிட்டு விடுவானோ என்ற அச்சம் இல்லாமல் இருவரும் மனம் விட்டுப் பேசினார்கள்.

"அதோ பாருங்கள்! நாணல், அதற்குப் பக்கத்தில் எவ்வளவு முட் செடிகள் இருக்கின்றன, தெரியுமா? இந்த மண்ணின் செழிப்பை—பூசாரத்தை—உண்டு நெற் கதிர்கள் தானிய மணிகள் வழங்கவேண்டிய நிலத்தில் எத்தனை முட் செடிகள்? இவைகளை அழிக்கும் வரை எங்கே நிம்மதி? இவ்வளவுநாள் எல்லா மனிதர்களும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று என் காலிலேயே குத்திவிட்டது. இதை விட்டு விடுவேனா?"

ஆதித்யன் அறிவாளி, அவன் பேச்சை நன்றாகப் புரிந்துகொண்டான். வெறும் முட் செடிகளைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை என்பதையும் நாட்டின் வளத்தைப் பாழ்படுத்தி அரசாட்சி செய்யும் அரச சந்ததியைத் தான் கூறுகிறான் என்றும் தெரிந்துகொண்டான்.

"உண்மைதான், சாணக்கியரே! முட் செடிகள் உபத்திரவம் தந்துகொண்டுதான்

இருக்கின்றன. ஆனால் இந்த நந்த வம்சம் பூண்டற்றுப் போய்விட்டால் மட்டும் பயனில்லை. அந்த இடத்தில் செங்கோல் செலுத்த வேறொரு க்ஷத்திரியன், திறமையும் சாமர்த்தியமும் படைத்தவன் வேண்டும் என்பதை மட்டும் மறந்துவிடவேண்டாம்."

சாணக்கியனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன் மன நிலையை, உள் நோக்கத்தை அவன் அவ்வளவு எளிதில் புரிந்துகொண்டுவிடுவான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் கூரிய புத்தி அவன் நெஞ்சில் தைத்தது. ஆனால் அங்கேயே பதிந்துவிட்டது.

"ஆதித்யரே! அதையும் நான் தயார் செய்துகொண்டுதான் இருக்கிறேன். அதற்காகத்தான் இவ்வளவு நாட்கள் இந்தப்பக்கமெல்லாம் அலைந்து சுற்றினேன். நான் எதிர்பார்த்த அளவு அதற்குப் பலனில்லாது போய்விட்டது. ஆனால் இன்று எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகிறது. என் மனத்தில் எழுந்துகொண்டிருக்கும் சாம்ராஜ்யத்தில், என் உள்ளத்தில் உயர்ந்து நிற்கும் தர்ம ராஜ்யத்தில், உத்தமமான சேவைசெய்ய ஒரு அறிஞரை நான் கண்டுபிடித்துவிட்டேன்!"

"சாணக்யரே! அப்படிப்பட்ட பாக்யசாலி யார்?"

"சொல்லவேண்டுமா? கடலுக்கடியில் ஒளிரும் முத்தைப்போல், மண்ணில் புதைந்து கிடக்கும் மாணிக்கத்தைப்போல் இந்த நாட்டில் ஒரு மூலையில் தம் அறிவு பிறருக்குப் பயன்படாதபடி வாழ் நாட்களை வீணாக்கிக்கொண்டிருக்கும் நீர்தான் அந்த அறிஞர்!!

"சாணக்யரே! என்னுடனா விளையாடுகிறீர்? நீர் ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவக்கூடியவர் என்று எனக்குத் தெரியும்? ஆனால் அதில் சேவைசெய்வதற்கு நான் தகுதியுள்ளவன் என்று ஒரு நாள் உங்களுக்குப் புலப்படுத்துவேன். என் திறமையைச் சோதிக்க, இந்த அறிவுப் பரீட்சை வைக்க, ராஜ்யத்தில் பொறுப்பான தொழிலைக்கொடுத்து என் சாமர்த்தியத்தை அறிந்துகொள்ள, நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். வண்டல் தெளிந்து நிர்மலமாகும் நீரைப்போல் இந்த ராஜ்யத்திலும் ஒருநாள் நல்ல அரசு உதயமாகும். அப்பொழுது அதை உங்களுக்குப் புலப்படுத்துவேன்" என்றான் ஆதித்யன்.

சாணக்யனின் வியப்பு எல்லை மீறியது. அவனையறியாமல் அவன் மனம் துணுக்குற்றது. மறைவாக அவன் பேசியதன் பொருளை இவ்வளவுதூரம் புரிந்துகொள்ளும் ஆதித்யனின் அறிவு அவனால் ஆழம் காண முடியாததாக இருந்தது. அவன் சொன்னான்.

"ஆதித்யரே! அந்த நாளை நானும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். கார் முகில்களைக்கண்டு தோகை விரித்தாட ஆவலுடன் மழை மேகங்களுக்காக ஏங்கிநிற்கும் மயில்களைப்போல் என் மனமும் ஏங்குகிறது. என் ஆவல் நிறைவேறும்போது அவசியம் உங்களை அழைத்துக்கொள்வேன்."

2

சாணக்கியன் மனதில் எழுந்த ராஜ்யம் உண்மையில் நிலைபெறுவதற்கு வெகு நாட்களாகவில்லை. அந்த ராஜதந்திரியின் கற்பனையில் எழுந்த எந்த நல்ல காரியமும் மெய்யாகி உருப்பெறாமல் போகவில்லை. குடிகள் நந்தவம்ச அரசர்களின் ஆட்சியில் ஏற்பட்ட அல்லல் நீங்கி, சந்திரகுப்தனின் அரசாட்சியில் அமைதியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

குற்றங்களைக் கண்டுணர்ந்து நியாயம் தவறாமல், தகுந்த தண்டனை அளிக்கும் நியாயாதிபதியின் பொறுப்புக்கு மட்டும் யாரையும் சாணக்கியனால் நியமிக்கமுடியவில்லை. இந்தச் சமயத்தில்தான், பல நாட்களுக்குமுன்பு யமுனைக்கரையில் மகதத்திற்கும் அப்பால் தான் சந்தித்த ஆதித்யனின் நினைவு அவன் அகத்தில் எழுந்தது.

அவனுக்காக ஒரு தேரும் இரண்டு குதிரைகளும் நான்கு வீரர்களின்வசம் அனுப்பி, அவனை அழைத்துவரச் சொன்னான்.

* * *

நிலாத்துயிலும் முற்றத்தில் சாணக்கியன் அமர்ந்திருந்தான். ஆதித்தியனின் அறிவு அவனுக்குப் பயன் படுமோ என்ற கவலை அவன் முகத்தில் நிழலிட்டது. சந்திரகுப்தன் ஆட்சியில் குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகளை அளிப்பது வழக்கமாக இருந்தது. பிறருக்குத் துன்பம் தரும் வகையில் கொடிய குற்றங்களைச் செய்பவர்களைச் சித்திரவதை செய்வார்கள். சாணக்கியனின் மனம் கூட, அளவிட இயலாதபடி வைராக்கியம் கொண்ட அவன் சித்தம்கூட, சிலசமயங்களில் கலக்கம்அடையும். "அத்தகைய நியாயம் வகிக்கும் பொறுப்பை மெல்லிய இதயம் படைத்த

அந்தணனாகிய ஆதித்யன் எப்படி வகிக்கப் போகிறான்?'' என்று அவன் கவலைப்பட்டான்.

தேரும் புரவிகளும் வரும் அரவம் கேட்டது. அவன் கீழே இறங்கி முன் வாயிலுக்கு வந்தான். தேரும் குதிரைகளும் வந்து விட்டன; ஆனால் ஆதித்யன் வரவில்லை. அவன் சொல்லியனுப்பி இருந்தது இது தான்.

''மேன்மைதங்கிய சாணக்கிய பிரபுவுக்கு. எங்கே நான் வரவில்லையோ என்று நான் உங்களுக்கு முன் கொடுத்த வாக்கை மீறி விடுவதாக எண்ணவேண்டாம். இந்த ராஜ்யத்திற்கு என்னால் ஆன சேவையைச் செய்ய, கால் நடையாகவே வந்துகொண்டிருக்கிறேன்.''

அவன் ஏன் எல்லாவற்றையும் திருப்பி அனுப்பி விட்டான்? ஏன் நடந்துவருகிறான்? என்ன எண்ணம் அவன் மனதில் புகுந்து விட்டது? அவனுடைய செயல் அவன் அறிவையே கலக்குவதாக இருந்தது.

சொன்னபடி இரண்டு நாட்களுக்குப் பின் வந்து விட்டான் ஆதித்யன். வற்றிய அவன் முகத்தில் தெளிவான உறுதி காணப்பட்டது.

ஆதித்யனைச் சாணக்கியன் வரவேற்று உபசரித்தான். சாணக்கியனின் மனத்தில் உறுத்திக்கொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டான்.

''ஆதித்யரே! ஏன் நடந்து வந்துவிட்டீர்? நான் அனுப்பிய புரவிகள் உங்களை என்ன செய்துவிடும்?''

''சாணக்கியரே! தாங்கள் அறியாததல்ல. நான் இன்னும் அரசனால் அளிக்கப்பட்ட எந்தப்பதவியையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது எனக்கு அளிக்கப்படும் எந்த மதிப்பை நான் ஏற்றுக்கொள்ள முடியும்?''

நெருப்பை நீறு மூடியிருக்கும்வரை தெரிவதில்லை. ஆனால் அதை அறியாமல் தொடும்போது நீறு விலகிக் கனல் சுடும் போதுதான் அதை நாம் உணர்கிறோம். ஆதித்யனைப்போன்ற ஒருவனை அழைத்து வரச்செய்தபோது அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பதவியைப்பற்றி, தான் குறிப்பிடவில்லை என்பதைச் செயல் மூலமாக அவன் எடுத்துக் காட்டியிருப்பதை எண்ணி உருகினான். தான் வாக்களித்தபடி அரசை நிறுவியவுடன் அவனைச்சேவைசெய்ய அவன் அழைக்கவில்லையென்பதையும் எவ்வளவு அழகாக, ஆனால் மறைமுகமாக அவன் தன் செய்தியில் எடுத்துக் காட்டியிருந்தான் என்பது இப்போதுதான் அவனுக்குப் புலனாகியது.

''ஆதித்யரே! என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அறிவு நான் அறியாததல்ல. உங்களை நான் இந்தப் பரந்த நாட்டின் பிரதம நியாயாதிபதியாக நியமிக்கப்போகிறேன். உங்கள் திறமையை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால்.........'' என்று நிறுத்தினான்.

''என் மன உறுதியைச் சந்தேகிக்கிறீர்கள். சீக்கிரம் நான் தகுதியுள்ளவன் என்பதைச் செயல் மூலமாக உங்களுக்குக் காண்பிப்பேன்,'' என்று ஆதித்யன் தொடர்ந்து முடித்தான்.

சாணக்கியன் உவகைபொங்கக் கூறினான்– ''ஆதித்யரே! நீர் சிறந்த அறிவாளி. என் மனத்துள் இருந்தவற்றையும் அறிந்து கொண்ட நீங்கள் குற்றங்களைக் கண்டு பிடிக்கத் தகுதியுள்ளவரா என்பதைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. நாளையே நீங்கள் பதவியை ஏற்றுக்கொள்ளலாம்!!

3

மறுநாள் ஆதித்யன் பதவியை ஏற்றுக் கொண்டான். சாணக்கியன் அவனுக்கு அரசனால் கொடுக்கப்பட்ட அரிய உடைகளை அளிக்கும்போது அவன் ஒரு சிறு மூட்டையை அவன் கையில் கொடுத்தான்.

''இது என்ன'' என்று கேட்டவாறு சாணக்கியன் அதைப் பிரித்தான். சுத்தமாகக் கையால் தோய்த்து உலர்ந்த இரண்டு துணிகள் அதனுள் இருந்தன.

ஆதித்யன் சொன்னான். ''அதை நீங்கள் காப்பாற்றி வைக்கவேண்டும். நான் விரும்பும்போது என் கையில் கொடுக்கவேண்டும். அவைகள் என்னுடைய ஆடைகள். யாரும் தந்து நான் கையைத் தாழ்த்திப் பெற்றுக் கொள்ளாமல் என் முயற்சியால் சம்பாதித்த பணத்தைக்கொண்டு வாங்கியவை.''

''அப்படியே செய்கிறேன்'' என்றான் சாணக்கியன். அவன் செயல் அவனுக்குப் புரியவில்லை.

* * *

சந்திரகுப்தனைப் போன்ற சாமர்த்தியம் நிறைந்த அரசனும், சாணக்கியனைப் போன்ற திறமை வாய்ந்த ராஜதந்திரியும் உள்ள நாட்டில் அமைதிக்குக் குறைவில்லாமல் இருந்து வந்தது. ஆனாலும் பெரிய

சாம்ராஜ்யத்தில் ஏதாவது குற்றங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருந்தன. ஆனால் அநேகமாக ஒன்றுவிடாமல் கண்டுபிடித்து நியாயம் முறை பிசகாமல் தண்டனை அளித்துவந்தான் ஆதித்யன்.

சந்திரகுப்தன் நினைத்தான். "அந்தணன் என்றாலும் இவனிடம் மன உறுதி இருக்கிறது. 'எப்படி இவன் இந்தப் பொறுப்பை வகிக்கப் போகிறான்?' என்றுதான் நான் எண்ணினேன். இவனுடைய அறிவுதான் எவ்வளவு உயர்ந்தது? சாமான்யமான மனிதனைப் போன்ற மதி நுட்பமும் திறமையும் படைத்தவனல்ல இவன். இவனைப்போன்றவர்களை நம் பிரஜைகளில் ஆயிரத்தில், லட்சத்தில் ஒருவன் என்றுகூடச் சொல்ல முடியாது. இவ்வளவு அறிவு படைத்தும் அவனுக்குத்தான் எவ்வள்வு அடக்கம்?"

சாணக்கியன் எண்ணினான். "இவனுடைய மன உறுதியைப்பற்றிச் சந்தேகித்தேனே! இவனைக் காட்டிலும் சிறந்தவனை இந்த நாட்டில் எங்கே காணமுடியும்? "வண்டல் தெளிந்து நிர்மலமாகும் நீரைப்போல் இந்த நாட்டில் ஒரு நல்ல அரசு உதயமாகும் போது என் திறமையை உங்களுக்குப் புலப்படுத்துவேன்." என்று அன்று என்னிடம் சொன்னான். சொல்லைச் செயலில் காட்டுபவன் இவன்தான். தான் கூறியதை எவ்வளவு ஒழுங்காக நிறைவேற்றுகிறான்? இவனுடைய செயல்களை நானே புரிந்துகொள்ள முடியவில்லை, இத்தகையவனின் மதிப்பிட முடியாத சேவையைப் பெற இந்த நாடு எவ்வளவோ பாக்கியம் செய்திருக்கவேண்டும்."

ஆதித்யன் சிந்தித்தான். "அன்று நான் சொன்னதை எப்படியோசெயலில் நிறைவேற்றி வருகிறேன். குடிகள் என்னைப்பற்றி நல்லதைத்தான் நினைக்கிறார்கள். என்னுடைய தீர்ப்புகள் சத்தியத்தினின்றும் விலகாதவை, உண்மையோடு கூடியவை என்று அவர்கள் பூரணமாக நம்புகிறார்கள். சாணக்கியர் என்னை ஓரளவு உணர்ந்திருக்கிறார். இருந்தாலும் என்னை முற்றும் அறிந்தவன் என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ? சந்திரகுப்தன் ஒரு பொறுப்பான பதவியை என் கையில் கொடுத்திருந்தாலும் என்னை அவன் முழுதும் நம்பவில்லை. நான் ஒவ்வொரு குற்றத்தையும் கண்டுபிடிக்கும் போதெல்லாம் நான் அதை எப்படிக் கண்டுபிடிக்கிறேன் என்ற வியப்புத்தான் அவன் மனத்தில் உண்டாகிறதே தவிர அவனுடைய ஆட்சியில் நியாயம் நிலை கெடாமல் நிறுவுவதற்கு நான் எவ்வளவு சிரமப்படுகிறேன் என்று அவன் உணரவில்லை.

இந்த வேலைதான் எவ்வளவு கடினமானது? இரவுகளில் நிம்மதியுடன் நான் தூங்கி எவ்வளவோ நாட்களாயின. ஒவ்வொரு இரவின் முன் பாகத்தையும் காவற் சேவகனைப்போல் மாறு வேடம் போட்டுக் கொண்டு ஊர் சுற்றி வருவதில் கழிக்கிறேன். குற்றங்கள் நிகழ்ந்து விட்டாலோ இவ்விதம் சுற்றிச் சுற்றி வரும் போது நான் கண்டு பிடித்தவைகளைத் தனியே இருந்து இரவின் பின் பாகத்தில் ஆலோசிக்கிறேன். ஒவ்வொரு தீர்ப்பையும் சொல்வதற்குமுன் நான் கூறுவது சரிதானா, நியாய தேவதையின் சந்நிதியில் நான் செய்யும் சிறிய எளிய வேலையில் ஒரு தவறும் செய்யவில்லையா, என்று எண்ணுவதிலே என் தூக்கத்தை விலக்கி விடுகிறேன். என் தீர்ப்பு உண்மையில் சரியானதாக இருந்தால் தான் என் மனதுக்கு அசாதாரணமான அமைதி கிடைக்கிறது. ஆனால் இவ்வளவு பரந்த சாம்ராஜ்யத்தில் குடிகளுள் ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற சேவையைச் செய்து தானே ஆகவேண்டும்?

4

ஒரு நாள் முன்னிரவு, சாயங்கால வேளைகளில் ஓயாத மழை பெய்திருந்ததனால் இருட்டுச் சீக்கிரமாகவே வந்து கவிழ்ந்து விட்டது. விளக்கில்லாத வீட்டைப்போல் ஆகாயம் அழகிழந்து காணப்பட்டது. ஆயிரக்கணக்கான தாரகைகளின் மின்னொளி சுருங்கி வானம் இருண்டு கிடந்தது.

ஈனமான மக்கள் இத்தகைய நேரத்தையே தங்கள் காரியங்களை நிறைவேற்றுவதற்கு உரிய காலமாக நினைக்கிறார்கள். நல்லவர்கள் இந்த நேரத்தில்தான் தீயவர்களின் வருகைக்காகப் பயப்படுகிறார்கள்.

அவன் திருடன். கடந்த சிலமாதங்களாக அவனால் திருட முடியவில்லை. சோம்பலே உருவான அவனால் வேலை செய்ய முடியவில்லை. நியாயாதிபதியின் ஆட்கள் இரவையே தங்களுக்குப் பகலாக நினைத்துக் கொண்டு ஊரின் ஒவ்வொரு மூலையும் விடாமல் பாதுகாக்கிறார்கள் என்பது அவன் அறியாததல்ல. அகப்பட்டுக்கொண்டால் எத்தகைய தண்டனை கிடைக்குமென்பதும் அவனுக்குத் தெரியும். இருந்தும், 'ஒன்றுமில்லாமல் பட்டினியாய்ச் செத்துப் போவதற்கு எப்படி இறந்து போனால்தான் என்ன?' என்று அவன் நினைத்தான்.

நகரின் ஒதுப்புறமாக உள்ள அந்தத் தெருவுக்கு வந்தான். அந்தத் தெருவின் கடைசியில் கோவிலுக்கு எதிரில்தான் சுதர்சனன் வீடு இருக்கிறது என்று அவனுக்குத் தெரி




யும். அவனிடமுள்ள செல்வத்திற்கு அவன் ஏன் அவ்வளவு எளிய வாழ்க்கை நடத்துகிறான்? "இன்று அவன் ஊரிலில்லை. அவன் வீட்டிலிருந்து ஒரு சிறிதாவது எடுத்துக் கொள்ளாமல் திரும்ப மாட்டேன்" என்று மனத்தைத் திடம் செய்துகொண்டான்.

*　　　　*　　　　*

சுதர்சனனின் மனைவிக்கு உறக்கம்பிடிக்கவில்லை. கணவனில்லாதபோது தனியாக வீட்டைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாலே அவளுக்குப் பயமாக இருந்தது. சீக்கிரமாகவே சாப்பிட்டு விட்டாள். குழந்தை தொட்டிலில் தூங்கியது. படுக்கையறையில் ஒரு சிறுவிளக்கை மட்டும் வைத்துவிட்டு, கதவைத் தாழ்ப்பாள் போட வந்தாள். இரண்டு கதவும் திறந்து கிடந்தன. அம்மாதிரி திறந்திருந்ததாகவே அவளுக்கு ஞாபகமில்லை. குழந்தை தூங்குகிறதே? இதை யார் திறந்தார்கள்? அவளை




அறியாமல் அவளுக்கே ஒரு பயம் உண்டாயிற்று.

உள்ளே திரும்பினாள். தொட்டிலின் அருகில் யாரோ பதுங்கிப் பதுங்கிப் போவது போல் தோன்றியது. விளக்கை எடுக்க ஓடினாள். வருவதற்குள் தொட்டிவில் இடித்து மோதிக் கொண்டு யாரோ விழுந்தடித்துக் கொண்டு ஓடியதைப் பார்த்தாள். குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. அவள் "ஐயோ! திருடன்! திருடன்! அவனைப் பிடியுங்கள்!" என்று கத்தினாள்.

அவன் வெளியே ஓடினான். அதே சமயம் அங்கே ஏதோ ஒரு உருவம் ஓடி வந்தது. அவன் தலைமயிரைப் பிடிக்க எத்தனித்தபோது, அவன் ஒரு உதை கொடுத்துவிட்டு ஓட முயற்சித்தான். அவனைப் பிடிக்க வந்தவனுக்கு அளவில்லாத கோபம் உண்டாயிற்று. இடையிலிருந்த கத்தியை எடுத்து வீசினான். அவன் தலை அறுந்து விழுந்தது. அதுவரையில் யாரும் அங்கே கேட்டறியாத ஒரு ஓலம் மக்கள் செவியில் விழுந்தது. அது ஓய்ந்த அதே சமயத்தில் யாரோ அந்தப்புறம் ஓடி வருவது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. அவனுடைய உடையிலிருந்து அவன் நியாயாதிபதி ஆதித்யனால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆயிரக் கணக்கான சேவகர்களுள் ஒருவன் என்பதை அறிந்துகொண்டான். தனக்குக்கிடைக்கக்கூடிய தண்டனையை, கொலைக் குற்றத்துக்காகத் தனக்கு ஏற்படக் கூடிய கதியை நினைக்கும்போதே உடல் நடுங்கியது. அவன் ஓடினான்.

பின்னால் ஓடி வந்த சேவகன் அந்த இடத்தில் ஒரு கணம் நின்றான், கீழே குனிந்து எதையோ எடுத்துக்கொண்ட பின், மறு கணம் அங்கிருந்து மறைந்தான்.

5

மறுநாள் பொழுது விடிந்தது. திருட்டும் நடந்து அறியாத தலைநகரில், காவலாளர்களுக்கும், வீரர்களுக்கும் குறைவில்லாத பாடலிபுரத்தில் கொலை நடந்திருக்கிறது. சாமர்த்தியமான நீதிபதியும், திறமைகொண்ட அரசனும் சேர்ந்து நிறுவிய நியாய சபை இருக்கும்போது அரசனின் இராஜதானியிலேயே, தலைநகரிலேயே நியாயத்துக்குப் பங்கம் வந்துவிட்டது.

ஆதித்யன் இதைப்பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. அவன் ஏதோ தன் வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

சாணக்கியனே கலங்கினான். "இது என்ன விபரீதம்? சாமர்த்திய சாலியாகிய இவனுடைய பரிபாலனத்திலேயே நியாயம் கேட்பாரற்றுப் போய்விடுமா? அவன் எதையும் பற்றிக் கவலைப்படாமலிருக்கிறான் என்

கிருர்களே, இதை என்னால் நம்ப முடியவில்லையே! குடிமக்களின் விசுவாசத்தையும் நல்ல அபிப்பிராயத்தையும் இந்தச்சந்தர்ப்பத்தில் இவன் கெடுத்துக்கொண்டு விடுவானே?''

ஆதித்யனுக்குச் சொல்லி யனுப்பினான், ஆதித்யன் உடனே புறப்பட்டு வந்தான். அவனுடைய முகத்தினில் எப்பொழுதும் இருந்த ஒளி சிறிதளவும் குன்றவில்லை. துணிந்த அவன் நெஞ்சம் அவன் கண்களில் பிரதிபலித்தது.

சாணக்கியன் கேட்டான், "ஆதித்ய! நியாயத்துக்கும் நல்ல பரிபாலனத்துக்கும் குறைவில்லாத உன் நியாய ஆட்சியிலும் என்ன குறை ஏற்பட்டுவிட்டது? அவிழ்க்க முடியாத புதிரைப்போல் விளங்கும் இந்தப் பெரும் கொலைகூட உன் மனத்தில் ஒரு கலக்கத்தையும் ஏற்படுத்தவில்லையா?''

ஆதித்யன் அமைதியுடன் கூறினான், "சாணக்கிய பிரபு! அளவில்லாத அறிவு படைத்த தங்களைப் போன்ற ராஜதந்திரியும், குறைவில்லாத திறமை உள்ள சந்திரகுப்த மௌரியரைப் போன்றவரும் இருக்கும் நாட்டின் தலைநகரத்தில்கூட இம்மாதிரி ஒன்று ஏற்படுவதுதான் என் வருத்தத்தை அதிகரிக்கச் செய்கிறது. தங்களால் நிறுவப்பட்ட தரும ராஜ்யத்தில் கொலை என்ற சொல்கூட யார் காதிலும் விழக்கூடாது என்பது என் ஆசை; அதற்குப்பங்கம் வந்துவிட்டதே என்றுதான் மனம் நோகிறேன். நிகழ்ந்ததை இனி எதுவும் மாற்றமுடியாது. ஆனால் குற்றவாளியைக் கண்டுபிடித்துவிடுவேன் என்ற மனோதிடம் எனக்குப் பூரணமாக இருக்கிறது. பதட்டப் படாதீர்கள்.

அவன் போய்விட்டான்.

* * *

சந்திரகுப்தன் மனம் அமைதியை இழந்துவிட்டது. மழைக் காலத்துக் கடலைப்போல் அவன் உள்ளம் ஆயிரம் சிந்தனைகளால் கொந்தளித்தது.

ஆதித்யனை அழைத்துவரச் சொன்னான். ஆதித்யன் வந்ததும் அவனிடம் வழக்கைப் பற்றி விசாரித்தான்.

ஆதித்யன் கொலை நடந்த இடத்தைப் பற்றியும் மற்ற விவரங்களையும் கூறினான்.

அவன் கவலையற்ற முகம் அரசனைத் திடுக்கிடச் செய்தது. 'கொலையைப்பற்றி இவன் சிந்திப்பதாகவே தெரியவில்லையே' என்று எண்ணினான்.

ஆதித்யன் சொன்னான். "நீங்கள் இதைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? இந்த நாடெங்கும் நியமிக்கப்பட்டிருக்கும் ஒற்றர்கள், சேவகர்கள், இவர்கள் கண்களின் பார்வையினின்றும் அவன் தப்பமுடியாது. கடலிலிருந்த மீன் வலையில் வந்துவிட்டது. அதனின்றும் நழுவப் பார்த்தாலும் அது என்றும் வலைக்குள்ளேதான் இருக்கிறது என்பதை அவன் அறியவில்லை. ஆயிரக் கணக்கான வீரர்கள் அவனைப் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் மன நிம்மதியுடன் இருங்கள்.''

சந்திரகுப்தனின் முகத்தில் ஒருவித புது உணர்ச்சி பிரதிபலித்தது. முகம் வெளேரென்று நிறமிழந்து காணப்பட்டது.

ஆதித்யன் முகத்தில் ஒரு புன் முறுவல் படர்ந்தது.

ஆத்திரம் கலந்த குரலுடன் அரசன் பேசினான். "ஆதித்ய! நியாயத்தை நிறுவும் பொறுப்பை உன் கையில் அரசாங்கம் ஒப்படைத்துவிட்டது. இதை நீ கண்டு பிடிப்பதற்காக அரசாங்கம் அதிக நாள் பொறுத்திருக்கமுடியாது.''

ஆதித்யன் அமைதியுடன் கூறினான். "அரசே! தங்களுடைய நாட்டில் நியாயத்திற்கு ஒருகாலும் தீங்கு வராது. நான் கூறியபடி குற்றவாளியைக் கண்டு பிடிப்பேன். இன்றைக்குப் பத்தாவது நாள் நான் குற்றவாளியை நியாய சபையில் நிறுத்துவேன். தவறினால் இந்த ராஜ்யத்தின் சேவையில் நான் தவறிய குற்றத்துக்காக என் உயிரைக் கொடுத்துவிடுவேன்.''

எவ்வளவு அமைதியுடன் சொன்னானோ அவ்வளவு அமைதியுடன் அவன் வெளியே சென்றான். வெளிறிய முகத்துடன் அவன் சென்ற வழியே அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய சபதத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட சாணக்கியனுக்கே மனம் திடுக்கிட்டது.

ஒவ்வொரு நாளாகக் கழிந்துகொண்டிருந்தது. ஆதித்யன் கவலைப்படாமலிருந்தான். நடுவில் நான்கு நாட்கள் தேரில் ஏறிக்கொண்டு பாடலிபுரத்துக்கு வெளியே எங்கேயோ போய்விட்டுவந்தான்.


விவசாயிகள் கஷ்டம் நீங்க
உணவு நெருக்கடியைத் தவிர்க்க

**BMB** **PLOW-MATE 6 h. p. Light Tractor.**

டிராக்டர்களை உபயோகியுங்கள்!

குறைந்த ஆட்கள்! குறுகிய நேரம்!
அதிகப்படி தானியம்!! சிக்கன செலவு!!
— நிரந்தர விளைச்சல்!!! —

நிலத்தை உழுதல், செம்மைப்படுத்துதல் விதை விதைத்தல், அறுவடை செய்தல் இவைகள் B.M.B. டிராக்டர்களினால் சுலபமாகச் செய்யப்படுகின்றன!



*Sole Distributors for South India:*

**SIMPSON & Co., Ltd.,**
202/203, Mount Road, MADRAS 2.

*Branches at:*
Bangalore, Ootacamund, Trichinopoly and Secunderabad (Dn.).

*Apply to the Dealers for TANJORE District:*

**TANJORE MOTOR TRADES,**
PENNINGTON ROAD,
TANJORE.

ஒன்பதாவது நாள், சந்திரகுப்தன் பஞ்சாயத்துச் சபைக்குப் போய்க்கொண்டிருந்தான். வழியில் ஆதித்யன் அவனை வணங்கினான்.

"ஆதித்ய! குற்றவாளியைக் கண்டுபிடித்தாகிவிட்டதா? நாளைக்கு விசாரணை என்பதை உனக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்".

"பிரபு! தங்களுடைய நாட்டில் ஒரு கொலைக் குற்றத்தைச் செய்தவன் எங்கே போய்விட முடியும்? அவனை நான் நாளைக்குச் சபையில் நிறுத்துகிறேன்".

சந்திரகுப்தன் முகம் வாட்டமடைந்தது. அதைச் சிரமப்பட்டுச் சிரித்து மறைக்க முயன்றான்.

5

மறுநாள், நியாயஸ்தலத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. இன்னும் நியாயாதிபதி வரவில்லை.

குற்றவாளிகள் நிற்கும் கூண்டிலும் யாரும் காணப்படவில்லை. ஒரு சேவகன் துணி போர்த்த ஒரு உருவத்தைக்கொண்டு வந்து வைத்தான். மக்கள் ஒன்றும் புரியாமல் செய்துகொண்டிருந்த ஆரவாரம் சந்திரகுப்தரும், ஆதித்யனும் வந்தபோது தான் நின்றது.

சந்திரகுப்தன் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்தான். அவன் அருகில் சற்றுத்தாழ்ந்த இடத்தில் ஆதித்யன் உட்கார்ந்தான்.

ஆதித்யன் எழுந்து நின்றான். சேவகன் கொண்டு வந்து வைத்த உருவத்தின் பக்கத்தில் போய் நின்று கொண்டான். அவன் பேசத்தொடங்கியவுடன் சபையில் நிசப்தம் குடிகொண்டது.

"மகத சாம்ராஜ்யத்தின் இராஜதானியில், புலவர்கள் புகழ்ந்த பாடலிபுரத்தில் நடந்த இந்தக் கொலையைப்பற்றி நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். வழக்கம் போல் குற்றவாளியைத் தூக்கிலிடுவதே சம்பிரதாயம், குற்றவாளி யார் என்று எல்லாரும் சந்தேகப் படலாம். அவரை இங்கேதான் அமர்த்தியிருக்கிறேன்."

சந்திரகுப்தன் பரபரப்புடன் திரும்பினான்.

"சந்திரகுப்த மௌரிய பிரபுவே குற்றவாளி."

சபையில் பரபரப்பு ஏற்பட்டது. அரசன் முகம் வெளிறிப்போயிருந்தது. ஆதித்யன் மறுபடி பேசுகிறான்.

"எங்கே நான் அமர்த்தியிருக்கும் சேவகர்களும் காவலாட்களும் அவர்கள் வேலையைச் செய்யாமலிருந்துவிடுவார்களோ என்ற கவலை அரசரை வருத்தியிருக்கிறது: அதனால் அரசர் பாடலிபுரத்தைச் சுற்றிவரப் புறப்பட்டார். இந்த நாடெங்கும் உள்ள ஒற்றர்களில் ஒருவன் இதை எனக்குத் தெரிவித்தான். நானும் அவரைத்தொடர்ந்து நடந்து சென்றேன். கொலை செய்யப்பட்டவன் ஒரு திருடன், அவனைக்கண்டு பிடிக்கும் நல்ல எண்ணத்துடன்தான் அரசர் அவனைப் பிடிக்க முயன்றிருக்கிறார். அவன் நழுவிவிட முயன்றபோது அவருக்குக் கோபம் உண்டாயிற்று. அதன் விளைவு தான் அந்தக்கொலை. நான் பின் தொடர்ந்து வருவதை அப்போதுதான் அவர் கவனித்தார். ஆனால் அது நான் என்று அவருக்குத் தெரியாது. அவர் குற்றத்தை நான் ருசுப்படுத்தி யிருக்கமுடியாது. ஆனால் அவர் எவ்வளவோ சாமர்த்தியமாகத் தப்பியிருந்தாலும் அவருடைய கை மோதிரம் கீழே நழுவியதை அவர் கவனிக்கவில்லை. பின்னால் வந்த நான் அதை எடுத்துக்கொண்டேன்.

அரசாங்க காரியங்களைக் கவனிக்கும் பஞ்சாயத்தின் பிரதமராகிய மந்திரியிடம் போய் அரசரின் கைமுத்திரை வைக்கப்பட்ட லிகிதங்களின் முத்திரையையும் என் மோதிரத்தின் முத்திரையையும் ரகசியமாக ஒப்பிட்டுப்பார்த்ததில் எனக்குப் பூரண திருப்தி உண்டாயிற்று. சில தினங்களாக லிகிதங்களில் முத்திரைக்குப் பதிலாக அரசரே கையெழுத்திடுவதாகவும் அவர் கூறினார்.

பாடலிபுரத்துக்கு வெளியே சென்று இந்தச்சிலையை நான் செய்யச்சொன்னேன். அதற்காகத்தான் நான்கு நாட்கள் நான் வெளியே போயிருந்தேன்."

சிலையின் மேலிருந்த உறையை ஆதித்யன் உருவினான். உள்ளே இருந்த உருவம் சந்திரகுப்த மௌரியருடையது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் மௌனமாக இருந்தார்கள். ஆதித்யன் சொன்னான்.

"அரசர் நம் எல்லோருக்கும் மேலானவர். குடிகளுக்கு அவரை எதுவும் செய்ய எந்த அதிகாரமும் இடையாது. குடும்பத்தின் தலைவனான தந்தையைப் போல் நாட்டுக்குத் தலைவராகிய அரசர் இந்த பெரும் குற்றத்துக்குக் காரணமாக இருப்பதை எண்ணி

வெறுப்புகிறேன். ஆனாலும் நியாயத்தை யாராலும் மீற முடியாது. கல்லில் செதுக்கிய உருவத்தில் கடவுளின் தெய்வத் தன்மையைக் கண்டு வழிபடுகிறோம். அதைப் போல் குற்றம் செய்த அரசனின் குற்றம் செய்த ஆன்மா இந்த உருவத்தில் குடிகொண்டிருப்பதாக நினைத்து இந்தக் கல்லுருவத்தைத் தூக்கிலிடுகிறேன். இனி மௌரிய அரசர் குற்றம் செய்த துன்பத்தினின்றும் விடுபடுவாரென்று நினைக்கிறேன்.''

சபையில் மகிழ்ச்சியடைந்த மக்களின் ஆரவாரம் உண்டாயிற்று. ''ஆதித்ய பிரபுவுக்கு ஜே!'' என்ற கோஷம் எழுந்து வான்முகட்டேறி இடித்தது.

சபை கலைந்தது. சந்திரகுப்தன் வெளியே வந்தான். ஆதித்யனைப் பார்த்து, ''இரவு என்னை அவசியம் சந்திக்க வேண்டும். என்னுடன் விருந்துண்ண வேண்டும்'' என்றான்.

6

அன்றிரவு. நிலவின் ஒளி வெள்ளம் அழகான அரண்மனைக் கோபுரத்தின்மேல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. நிலாத் துயிலும் முற்றத்தில் சந்திரகுப்தன் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்திருந்தன. காலையில் நியாயஸ்தலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அவன் மனத்தில் எழுந்தன.

''அவன் அறிவு மிகக் கூர்மையானது. அதை நான் அறியவில்லை. நெருப்புடன் விளையாடினேன். அது என்னைச் சுட்டுவிட்டது. அளப்பரிய திறமையுடன் அவன் பரிபாலித்து வரும் நியாய முறையில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமென்று முட்டாள் தனமாக எண்ணினேன். அதற்குப் பலன் கிடைத்துவிட்டது. என் புகழுக்கு நானே இழுக்குத் தேடிக்கொண்டுவிட்டேன். ஆனால் அவன் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டான்? எவ்வளவு சாமர்த்தியமாகத் தீர்ப்புக் கூறினான்? அவன் மதிநுட்பத்தை அறிந்து போற்றுவதற்குப் பதிலாக அவனிடமே குற்றங்காண நினைத்தோமே!''

''அவன் எவ்வளவு அறிவாளி? அவனுடைய சேவையினால் என் ராஜ்யபாரத்தின் கௌரவமே உயர்ந்திருக்கிறது. அவனுடைய மதிப்பை நான் உணரவில்லை. அவனுடைய அறிவைப் பரீட்சை செய்ய எண்ணினேன். நான் அறிவில்லாதவன். என்னுடைய அறிவின்மையைப் பற்றி அவன் என்ன நினைக்கிறானோ நான் அறியேன்.''

சேவகன் உள்ளே வந்தான்.

வாயிலில் ஆதித்ய பிரபு வந்திருக்கிறார்? தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்.''

சந்திரகுப்தனே எழுந்து கீழே சென்றான். ஆதித்யனை வரவேற்றான். ஆதித்யன் மாளிகையின் உச்சிக்கு, அரசனின் அறைக்கு வந்தான். அவனுடைய முகத்தில் அசாதாரணமான அமைதி நிலவியது. அவன் முகம் பொலிவடைந்து விளங்கியது.

''அரசே! என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் அழைத்தபடி தங்களுடைய அரண்மனைக்கு இன்றிரவு வந்துவிட்டேன். ஆனால் விருந்துண்ண வரவில்லை. பாடலிபுரத்தை விட்டே போய்விட உத்தேசித்திருக்கிறேன். என்னிடம் தாங்கள் கொடுத்திருந்த செங்கோலையும் அரச முத்திரையையும் உங்களிடமே கொடுத்துவிடுகிறேன். ராஜதந்திரத்தில் நிகரில்லாத சாணக்கிய பிரபுவும் தாங்களும் நிர்வகிக்கும் இந்த நாட்டில் என்னுடைய அற்பசேவை எதற்கு? அதனால் தங்களுக்கும் மனசஞ்சலமே உண்டாகிறது. என்னைத் தாங்கள் நம்பவில்லை. இது என்னை வெகுநாளாகவே உறுத்திக்கொண்டிருந்தது. தங்களுடைய குடிகளுக்கு முன்னால் இதை இன்று சொல்லிவிட்டேன். தங்களுக்கும் நம்பிக்கையில்லாமல், அறிவுப் பரீட்சை வைக்க நினைக்கும் வகையில் தாங்கள் நடந்துகொண்டதை இன்று நிதர்சனமாகத் தெரிந்துகொண்டேன். பிரபு! நான் போய்வருகிறேன். அன்று, தாங்கள் சொன்னதுபோல் அரசாங்கம் நியாயத்தை நிறுவும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருந்தது. அதைத் தங்களிடமே மறுபடி ஒப்படைத்துவிட்டுச் செல்கிறேன். தாங்கள் எண்ணியபடி தகுதியில்லாதவனாக அந்தப் பொறுப்பை வகிக்க எனக்கு விருப்பமில்லை. நான் செல்கிறேன். என்னை மன்னியுங்கள்''

அவன் கீழே இறங்கிச் சென்றான். சந்திரகுப்தன் காலடியில் செங்கோலும் அரசாங்க முத்திரையும் கிடந்தன. அவைகளையும் ஆதித்யனையும் மாறிமாறி அவன் பார்த்துக்கொண்டிருந்தான். ஆதித்யன் உருவம் மறைந்துகொண்டிருந்தது. சந்திரகுப்தன் கண்களிலும், அந்த வைராக்கிய சித்தனின் விழிகளிலும் நீர் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

சாணக்கியன் வீட்டை ஆதித்யன் நள்ளிரவில் அடைந்தான். அவன் வரவைச் சாணக்கியன் கேள்வியுற்ருன். இதைப்போல், ரதமில்லாமல் ஆடம்பரமின்றி, கால்நடையாக ஆதித்யன் அவன் மாளிகைக்கு ஒரே ஒரு தடவைதான் வந்திருக்கிருன். அதாவது, அவன் பதவியேற்றுக்கொள்ள வந்தபோது.

சாணக்கியன் கீழே இறங்கிப்போய் அவனை வரவேற்ருன்.

"ஆதித்ய! உன் அறிவின் திறத்தை இன்று காலையில் நியாய சபையில் நீ வெளிப்படுத்தியதைக் கேள்வியுற்றேன். உன்னையே நாளைக்குச் சபையில் கௌரவிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதற்குள் எங்கே வந்தாய்?

ஆதித்யன் ஒரு கணம் மௌனமாக இருந்தான். பிறகு துணிவுடன் கூறினன்.

"இல்லை பிரபு! நான் பதவியை விட்டுப் போகிறேன்."

சாணக்கியன் திடுக்கிட்டான். "ஏன் ஆதித்யா? ஏன் போகிருய்? நியாயத்திற்கு உறைவிடமாயிருந்த உன் நியாய சபை என்ன கதியை அடையும்? இந்த நாடு உன் சேவையை இழந்து என்ன செய்யமுடியும்? இதை நீ யோசித்தாயா?"

"எல்லாவற்றையும் யோசித்துவிட்டேன் பிரபு! நான், என்னைப்போன்ற எளியவன், இந்த நாட்டுக்குச் சேவை செய்யத் தகுந்தவனில்லை. என்னுடைய சேவையை அரசர் மதிக்கவில்லை; நம்பவில்லை. அவருடைய ஆட்சியில் நியாயத்தை நிலைநிறுத்த நான் தகுதியற்றவன் என்று எண்ணுகிருர். எனக்கு அவர் அறிவுப் பரீட்சை வைத்தார் என்பதை நான் நிதர்சனமாகத் தெரிந்து கொண்டுவிட்டேன். போதும்! பிரபு! நான் போகப்போகிறேன். யமுனை நதியின் வண்டல் படிந்த நிலத்திலிருக்கும் சிறிய குடிசை என்னை அழைக்கிறது. ஆயர்குல நந்தன் விளையாடிய யமுனை நதிக் கரையிலேயே வாழ் நாட்களை இனி கழிக்கப் போகிறேன். அன்று உங்களுக்குக் கொடுத்த வாக்கை மீறக்கூடாது என்று தான் நான் இந்தப் பொறுப்பு வாய்ந்த பதவியை ஏற்றுக்கொண்டேன். இன்று அதை உங்களிடமே மறுபடி விட்டுப் போகிறேன். என்னை மன்னியுங்கள். என்னுடைய மாளிகையில் எனக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் யாவற்றையும் வைத்துப் பூட்டியிருக்கிறேன், நான் அணிந்துகொண்டிருக்கும் இந்த வஸ்திரம் கூடத் தாங்கள் கொடுத்ததுதான். இந்தப் பதவியை வகிக்கும்வரைதான் அவைகளை நான் அணிந்துகொள்ளலாம். அன்று நான் பதவி யேற்றுக்கொள்ளும்போது நான் கொடுத்த என் துணிகள் இரண்டும் அடங்கிய மூட்டையை எனக்குக் கொடுங்கள். அவைகளை அணிந்துகொண்டு நான் இவைகளைக் களைந்து கொடுத்துவிடுகிறேன்."

சாணக்கியனுல் பேச முடியவில்லை. மௌனமாக உள்ளே சென்று, அந்த மூட்டையைக் கொண்டுவந்து கொடுத்தான்.

ஆதித்யன் தன்னுடைய துணிகளை அணிந்துகொண்டு, சாணக்கியன் அளித்த ஆடம்பரமான உடுப்புகளை அவனிடமே கொடுத்தான்.

தன்னுடைய துணிகளை அணிந்து அவன் கம்பீரமாக விளங்கினுன். இவ்வளவு பொறுப்பான பதவியை வகித்தும் சிறிதும் கவலையென்பதே அறியாத அவன் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

அன்று அவன் கூறியது சாணக்கியன் நினைவுக்கு வந்தது.

"இவைகள் என்னுடைய உடுப்புகள். யாரும் தந்து நான் கையைத் தாழ்த்திப் பெற்றுக் கொள்ளாமல் என் முயற்சியால் சம்பாதித்த பணத்தைக் கொண்டு வாங்கியவை."

அவன் காதுகளில் அது ஒலித்தது. அன்று அவனுக்குப் புரியாத அவன் செயல் இன்று அவனுக்குப் புரிந்தது. அரசாங்க உத்தியோகம் தாமரையிலைத் தண்ணீரைப் போன்றது என்பதை அவன் எவ்வளவு தெளிவாக உணர்ந்து கொண்டிருந்தான் என்பதை அவன் செயல் காட்டியது.

சாணக்கியன் ஆதித்யனைத் தழுவிக் கொண்டான்.

ஆதித்யன் விடை பெற்றுக்கொண்டான்.

* * *

நல்ல நிலவு. பின்னிரவு. சாலையில் மரங்களின் நிழலில் ஆதித்யனின் உருவம் மெல்ல மறைந்து கொண்டிருந்தது.

# கைதியின் உள்ளம்

கிட்டு

யாரோ பூட்டைத் திறக்கும் சப்தம் கேட்டது.

கைதி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். கதவைத் திறந்துகொண்டு காவல்காரன் உள்ளே வந்தான்.

"ஏ கைதி, வா வெளியே" என்றான் காவல்காரன்.

"எதற்காக?" என்று கேட்டான் கைதி. அவன் குரலில் ஒரு ஆவலோ, ஒரு உணர்ச்சியோ ஒன்றுமில்லை.

"உனக்கு ஒரு சந்தோஷ சமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் காவல்காரன்.

"சந்தோஷ சமாச்சாரமா? எனக்கா?" என்று கைதி அதே மறத்துப் போன குரலில் கேட்டான். அவன் உதடுகளில், கேலிப் புன்னகையின் சாயை புலப்பட்டது.

"சந்தோஷ சமாச்சாரந்தான். இதோ இந்தக் கட்டளையைப் படித்துப் பார்" என்று ஒரு கடிதத்தை நீட்டினான் காவல்காரன்.

"ஐயா, படிப்பாவது, எழுத்தாவது? ஐந்து வருஷம் சிறைவாசத்தில் எல்லாம் மறந்து போய் விட்டன. நான் அறிந்த எழுத்து என் தலை எழுத்துத்தான். நான் படித்த படிப்பு, "மனிதா, நீ கஷ்டப்படத்தான் பிறந்தவன் என்ற பாடம் தான்" என்று சலிப்போடு கூறினான் கைதி.

"இப்படியெல்லாம் பேசாதே. உன் கஷ்டமெல்லாம் நீங்கிவிட்டது" என்றான் காவல்காரன்.

"எனக்குத் தூக்குத் தண்டனை விதித்து விட்டார்களா?" என்று கைதியின் வாயில் இருந்து புறப்பட்ட கேள்வியில் ஒரு ஆவல் த்வனித்ததாகக் காவல்காரனுக்குப்பட்டது.

"இவ்வளவு மனச் சலிப்போடு நீ உலகத்தில் போய் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் காவல்காரன்.

"என் உலகம் இதோ இந்தச் சிறைச்சாலை தான். அங்கு வாழ்க்கை நடத்த மனச் சலிப்புத்தான் அவசியம்" என்று கைதி வெறி கொண்டவன் போல் கூவினான்.

காவலனுக்கு இவன் செய்கை விநோதமாக இருந்தது.

"இதோ பார். உன்னை விடுதலை செய்து விட்டார்கள்" என்று மறுபடியும் கடிதத்தை அவன் கண் முன்னால் தூக்கிப் பிடித்தான் காவல்காரன்.

"என்ன சொன்னாய்?" என்று கேட்டான் கைதி. 'விடுதலை' என்ற சொல் அவனுக்கு ஆச்சரியத்தையோ ஆனந்தத்தையோ அளித்ததாகத் தோன்றவில்லை.

"நீ விடுதலை அடைந்து விட்டாய்" என்று கத்தினான் காவல்காரன். உரக்கக் கூறினால்தான் அவனுக்குப்புரியும் என்று நினைத்தானோ என்னவோ.

"உண்மையாகவா? இல்லை. நிர்ப்பாக்யனைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கும் கொடியவர்களின் கட்சியில் நீயும் சேர்ந்து விட்டாயா?" என்று கைதி கூறியபொழுது, உண்மையிலேயே காவல்காரனின் உள்ளம் உருகத்தான் செய்தது.

"ஓச்சி.........நான் சிறைக்காவலன் தான். ஆனால் கடமையில் மட்டும் காவல்காரனே ஒழிய, எனக்கும் நெஞ்சில் ஈரமும், கண்ணில் நீரும் உண்டு" என்று காவல்காரன் கூறியபோது அவன் குரல் தளர்ந்திருந்தது.

"எனக்கு இன்னும் இரண்டு வருஷ தண்டனை பாக்கியிருக்கிறதே" என்று கைதி மீண்டும் கூறியபோது, அவன் மனோநிலை காவல்காரனுக்குப் புரியவேயில்லை.

"நீ சிறையில் ஒழுங்காக நடந்து கொண்டாய். அந்த இரண்டு வருஷங்களையும் தள்ளுபடி செய்துவிட்டார்கள்" என்று காவல்காரன் கூறிவிட்டுக் கைதியின் முகத்தை நோக்கினான்.

அப்பொழுது அந்த முகத்தில் சந்தோஷக் குறி காணோம்.

"ஆனால், சிறைச்சாலையை விட்டு என்னை வெளியே போகச் சொல்லுகிறாயா?" என்று கைதி பரிதாபத்துடன் கேட்டபோது காவல்காரன் வாய்விட்டுச் சிரிக்காமல் என்ன செய்வான்!

"பைத்தியக்காரா! உன்னைப்போல் எவ்வளவு கைதிகள் விடுதலை கிட்டாதா, கிட்

டாதா என்று தினமும் ஏங்கிக் காத்துக் கிடக்கிறார்கள்? நீயோ, விடுதலையை வெறுக்கிறாய். பந்தத்தை விரும்புகிறாயே" என்று காவல்காரன் கூறினான்.

கைதியின் கண்களில் அப்பொழுது முதல் துளி கண்ணீர் தளும்பிற்று.

"ஐயா, பத்து ரூபாய், திருடியதற்காக ஏழு வருஷம் சிறைத் தண்டனை விதித்த பாழும் உலகத்திற்குள்ளேயா என்னை மறுபடியும் பிடித்துத் தள்ளுகிறீர்கள்? வறுமையையும், பசிக் கொடுமையையும், துன்பத்தையும், துயரத்தையும், மனிதனுடைய கஷ்டங்களாகக் கருதி, நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக, அவைகளை, மனிதனுடைய குற்றங்களாகக் கருதித் தண்டனை அளிக்கும் இந்தக் கொடிய உலகத்திற்குள்ளேயா மீண்டும் என்னைப் பிடித்துத் தள்ளுகிறீர்கள்?" என்று கதறாத குறையாய்க் கூறினான் கைதி.

காவல்காரன் என்ன செய்வான்; பாவம்! "அப்பா, ஹிருதயம் நன்மை என்று நினைப்பதை, சட்டம் குற்றமாக நினைக்கிறது. ஹிருதயமும் சட்டமும் ஒன்றுசேரும் நல்ல காலம் இன்னும் உலகத்தில் பிறக்கவில்லை. நீயோ நடந்ததை மறந்து, நடக்கப் போவதை மனதில் நினைத்துக்கொண்டு போ" என்று சொன்னான்.

கைதி, வெளியே வந்தான். சிறைவாசலை நோக்கி நடக்கலானான். காவல்காரனும் பின் தொடர்ந்தான். வாசற் படியருகே வந்ததும் கைதி நின்றான்.

"விடுதலை" என்று ஒருமுறை கூறிப் பெருமூச்சு விட்டான்.

"ஐயா, கால்கள்தான் சிறையைவிட்டு வெளியே நடந்து செல்லப்போகின்றன. கண்ணும் கருத்தும் இந்தச் சிறைச்சாலை மதில்களில் ஆழ்ந்துவிட்டன. ஐயா, பாழும் உலகத்திலிருந்து என்னைப் பாதுகாத்து வந்த இந்தச் சிறைச்சாலை மதில்கள், என் மனதைவிட்டுப் போகுமா? அவைகள் ஒவ்வொரு நொடியும் என்னை, அழைத்துக் கொண்டேயிருக்கும். அந்த அழைப்பை, நான் வெகுகாலம் உதாசீனம் செய்திருக்க முடியாது. என்றேனும் ஒருநாள் மீண்டும் வந்து சேருவேன். சிறையிலிருந்து பெற்ற விடுதலையைவிட, உலகத்திலிருந்து பெறும் விடுதலைதான் எனக்குப் பெரிது. நான் போகிறேன்............இல்லை......போய் வருகிறேன்"............என்று கூறிக்கொண்டே பாதை வழியே நடக்கலானான் கைதி.

"உடைந்து சிதறிப்போன உள்ளத்துடன் உலகத்தில் வாழச் செல்லும் இவன் என்ன செய்யப்போகிறானோ பாவம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே காவல்காரன் உள்ளே சென்றுவிட்டான்.

## 2

விடுதலையடைந்த கைதியின் உள்ளத்திலோ சந்தோஷம் இல்லை. உற்சாகமும் இல்லை. அவன் மனம், விரக்தியின் சிகரத்தை அடைந்திருந்தது. "விடுதலை...... விடுதலை......ஐந்துவருஷங்களுக்குமுன் அது இனிப்பாகத்தான் இருந்தது. இப்பொழுதோ இந்த விடுதலையை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்! உணர்ச்சியற்ற ஒரு மனதை வைத்துக்கொண்டு உலகத்தில் போய் நான் என்ன செய்யமுடியும்! ஐயோ, சிறைச்சாலையில் இருந்தவரை நிம்மதியாக இருந்தேன். இந்தப் பாழும் விடுதலை, புதிய பிரச்னைகளைக் கிளப்பி என் மனதை வாட்ட ஆரம்பித்துவிட்டதே.........உலகம் என்னை எப்படி வரவேற்குமோ?......கைதி என்ற முத்திரை, என் உலக வாழ்க்கைக்கே முத்திரையாகிவிடுமோ? என்னை உலகம் எப்படி வரவேற்கும்?" என்று கூறிக் கொண்டே நடந்து சென்றான்.

இரண்டு மைல் போயிருப்பான். எதிரே நகரம் தென்பட்டது. பசி வயிற்றைக் கிண்டியது. பக்கத்தில் இருந்த போஜன விடுதியொன்றில் நுழைந்தான்.

"ஐயா", என்று கூப்பிட்டான்.

"யாரப்பா நீ?" என்ற ஒரு குரல், வெளியே போட்டிருந்த மேஜையருகில் உட்கார்ந்திருந்த பருத்த சரீரமும், கறுத்த நிறமும் உள்ள ஒருவரின் தொண்டையிலிருந்து கிளம்பிற்று.

"நான் அடுத்த ஊர். இரவு தங்க இடம் கிடைக்குமா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் கைதி.

"இது சிறைச்சாலை இல்லை. கண்யமானவர்கள், யோக்யமானவர்கள் வந்து தங்கும் போஜனசாலை, உனக்கு இங்கு இடமில்லை" என்று அந்தக் குரல் அதட்டிக் கூறிற்று.

"எனக்கு ஏன் இடமில்லை" என்று கேட்டான் கைதி.

"இதோ பார், 'சிறைச்சாலையிலிருந்து இன்று ஒரு கைதி விடுதலை அடைந்திருக்கிறான், மன விரக்தியோடு வெளியே

புறப்பட்டிருக்கிறான், சித்தம் கலங்கிப் போயிருக்கிறது. ஜாக்கிரதை' என்று சிறைச்சாலை அதிகாரி சுற்றறிக்கை விடுத்திருக்கிறார் பார்த்தாயா? போ......போ... உனக்கு இடமில்லை'', என்று அதட்டிக் கொண்டே எழுந்தார் முதலாளி.

''தேன் ஒழுகப் பேசிய காவல்காரன் எனக்குப் போகுமிடம் எல்லாம் முள்ளாகப் பரப்பி வைத்துவிட்டானா?'' என்று முணுமுணுத்தான் கைதி.

'டேய், போடா என்றால், ஆடு திருடப் போகும் கள்ளன் மாதிரி விழிக்கிறாயே. போகிறாயோ, இல்லை போலீஸைக் கூப்பிடட்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே முதலாளி ஒரு காலை முன் வைத்தார்.

''பேஷ்......போலீஸ் வந்தால் வயிற்றில் உள்ள பசியைக்கூடக் கைது செய்து கொண்டு போய்விடுமா?......ஐயா, எனக்குத் தங்க இடம் வேண்டாம். உலகம் எப்படியிருக்கிறதென்று பார்க்க வந்தேன். பார்த்தேன். போய் வருகிறேன்'' என்று திரும்பி விட்டான்.

''பைத்தியக்காரப் பயல்'' என்று முதலாளி கூறி, பெருஞ்சிரிப்புச்சிரித்தது அவன் காதுகளில் விழுந்திருக்கத்தான் வேண்டும்!

## 3

கைதிக்கோ களைப்பு மேலிட்டது. மாலை நேரமும் மறைந்து இருள் சூழத் தொடங்கி விட்டது. தெருக் கோடியில் இருந்த, பாழடைந்து போன வீட்டுத் திண்ணையின் மேல் போய் உட்கார்ந்தான். சுவரில் சாய்ந்து கொண்டான்.

கண்கள் மூடின.

மனதிலோ அடுக்கடுக்காக எண்ணங்கள்!

உலகத்திற்குத் திரும்பி வந்தால், ''போ, போ, அயோக்யனே'' என்று விரட்டுகிறார்கள். சிறைச்சாலைக்குள் போனாலோ, ''நீ யோக்கியனாகி விட்டாய்'' என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து வெளியே விரட்டுகிறார்கள்! கடைசியில், நான் யோக்கியனாக வாழக் கூடிய இடம்தான் எங்கே இருக்கிறது......ஹூம்......சந்திரமண்டலத்துக்குத் தான் போக வேண்டும். இல்லாவிட்டால் விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகத்தைக் கண்டு பிடித்து அங்கே செல்லப் போக்குவரத்து வசதி வைக்கும் வரையில் எங்கேயாவது ஒரு காட்டில் போய் ஒளிந்திருந்து, காத்துக் கொண்டிருக்கவேண்டும் ......அம்மா.........அம்மா...... நீ என்னைப் பெற்றபோது, கூடவே ஒரு பணப்பையையும் பெற்றுத் தந்திருக்கக் கூடாதா!

இவ்வாறெல்லாம் அவன் மனம் எண்ணி எண்ணி ஓய்ந்து போன போதுதான் எதிரே ஒரு சிரிப்புச் சப்தம் கேட்டது.

ஆஹா! யாரது? தன்னைப் போலவே ஒரு உருவம்.

''நீ யார்? ஏன் சிரித்தாய்?'' என்றது கைதியின் குரல்.

''அதற்குள்ளாக நீ சந்நியாசியாகத் தீர்மானித்து விட்டதைக் கேட்டுத்தான் சிரித்தேன்'' என்றது அந்த உருவம்?

''நீ யார்'' என்றது கைதியின் குரல் மீண்டும்.

''வேறு யார்? அல்லும் பகலும் உன்னுடைய சலிப்பின் சித்ர வதைக்கு ஆளாகி வரும் மனச்சாட்சிதான்'' என்றது அந்த உருவம்.

''நீ தானா! நீ ஒரு பெரிய துரோகி'' என்று சீறியது கைதியின் குரல்.

''நானா?'' என்று அந்த உருவம் கோபத்தோடு கேட்டது.

''ஆம். அந்தப் பத்து ரூபாயை நான் திருடும்போது, நீ என்னைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தாய், என்னைக் கொண்டு போய்ச்சிறையில் தள்ளினாய், திருடும்போது மட்டும் நீ என்னை ஒருமுறை உறுத்தியிருந்தால்......'' என்று கைதியின் குரல் கூறிக் கொண்டே போக, அந்த உருவம் இடைமறித்து, ''நீ தான் என்னைத் தலையெடுக்க வொட்டாமல் அடித்தாயே. உன் சகோதரி பாசமானது என்னை அப்படியே அமுக்கி விட்டதே'' என்று கூறியது.

''ஆம். கூடப் பிறந்தவள். உணவைக் கண்ணால் கண்டு இரண்டு தினங்கள் ஆகியிருந்தது. அவளுக்கு உணவளிப்பது என் கடமை யல்லவா?'' என்று கைதியின் குரல் கேட்டது.

''உன் கடமைதான். இல்லையென்று யார் சொன்னார்கள்! ஆனால் கடமை உணர்வினால் நீ சட்டத்தை மறந்தாய்'' என்றது உருவம்.

''என் ஹ்ருதயத்தின் துடிப்பை என்னால் தாங்க முடியவில்லை. ஹ்ருதயம் கடமை என்று நினைப்பதைச் சட்டம் குற்றம் என்று கருதினால் நான் என்ன செய்வேன்?'' என்றது கைதியின் குரல்.

"எதையாவது ஒன்றை மாற்றிக்கொள்" என்று யோசனை கூறியது உருவம்.

"சட்டத்தை மாற்றலாம். ஹ்ருதயத்தை மாற்ற முடியாது" என்றது கைதியின் குரல்.

"சரி அப்படியாவது செய்" என்றது உருவம்.

"நான் எப்படிச் செய்வது?" என்ற கேள்வி கைதியின் குரலிலிருந்து கிளம்பியபோது, குரல் தழு தழுத்தது.

"துணிந்து உலகத்தில் பிரவேசி. சோதனைகளைச் சகித்துக்கொள். தூற்றல்களைப் பொறுத்துக்கொள். துன்பங்களை லட்சியம் செய்யாதே: சட்டத்தையும் ஹ்ருதயத்தையும் சேர்க்க முயற்சி செய்" என்று உபதேசம் செய்தது உருவம்.

"முயற்சி முறிந்தால்......" என்று இழுத்தது கைதியின் குரல்,

"முயற்சி செய்தோம் என்ற திருப்தி போதாதா?" என்று கேட்டது உருவம்.

"அந்தத் திருப்தி என் பசியை ஆற்றுமா?" என்று கேட்டது கைதியின் குரல்.

"ஆற்றும்படி செய்வது உன் பொறுப்பு" என்று கூறியது உருவம்.

"என்னை மறுபடியும் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடேன்" என்று கெஞ்சியது கைதியின் குரல்.

"கடமையைக் கண்டு பயந்து காட்டுக்கு ஓடும் துறவிகளைப் போல் பேசுகிறாய். உன் சகோதரியை மறந்தாயா?" என்று உருவம் சொன்னதும், கைதிக்குப் பொறுக்கவில்லை.

"ஐயோ......மனிதனுடைய நிம்மதியைக் குலைக்க, இருக்கும் கருவிகள் போதாவென்று இந்த மனச்சாட்சி வேறா? என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?" என்று மீண்டும் கதறியது கைதியின் குரல்.

"பயப்படாமல் உலகத்திற்குள் பிரவேசி. வருவது வரட்டும்" என்று தைரியம் கூறியது உருவம்.

"உம்......சரி......ஐந்து வருஷங்களுக்குள் உலகத்தில் எவ்வளவு மோசடிகளும் சூழ்ச்சிகளும் தந்திரங்களும் தோன்றி இருக்கின்றனவோ? இந்த வெள்ளை மனதை வைத்துக் கொண்டு, அவைகளின் நடுவே துணிச்

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை:- நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
ர்.ரு.ட நெ6, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிர்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ்.

சலோடு போய் நில்லு என்று சொல்லுகிறாய்.........உம்.........பார்ப்போம்'' என்று கைதியின் குரல் கூறிற்று.

உருவம் மறைந்தது. கைதி கண் விழித்தான், ''என்ன தூக்கம்'' என்று முணுமுணுத்துக்கொண்டே எழுந்தான். பசி காதை அடைத்தது. நான்கு, ஐந்து வீடுகளில் கேட்டுப் பார்ப்போம் என்று எழுந்தான்.

4

அம்பலம் சேர்வை, ஊரிலேயே ரொம்ப பெரிய மனிதர். நல்ல பணக்காரர். நல்ல குணசாலி. குபேரனும் கர்ணனும் ஒன்றாய்ச் சேர்ந்து அம்பலம் சேர்வையாக அவதரித்தார்கள் என்று சொல்லலாம். மிகவும் அடக்கமுள்ளவர். மனைவி கருணை லௌகீகப் பற்றுள்ளவள், ஆனால் வெகுளி. குழந்தைகள் கிடையாது. ஆனால் தம்மை வந்து உதவி கேட்பவர்களையெல்லாம் தம் குழந்தைகளாகவே பாவித்தார் அம்பலம் சேர்வை.

அன்றிரவு, சாப்பிட்டானதும், வெளி வராந்தாவில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் சேர்வை. உள்ளே பெட்டியைத் திறக்கும் சப்தம் கேட்டது.

''கருணை......என்ன செய்கிறாய்?'' என்று கூவினார் அம்பலம் சேர்வை.

''ஒன்றுமில்லை. மாடத்திலிருந்த வெள்ளிக் கிண்ணங்களைப் பெட்டியில் வைத்துப் பூட்டப் போனேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் கருணை.

''பெட்டியில் வைத்துப் பூட்டுவானேன்?'' என்று கேட்டார் சேர்வை.

''இந்த ஊர் சிறையிலிருந்து யாரோ கைதி விடுதலையடைந்திருக்கிறானாம்'' என்றாள் கருணை.

''கைதி விடுதலை யடைந்தால் வெள்ளிக் கிண்ணங்களுக்குச் சிறைவாசமா?'' என்றார் சேர்வை, சிரித்துக்கொண்டே.

''இல்லை.........ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அடுத்த வீட்டு அமராவதி சொன்னாள்'' என்று கூறினாள் கருணை. அவள் குரல் நடுங்கியது.

''அமராவதி வேண்டுமானால் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளட்டும். அதற்காக, அந்த வெள்ளிக் கிண்ணங்களை நீ கைது செய்ய வேண்டாம். மீண்டும் அவைகளை மாடத்திலேயே கொண்டு போய் வை'' என்றார் சேர்வை.

''சரி...உங்களிஷ்டம்'' என்று வேண்டா வெறுப்பாய்க் கூறினாள் கருணை.

''என்னிஷ்டம் என்ன தெரியுமா? சிறையிலிருந்து விடுதலை அடைந்தவன் வழி தெரியாமல் தவிப்பான். அவனை அழைத்து வந்து உணவளித்து, உள்ளத்திற்கும் ஆறுதல் கூறி அனுப்புவதுதான் என்னிஷ்டம்'' என்று சேர்வை கூறி மறுபடியும் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு கருணைவுக்கு நெருப்பாய் இருந்தது.

''உங்கள் இஷ்டங்களும் சிந்தனைகளும் தான் தெரிந்த விஷயமாயிற்றே. சரி, நேரமாகிறது. நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன்'' என்று வாசலை நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள் கருணை.

''என்ன கருணை, வாசலிலா போய்ப் படுத்துக் கொள்ளப் போகிறாய்?'' என்று கேட்டார் சேர்வை.

''இல்லையில்லை. வாசற் கதவைத் தாளிடப் போகிறேன்'' என்று கோபத்துடன் சொன்னாள் கருணை.

''எட்டு மணிகூட அடிக்கவில்லை. அதற்குள் என்ன கபாடபந்தனம்? என்று மில்லாத புதியவழக்கம்?'' என்று கேட்டார் சேர்வை.

''அந்த விடுதலை அடைந்த கைதி ஒரு வேளை......''என்று கருணை சொல்வதற்குள்.

''ஆமாம், நமது வீட்டை நாடி வந்தாலும் வரலாம். கதவைத் தாழ்ப்பாள் போடாதே...ரேழியில் ஒரு விடிவிளக்கை ஏற்றி வை'' என்று மூச்சுவிடாமல் பேசினார் சேர்வை.

''இதென்ன விளையாட்டு?'' என்றாள் கருணை.

''விளையாட்டே இல்லை'' என்றார் சேர்வை.

''ஈசுவரி. உலகத்தில் எல்லோருடைய உள்ளங்களிலும் உள்ள கனிவையெல்லாம் இவர் மனதில் கொண்டுவந்து கொட்டி விட்டாயே? இது என்ன பாரபட்சம்?'' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு உள்ளே போய் விடிவிளக்கை எடுத்து வந்தாள் கருணை.

''சாதம் ஏதாவது பாக்கி இருக்கிறதா?'' என்றார் சேர்வை.

''ஏன்?'' என்று கேட்டாள் கருணை.

"ஒருவேளை அந்த விடுதலை அடைந்த கைதி இங்கு வந்தால்......" என்று சேர்வை கூறுவதற்குள்,

"ஏது? அவனாக வராவிட்டாலும் நீங்களாகப்போய் அவனை இழுத்துக்கொண்டு வந்துவிடுவீர்கள் போலிருக்கிறதே" என்ருள் கருணை.

"கருணை...உனக்குப் பெயர்தான் கருணை" என்ருர் சேர்வை.

"வேண்டுமானல் "காளி" என்று மாற்றி அழையுங்கள். அப்படியாவது உங்கள் கருணைவெறி தணியுமா பார்ப்போம்" என்று கூறினள் கருணை.

"ஏது? பெரிய இரசவாதிபோல் பேசுகிருயே?" என்று சேர்வை கூறினர்.

"நேரமாகிறது. நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன். நீங்கள் வேண்டுமானல் ........." என்று வாக்யத்தைப் பூர்த்தி செய்யாமல் நிறுத்தினள் கருணை. அதைப் பூர்த்திசெய்தார் சேர்வை."..........விடுதலை அடைந்த கைதியை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன், சரிதானே" என்ருர் சேர்வை. கருணைவுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை.

"உங்களுக்குப் பால் வைத்திருக்கிறேன். ஆறிப்போய் விடப்போகிறது" என்ருள்.

"ஆறினல் மறுபடியும் சுடவைத்துக் கொள்ளலாமே, கஷ்டமில்லையே" என்ருர் சேர்வை.

"பாலிலும் கைதிக்குப் பங்கா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் கருணை.

சேர்வையோ, நிதானமான குரலில், "கருணை, வரவர, உனக்கு ஹாஸ்ய உணர்ச்சி அதிகமாகிக்கொண்டே வருகிறது. அது ஆரோக்யத்திற்கு நல்ல ஒளஷதம்" என்று கூறினர்.

"ஆமாம். கையிலிருப்பதை யெல்லாம் காலியாக்கிக்கொண்டே வந்தால் கடைசியில் ஆரோக்யத்துக்குத்தான் ஒளஷதம் தேடவேண்டும்" என்ருள் கருணை. அவள் கோபம், ஒவ்வொரு விநாடியும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

"சரி......கருணை, நீ போய்த் தூங்குபோ" என்ருர் சேர்வை. பின்னர் ஏதோ சொல்ல மறந்தவர்போல், "கருணை" என்று கூப்பிட்டு "உன் அறைக் கதவை வேண்டுமானல் நீ தாழ்ப்பாள் போட்டுக்கொள்" என்று கேலியாகக் கூறினர்.

"ஏன், ஒரு பூட்டையும் பூட்டி வைத்துவிடுகிறேன். திருடன் என் அறைக்காவது வராமலிருக்கட்டும்" என்ருள் கருணை.

"சரி......சரி......அப்படி உன் அறையைப் பூட்டிக்கொள்வதாயிருந்தால் உன் அறையில் உள்ள விலை உயர்ந்த சாமான்களை வெளியே கொண்டுவந்து வைத்துவிடு" என்று மறுபடியும் சேர்வை பரிஹாஸமாகக் கூறினர். கருணைவுக்குக் கோபம் உச்சியை அடைந்தது.

"கூட ஒரு கவுளி வெற்றிலையும், ஒரு கண்டிப் பாக்கும் வைத்துவிடுகிறேன். மந்திரம் சொல்லிக் கைதிக்குத் தானம் செய்துவிடுங்கள்" என்று சொல்லிவிட்டு 'விர்' என்று உள்ளேபோய் விட்டாள் கருணை.

"பாவம்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டார் சேர்வை.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

"யாரது? கதவு திறந்துதானிருக்கிறது. உள்ளே வரலாம்" என்ருர் சேர்வை. கதவு திறந்தது.

முகம் ஒன்று கதவோடு ஒட்டினற்போல் தென்பட்டது. அந்த முகத்தில் துயரம், பயங்கரம் இவைகளின் பரிபூரண சங்கமத்தைக் கண்டார் சேர்வை.

"என்னையா, உள்ளே வரச் சொல்லுகிறீர்கள்?" என்று அங்கு நின்றபடியே கேட்டான் நமது கைதி.

"அன்பரே, வாருங்கள். உள்ளே. ஏன் தயங்குகிறீர்கள்?' என்ருர் சேர்வை.

"'அன்பரே'.......'அன்பரே'...'அன்பரே' என்று என்னையா அழைத்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே கைதி உள்ளே வந்தான்.

"ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? உட்காருங்கள்" என்று உபசரித்தார் சேர்வை.

"ஐயா, தங்களைப் பார்த்தால் பெரிய மகான்போல் தோன்றுகிறது. இந்தப் பாவியைத் தாங்கள் இவ்வளவு மரியாதையுடன் வரவேற்று........." என்று சொல்லிக் கொண்டே வந்தவன், சட்டென்று ஏதோ நினைத்துக்கொண்டவன்போல்,

"இல்லையில்லை. கனிவு காட்டி என்னை நீர் வஞ்சிக்க முயற்சிக்கிறீர்" என்று அலறினன்.

"சேர்வை அவனைக் கையமர்த்தி, "அன்பரே, துன்பத்தால் உமது உள்ளம்

ததும்பேறிக்கிடக்கிறது என்பதை நான் அறிந்துகொண்டேன். உட்காரும்'' என்று பரிவுடன் கூறினர்.

கைதி கிழே உட்காரப்போனுன்.

"அடடா, ஏன் கிழே உட்காருகிறீர்? நாற்காலியில் உட்காரும்'' என்று நாற்காலியைக் காட்டினர்.

"எனக்கா நாற்காலி?" என்ருன் கைதி. அவன் கண்கள் எதையோ கண்டு மிரண்டதுபோலிருந்தன.

''உமக்குத்தான் நாற்காலிபோட்டு வைத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, சேர்வை, "கருணு'' என்று கூப்பிட்டார்.

பேச்சுக்குரல் கேட்டு, முன்பே அங்கு வந்து நின்றுகொண்டிருந்த கருணு, ''சற்று இப்படி வாருங்கள்'' என்று அழைத்தாள்.

சேர்வை அவளருகில் சென்ருர்.

"இவன் யார் தெரியுமா?" என்ருள் கருணு தாழ்ந்த குரலில்.

''தெரியாதே'' என்ருர் சேர்வை உரத்த குரலில்.

"மெதுவாகப் பேசுங்கள். இவன்தான் விடுதலை அடைந்த கைதி'' என்ருள் கருணு அதே தாழ்ந்த குரலில்.

"இவரா இவரா'' என்று சொல்லிக் கொண்டே உடனே சேர்வை, 'விடு விடு' என்று நடந்து கைதியருகே வந்தார். "அன்பரே, நான் எவ்வளவு மதியினன்! வந்தவுடனேயே உமக்கு உணவு அளிக்காமல் வீண் பேச்சுப் பேசிக் காலம் கழித்துக் கொண்டிருக்கிறேனே'' என்று கூறிவிட்டு, ''கருணு, அந்த வெள்ளித் தட்டைக் கொண்டு வந்து வைத்து அன்னம் பரிமாறு. வெள்ளிக் கிண்ணங்களில் மோரும் ரசமும் கொண்டு வந்து வை'' என்று கூவினர்.

கைதிக்குத் தன் கண்களையும் நம்ப முடியவில்லை. காதுகளையும் நம்ப முடியவில்லை. இப்படிப்பட்ட உலகத்தை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை:

''ஐயா, நான் கைதியாக இருந்தவன். வாசற்புறத்தில் உட்காரவைத்துச் சோறு போடுங்கள். திண்ணையில் முடங்கிக்கிடக்க அனுமதி கொடுங்கள் போதும். நான் இவ்வளவு மரியாதைக்கு அருகனல்ல என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கூறினுன் கைதி.

''அன்பரே, அருகதை உள்ளவன், அருகதை அற்றவன் என்று மனிதனுக்கு மனி


# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,**
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி - - ரூ. 62,00,000

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.

தன் தீர்ப்புச் சொல்ல உரிமை கிடையாது. நாம் அனைவரும் ஒன்றுதான். சந்தர்ப்பங்கள் நம்மைப் பலவாறாக ஆட்டிவைத்தாலும், நாம் அனைவரும் ஒரே சந்ததிதான்" என்று ஆறுதல் சொன்னார் சேர்வை.

"அதுதான் பசிப்பிணியின் கொடுமைதாங்காமல் பத்து ரூபாய் திருடினதற்கு ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு ஐந்து வருஷம் சிறைத் தண்டனை விதித்தானுக்கும்" என்று சலிப்புடன் கூறினான் கைதி. இதற்குள் கருணா, வெள்ளித்தட்டு வைத்துப் பரிமாறவே, கைதி, சாப்பிட உட்கார்ந்தான்.

"எப்படியோ விடுதலை அடைந்து விட்டீரே" என்று சொன்னார் சேர்வை.

"விடுதலையா? எது விடுதலை? அந்தச் சிறையிலிருந்து என்னை உலகச் சிறைக்கு மாற்றி விட்டார்கள். அங்குள்ள நிம்மதி கூட இங்கு கிடையாது" என்றான் கைதி.

"அன்பரே, நிதானமாகச் சாப்பிடும். கருணா இன்னம்கொஞ்சம் அன்னம் கேள்?" என்று கூறினார் சேர்வை.

சேர்வையின் அன்பும் இன் சொல்லும் கைதியை மூச்சுத் திணற அடித்தன.

"ஐயோ,......உங்கள் கனிவும் கருணையும் என்னை உயிரோடு கொல்லுகின்றன. உலகத்தில் கருணையே கிடையாது என்று நம்பிக்கையை நான் கைவிட்டேன். ஆனால் ......" என்று கூறி நிறுத்தினான் கைதி. அவனால் மேலே பேசமுடியவில்லை.

"ஐயா, உலகத்தில் நீர் மிகவும் ஏமாற்றம் அடைந்து விட்டவர் போல் காணப்படுகிறீர்" என்று சேர்வை அனுதாபத்தோடு கூறினார்.

"ஏமாற்றமா?.........இல்லை சித்திரவதை. ஐயா. எனக்கு ஒரே தங்கை, பாவம். அவளைக் காப்பாற்றுவதற்காகத் தான் நான் கூலிவேலைகூடச் செய்யத்துணிந்தேன். அவளோ பெரிய தியாகி. 'அண்ணா, நான் சொல்வதைக் கேட்கப் போகிறாயா? இல்லையா" என்று கண்டிப்பாகக் கேட்டாள். 'மீனா, இந்த உடம்பில் பலம் இருக்கும் வரை நான் உனக்கு உழைத்துச் சோறு போடுவேன். கவலைப்படாதே' என்று தைரியம் சொன்னேன். 'அண்ணா, நான்கு வீடுகள் பெருக்கிச் சுத்தம் செய்தால் எனக்கு...' என்று மீனா கூறிக்கொண்டே வந்தாள். "மீனா, மறுபடியும் ஒரு முறை இப்படிப் பேசினால் எனக்குக் கோபம் வரும். மேட்டுப்பட்டி மேல் வீட்டாரைச் சேர்ந்த பெண் கூலி வேலை செய்கிறாள் என்றால்...?" என்று நான்கூறி முடிப்பதற்குள், மீனா இடைமறித்து, 'அண்ணா, உனக்கு மட்டும் அந்தக் கௌரவம் இல்லையா?' என்று கேள்வி போட்டாள். "உண்மையான அறிவுக்கு உலகத்தில் இடமேயில்லையா?" என்று கூறி, ஏங்கினாள்.

'மீனா, உலகத்தைக் குறைகூறி என்ன பிரயோஜனம்?' ...உம்...அந்தக் கோப்பையை எடு. என்றேன். கோப்பையை எடுத்துக் கொடுத்தாள். அப்பொழுது அவள் கை, என் கையோடு உராயவே, ஏதோ நெருப்பைத் தொட்டதுபோல் சுரீர் என்றது எனக்கு. 'ஐயோ மீனா...இதென்ன உன் கை மழுவாய்க் கொதிக்கிறது. கண்ணெல்லாம் 'ஜிவ்' வென்று......" என்று நான் அலறியே விட்டேன். மீனாவோ தளர்ந்த குரலில், "ஒன்றுமில்லை அண்ணா, ரொம்ப களைப்பாக இருக்கிறது. சோறு பிடிக்கவில்லை. ரொட்டியிருந்தால்........." என்று கூறி நிறுத்தினாள். 'இதோ ஒரு நொடியில் கொண்டு வருகிறேன்" என்று கூறி நான் வெளியே வந்தேன்.

"வெளியே வந்து என்ன பிரயோஜனம்? கையில் காலணா இல்லை. அன்று காலையில் தான் முதலாளி, நான் அதனப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டேன் என்று என்னை வேலையை விட்டுத் தள்ளிவிட்டான். இதை நான் மீனாவிடம் சொல்லவில்லை. பிச்சை எடுக்கலாம் என்றால் குடும்பக் கௌரவம் இடம் தரவில்லை. ரொட்டிக் கடை ஒன்று கண்ணில் தென்பட்டது. வெளிப்புறத்தில் யாரும் இல்லை. ரொட்டி ஒன்றும் வெளியே இல்லை, ஆனால் கடை முதலாளியின் கல்லாபெட்டி வெளியே இருந்தது. பெட்டியைத் திறந்தது என் கை. பணத்தையும் எடுத்தது. அப்பொழுது என் மனம் ஒரு நிலையில் இல்லை. என்ன செய்கிறேன், எனக்குத்தெரியவில்லை, நான் எடுத்ததை முதலாளி பார்த்து விட்டானோ என்னவோ! அப்புறம் போலீஸ்காரன் என்னைப் பிடித்ததும், நியாயஸ்தலத்தில், பட்டினியால் தவித்த குற்றத்திற்காகச் சட்டம் எனக்கு ஏழு வருஷம் தண்டனை விதித்ததும் எல்லாம் சொப்பனமாகவே தோன்றியது" என்று கூறியபோது கைதியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று.

"அன்பரே, இனிமேல் உமக்கு நல்ல காலம்தான்...போய் நிம்மதியாக நித்திரை செய்யும். நாளைக் காலையில் உமக்கு ஒரு வழி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, "கருணா, அந்த மெத்தையை எடுத்துப்

போட்டு விட்டாயா?" என்று கருணைக் கூவி யழைத்தார் சேர்வை.

மெத்தை என்ற சொல் காதில் விழுந்த தும் தேள் கொட்டியதுபோல் துடித் தெழுந்த கைதி, "ஐயா, நான் இப்படியே தாழ்வாரத்தில் தரையில் படுத்துக்கொள்ளு கிறேன்" என்று கூறினன்.

சேர்வை எழுந்து அவனருகில் வந்தார். அவன் தோள்மேல் கை வைத்தார். அந்த ஸ்பரிசம், அவன் உடம்பில், ஏதோ மின்சா ரம் பாய்ச்சுவது போலிருந்தது.

"அன்பரே, ஏன் இப்படி உம்மை நீரே தாழ்த்திக்கொள்ளுகிறீர்?...போய்ப் படுத் துக்கொள்ளும். ஏதோ நல்ல பொழுதாக விடியட்டும் என்றும் பிரார்த்தனை செய்து கொள்ளும்" என்று கூறி அவனைப் படுக் கைக்குப் போகச் சொன்னர் சேர்வை.

5

"வார்டர், நான் அந்தப் பழத்தைப் பறிக்கவில்லை......வார்டர்......ஐயோ......... நான் இல்லை......வார்டர்.........சத்யமாகச் சொல்லுகிறேன்......நான் இல்லை......நான் இல்லை" என்று கூறிக்கொண்டே துடி துடித்து எழுந்தான் கைதி. கண்களைத் துடைத்துக்கொண்டான். "சே, சொப்ப னந்தானு" என்று சொல்லிவிட்டு மறுபடி யும் படுக்கையில் சாய்ந்து கொண்டான்.

"நல்ல மனிதர்......என்ன உபசாரம்...... என்ன கனிவு......அடாடா......" என்று அவன் உதடுகள் முணு முணுக்க, கண்கள் அறை முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்து வந்தன. அவன் கண்கள் வெள்ளிக் கிண்ணங்களைக் கண்டன. "ஆகா, எவ்வளவு அழகான கிண்ணங்கள்! சுமார் நூறு ரூபா யாவது பெறும். சுருட்டிக்கொண்டு போனல், ஒரு மாதம் நிம்மதியாகக் காலம் கழிக்கலாம்" என்ற கொடிய எண்ணம், அந்தத் தழும்பேறிய உள்ளத்தில் தோன்றி யது.

தங்கையின் மனம் சந்தோஷ மடையும் என்று நினைத்தான் அந்த நிர்ப்பாக்யன். ஆனல் தங்கை உலகத்தைவிட்டே போய் விட்டதை அவன் அறிவானு?

"கொஞ்ச நேரம் படுத்திருப்போம். பின்னர் எழுந்து போகலாம்" என்று மறு படியும் கண்களை மூடினன்.

,'அண்ணு" என்று குரல் கேட்டது.

"ஹா............மீனு" என்று துடித்தலறி எழுந்தான் கைதி.

"ஆம் மீனுதான். யாருக்காகக் குற்றம் செய்து ஒருமுறை சிறை புகுந்தாயோ, அந்த மீனுதான்" என்று குரல் பதில் அளித்தது.

"நீ எங்கே வந்தாய்?" என்று கேட்டான் கைதி.

"மறுபடியும் நீ குற்றம் செய்வதைத் தடுக்கத்தான்" என்றது மீனுவின் குரல்.

"குற்றமா" என்று வினவினன் கைதி.

"ஆம். வெள்ளிக்கிண்ணங்களை நீ மறந்து விடவேண்டும்" என்று மீனு கூறினள்.

"மறந்துவிட்டால் மறுபடியும் நமக்குத் தரித்திரம்தான் மீனு. இந்த உலகத்தில் சந்தர்ப்பம் நேர்வது கஷ்டம். நேர்ந்தால் அதை நாம் கைவிடக்கூடாது" என்றுன் கைதி.

"அண்ணு! ஐந்து வருஷம் சிறையில் இருந்துமா உனக்குப் புத்தி தெளியவில்லை?" என்று கேட்டாள் மீனு.

"சிறைக்குள் இருந்த மனப்பான்மை சிறைக்கு வெளியே பொருந்தாது மீனு" என்று ஏதோ தத்துவம் பேசினன் கைதி.

"அண்ணு, நான் சொல்வதைக் கேள். உன்னை ஒரு பொருட்டாக மதித்து உப சரித்த அந்த உத்தமனுக்கா துரோகம் நினைக்கிருய்?" என்று மீனு சீறினள்.

"துரோகம் இல்லை, மீனு. கடவுளுக்கே புத்தி கற்பிக்கப்போகிறேன்" என்று கூறிச் சிரித்தான் கைதி.

"அண்ணு, இதென்ன விபரீதம்?" என்று கூவினள் மீனு.

"ஆம். ஒருவனைப் பணக்காரனுக்கி, ஒருவனைப் பட்டினியால் தவிக்க வைத்திருக் கும் அந்தக் கடவுளுக்கு, பட்டினி கிடப்ப வர்கள், பட்டினி தாளாமல் அட்டூழியம் செய்தால்தான் புத்தி வரும், கடவுளுடைய பட்சபாத புத்தி ஒழியும்" என்று வெறி கொண்டவன்போல் கூறினன் கைதி.

"அண்ணு, உனக்கென்ன பைத்யமா? வேண்டாம். ஒருமுறை நீ பட்டது போதும். அந்த உத்தமரையே அண்டியிருந்தால் அவரே உனக்கு உதவி செய்வார்," என்று மீனு கெஞ்சினள்.

"யார்கண்டார்கள்? நேற்றிரவு உபசாரம் செய்தவர், காலை காலை உயிருக்கே உலை வைத்தால்.........இந்த உலகத்தை நான் நம்பவேமாட்டேன்" என்று கூறிச் சிரித்தான் கைதி.

"ஐயோ, அண்ணா.........உன் உள்ளமும் இப்படியா நொந்து போக வேண்டும்! அண்ணா...அண்ணா...அண்ணா...நான் சொல்வதைக் கேள்" என்று மீனா கதறினாள்.

"முடியாது...மீனா. உனக்காகத் தான். முடியாது. முடியாது...முடியாது" என்று இரைந்து கத்திக் கொண்டே எழுந்தான் கைதி. கண்களைத் திறந்தான். "ஓச்சீ மறுபடியும் கனவுதானா? ஐயோ, இன்று இரவு எவ்வளவு கனவுகள்!" என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

வெள்ளிக் கிண்ணங்கள் கண்களில் பட்டன. அவைகளைக் கையில் எடுத்துக் கொண்டான். அவன் மனமும் செய்கையும் அவன் வசத்திலேயே இல்லை. "மீனா ஒரு அப்பாவி. அவளுக்கென்ன தெரியும் பிழைக்க வழி? உலகமே.........நீ என்னைக் கரித்துக் கொட்டினாலும் எனக்கு வழி இல்லை என்று நினைத்தாய்! வெள்ளிக் கிண்ணங்களே, வாருங்கள். நீங்கள்தான் என் அதிருஷ்ட தேவதைகள்" என்று பித்துப் பிடித்தவன் உளறிக் கொண்டே வாசற் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். இருளில் மறைந்து விட்டான்.

6

பொழுது விடிந்தது.

"விருந்தாளி விழித்துக் கொண்டாரா? அவருக்குக் காப்பி வேண்டாமா? பாவம்" என்று ஏளனமாகக் கேட்டாள் கருணா.

"இரு. போய் பார்க்கிறேன், பாவம், ரொம்ப களைப்பு, இன்னும் தூங்குகிறரோ என்னமோ" என்று சொல்லிக் கொண்டே அறைப் பக்கம் வந்தார், சேர்வை. கதவு திறந்திருந்தது. மெல்ல எட்டிப் பார்த்தார். கட்டில் காலியாக இருந்தது.

"அடாடா, விருந்தாளியைக் காணோமே" என்றார் சேர்வை.

"காணோமா?" என்றுகேட்டுக்கொண்டே அங்கேவந்த கருணாவின் கண்கள் மாடத்தை நோக்கின. மாடம் காலியாய் இருந்தது. அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"சரிதான், வெள்ளிக் கிண்ணங்களையும் காணோம்" என்றாள் கருணா. அதோடு விடவில்லை அவள். "போயும் போயும் திருடனைக் கொண்டுவந்து உபசாரம் பண்ணி, விருந்து வைத்து, கட்டில் மெத்தை போட்டுக்கொடுத்தாலும், திருட்டுப் புத்தி போய் விடுமா?" என்று கருணா ஏசினாள்.

"போனால் போகிறது" என்று விவகாரத்தை இரண்டே வார்த்தையில் பைசல் செய்துவிட்டார் சேர்வை.

மணி பத்து அடித்தது. உள்ளூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து ஆள் ஒருவன் சேர்வையைத் தேடிக்கொண்டு வந்தான்.

அவன் கொடுத்த கடிதத்தைப் பார்த்தார் சேர்வை.

"முக்கியமான வழக்கொன்றில் தங்களுடைய சாட்சியம் தேவை. தயவு செய்து உடனே புறப்பட்டு வரவும்" என்று மாஜிஸ்டிரேட்டே எழுதி அனுப்பியிருந்தார்.

உடனே சேர்வை கருணாவிடம் சொல்லிக்கொண்டு கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

நியாயஸ்தலத்தில் நுழைந்ததும் மாஜிஸ்டிரேட் சேர்வைக்கு மரியாதை செய்து, ஆசனம் அளித்து உட்காரச் சொன்னார். நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே, சேர்வை, கைதிக் கூண்டை நோக்கினார்.

கூண்டில் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு நின்றான் அவருடைய 'விருந்தாளி'. எதிரே மேஜையின் மேல் அவருடைய வெள்ளிக் கிண்ணங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சேர்வை பிரவேசித்ததால் தடைப்பட்ட விசாரணை மீண்டும் ஆரம்பமாயிற்று.

"கைதியே, ஒரு முறை குற்றம் செய்தும் புத்திவராமல், மீண்டும், இந்த வெள்ளிக் கிண்ணங்களை நீ திருடத்துணிந்தது பெரும் பாதகமாகும்" என்று மாஜிஸ்டிரேட் கூறிவிட்டுச், சேர்வை பக்கம் திரும்பி, "சேர்வையவர்களே, வெள்ளிக்கிண்ணங்கள் தங்களுடையவைகள் தானே" என்றார் சேர்வை. 'ஆம்' என்று பதில் அளித்தார்.

"கைதி நேற்றிரவு உமது வீட்டில் தங்கியது உண்மைதானா" என்று மாஜிஸ்டிரேட் கேட்டதற்கும், "ஆமாம். உண்மைதான்" என்று பதில் அளித்தார் சேர்வை.

"ஆகவே, வெள்ளிக் கிண்ணங்களைக் கைதி எடுத்துச் சென்றது பற்றிச் சந்தேகத் திற்கிடமேயில்லை" என்று கூற ஆரம்பித் தார் மாஜிஸ்டிரேட்.

உடனே சேர்வை இடைமறித்து "நீதிபதி யவர்களே, கைதிக் கூண்டில் நிற்கும் அன்பர் வெள்ளிக் கிண்ணங்களை எடுத்துச் சென்றாரே யன்றி, திருடிச் செல்லவில்லை" என்றார்.

"என்ன சொல்லுகிறீர்?" என்று, புரியா மல் கேட்டார் மாஜிஸ்டிரேட்.

"வெள்ளிக் கிண்ணங்களை அவர் திருட வில்லை. நான்தான் அவைகளை அவருக்குக் கொடுத்தேன்" என்றார் சேர்வை.

"என்ன!" என்றார் மாஜிஸ்டிரேட் மீண்டும்.

"நான்தான் அவருக்குக் கொடுத்தேன்" என்றார் சேர்வை,

கூண்டில் நின்ற கைதியின் உள்ளத்தில் பளிச்சென்று ஒரு ஒளி. அவனுடைய மன தில் மூடியிருந்த இருள் ஓடி மறைந்தது.

"ஆஹா, இதுவல்லவா கருணை உள்ளம்! ஸ்வாமி......அன்னமிட்ட வீட்டிலேயே நான் கன்னமிட்டேனே" என்று முணு முணுத்து விட்டு, கைதி மாஜிஸ்டிரேட்டை நோக்கி, "இல்லை; அந்தப் பெரியவர் சொல்வது பொய். நான் திருடன். நான் திருடன் தான்" என்று கத்தினான்.

"இல்லை அந்த அன்பர் நிரபராதி. வெள் ளிக் கிண்ணங்களை நான்தான் கொடுத் தேன்" என்று சேர்வை மீண்டும் கூறிய போது அவர் முகத்தில் ஒரு ஜோதி தோன் றியதுபோலிருந்தது கைதிக்கு.

"பொய், பொய்......நான் திருடன்...... நான் திருடன்தான்......மகா பாவி" என்று அலறினான் கைதி.

அப்பொழுது மாஜிஸ்டிரேட் எழுந்து நின்று கூறினார் :-"கைதியே, அந்த உத்த மரின் வார்த்தைகளைத்தான் நான் நம்பப் போகிறேன், உன்னை விடுதலை செய்கிறேன். ஏதோ அந்த உத்தமருடைய மொழிகளா வது உன் உள்ளத்தில் புதிய விளக்கை ஏற்றி வைக்கட்டும். யாரங்கே? கைதியை விடுதலை செய்யுங்கள்" என்று மாஜிஸ் டிரேட் உத்தரவிட்டார்.

உடனே கைதி தலைநிமிர்ந்து மாஜிஸ் டிரேட்டை ஒரு பார்வை பார்த்தான், "விடு தலையா......வேண்டாம்..........வேண்டாம். என்னைச் சிறைச்சாலைக்கே அனுப்பி விடுங் கள். எனக்கு இந்த உலகம் வேண்டாம். சிறையில் இருந்தபோது என் அறிவு தெளி வாயிருந்தது. வெளியில் வந்ததும் மங்கிப் போய்விட்டது. வேண்டாம், நான் சிறை க்கே போய்விடுகிறேன். என் உள்ளம் தெளிவடைந்து அதில் உயர்ந்த நினைவு தோன்ற வேண்டுமானால் அது சிறைச்சாலை யில்தான் சாத்யம். மனிதனின் கஷ்டங் களைக் குற்றங்களாகக் கருதும் இந்த உலகத் தில் அது சாத்யமல்ல. எனக்கு விடுதலை வேண்டாம். என்னைச் சிறைச்சாலைக்கே அனுப்பிவிடுங்கள். கைதியின் உள்ளம் பக்குவம் அடையும் சிறைச் சாலைக்கே அனுப்பிவிடுங்கள். உலகம் என்ற சிறையி லிருந்து என்னை விடுதலை செய்து, அந்தப் பழைய சிறைச்சாலைக்கு என்னை அனுப்பி விடுங்கள். அனுப்பி விடுங்கள். அனுப்பி விடுங்கள்" என்று அலறிக்கொண்டே கைதி கூண்டில் 'தொப்' பென்று விழுந்தான்.

சேர்வையும், மாஜிஸ்டிரேட்டும் அவன் பக்கத்தில் போய் நின்று அவனைப் பார்த்த போது, அவனுடைய உயிர் உண்மையி லேயே உலகச் சிறையிலிருந்து விடுபட்டுப் போயிருந்தது.


## காவேரி சந்தா விகிதம்


| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.


M41,N41KV
N47:77
198055

# ஓர் சிறந்த தோழன்



நீங்கள் தரை மூலமோ, கப்பல் மூலமோ அல்லது விமான மூலமோ எந்தப் பிரயாணம் செய்வதாயினும் டாடா ஓ டி கொலோனையும் கூடவே எடுத்துச் செல்லுங்கள். பிரயாணத்தின் போதுள்ள தூசு, பொடியினின்று அது உங்களை சுத்தமாகவும் குளுமையாகவும் இருக்கச் செய்வதுமன்றி சேர வேண்டிய இடத்தில் களைப்பாறி உற்சாகத்துடன் போயிறங்க உதவவும் செய்யும்.

எங்கு போவதாயினும் டாடா ஓ டி கொலோனும் கையிலிருக்கட்டும்.

டாடா

# ஓ டி கொலோன்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

# வனஸ்பதி

**சி. வி. ராமகிருஷ்ணன்**

இரசாயன வகுப்பிலே எண்ணெயும், கொழுப்பும் (Oils and Fats) என்பதைப் பற்றிப் பாடம் நடந்துகொண்டிருந்தது. இயற்கைப் பாலிலிருந்து கிடைக்கும் கொழுப்பின் தன்மையைப் பற்றியும், செயற்கைக் கொழுப்பைத் தயாரிக்கும் விதம், அதன் தன்மை முதலியவைகளைப் பற்றியும் கார, சாரமாக அலசிவிட்டு, கடைசியாகச் சில இந்திய கம்பெனிகள் செயற்கைக் கொழுப்பைச் சரியான முறையில் தயார் செய்யாததின் பயனாக, அது எளிதில் ஜீரணமாவதில்லை என்று கூறிவிட்டு, வகுப்பினின்றும் வெளியேறினேன். மாணவர்களும், இந்திய கம்பெனிகளில் சில செய்யும் அட்டூழியங்களைக் கண்டுபிடித்துவிட்டது போல, ஆரவாரத்துடன் வகுப்பை விட்டு வெளியேறினர். நேராக வீட்டிற்குச் சென்று, டிபன் வரும் என்ற நோக்கத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தேன். உடனே சமையலறையினின்றும், எனது தர்ம பத்தினி நான் இருக்கும் இடத்திற்கு வந்து (வெறும் கையுடன்தான்) 'செயற்கைக் கொழுப்பைப்பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம்' செய்ய ஆரம்பித்துவிட்டாள். அது நெய்யைவிட மிகவும் மலிவாகக் கிடைப்பதாகவும், அதே சமயத்தில் அதற்கு நெய்யின் எல்லாக் குணங்களும் இருப்பதாகவும், அதை உடனே வாங்கிக் கொண்டுவந்தால்தான் மாலை ஆகாரத்திற்கு வழியுண்டு என்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கவே, பரக்கப் பரக்க ஓடிச் சென்று, கடையினின்றும் ஒரு டப்பா டால்டாவை வாங்கி வந்து அவளெதிரில் தூக்கி எறிந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஜீரணம் ஆகுமா, ஆகாதா என்று யோசியாமல், அவள் கொடுத்த ஆகாரத்தைப் பசி தீர ஒரு கை பார்த்துவிட்டு, அந்த மூச்சிலேயே அவள் மேல் இருந்த ஆத்திரத்தில், அவளைப் பழி வாங்க இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்தேன்.

மிருகங்களின் பாலினின்றும் தயார் செய்யப்படும் நெய்யாகிய இயற்கைக் கொழுப்பில் உடலுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் இருப்பதால் மிகச் சிறந்த உணவு என்றும், அதைச் சிறிதளவாவது ஒவ்வொரு நாளும் ஆகாரத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். இன்றைய தினம் நம் நாட்டில் மக்களின் எண்ணிக்கையோ கணக்கு வழக்கு இல்லாமல் பெருகியிருக்கிறது. ஆனால் அதற்கு ஏற்றாற்போல் மிருகங்களின் எண்ணிக்கை பெருகவில்லை. எனவே கிடைக்கும் பாலின் அளவு ஒரு சிலருக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. சிறிய அளவில் கிடைக்கும் இந்தப் பாலையும் பணம் அதிகம் படைத்த மக்கள் அதிக விலைகொடுத்து வாங்கி உபயோகித்து விடுவதால், ஏழை மக்கள் கொழுப்பு ஆகாரம் இன்றி உயிர் வாழ்ந்து, பல ஹீனராய், இளம் வயதிலேயே இறந்து விடுகின்றனர். இதற்காக 17 வருடங்களுக்கு முன்பு, ஆராய்ச்சியாளர்கள் ஒன்றுசேர்ந்து செயற்கைக் கொழுப்பைச் சரசமாகவும், நேர்த்தியாகவும் செய்யும் விதத்தைப்பற்றி ஆராய ஆரம்பித்ததின் பயன்தான் இன்று நாம் எல்லாக் கடைகளிலும் பார்க்கும் 'வனஸ்பதி' அல்லது ஏழை மக்களின் நெய் (Poorman's Ghee).

ஆராய்ச்சியாளர்கள் முதன் முதலில் எண்ணெய்க்கும், நெய்க்கும் உள்ள வித்தியாசத்தை ஆராய்ந்தனர். இரண்டும் கொழுப்பைக் (Fat) கொடுக்கும் வஸ்துக்கள். எண்ணெய் சாதாரணமாகத் திரவ ரூபமாகவும், நெய் திடரூபமாகவும் இருக்கின்றன. இரண்டிலும் உள்ள இரசாயனப் பொருள்களை ஆராய்ந்ததில், இரண்டும் அமிலங்களைச் சிக்கலான க்ளைஸரைட்ஸ்கள் ரூபத்தில் (Acids in the form of complicated Glycerides) பெற்று இருக்கின்றன என்று தெரிய வந்தது. எண்ணெயிலுள்ள அமிலங்களில் அப்ஜனகம் (Hydrogen) சற்றுக் குறைச்சலாகவும், நெய்யில் உள்ள அமிலங்களில் சற்று அதிகமாகவும் இருக்கிறது. இதுதான்

எண்ணெய்க்கும், நெய்க்கும் உள்ள முக்கியமான வித்தியாசமாகும். ஆகவே எண்ணெயை எடுத்துக்கொண்டு இன்னும் வேண்டிய அப்ஜனகத்தை (Required Hydrogen) வெளியிலிருந்து சேர்த்தால், உடனே அது திரவ ரூபத்திலிருந்து திடரூபத்திற்கு மாறுகிறது. இதற்குத்தான் 'எண்ணெய் அப்ஜனகச் சேர்க்கை' (Hydrogenation of oils) என்று பெயர். இதற்காக நிக்கல் (Nickel) என்கின்ற உலோகத்தின் முன்னிலையில் சரசமாகக் கிடைக்கும் கடலை எண்ணெய், கரடெண்ணெய் முதலியவைகளினுள் அப்ஜனகத்தைப் புகுத்தினால் உடனே அந்த எண்ணெய்கள் திரவ ரூபத்திலிருந்து திடரூபத்திற்கு மாறுகின்றன. எல்லா எண்ணெய்க் குணங்களையும் விட்டுவிட்டு நெய்க் குணங்களை அடைய ஆரம்பிக்கின்றன. இங்கு நிக்கல் (Nickel) அப்ஜனகச் சேர்க்கைக்கு ஒத்தாசையாயிருக்கிறதே ஒழிய, அது தனித்தே நிற்கிறது. அதற்கு உகைப்பான் (Catalyst) என்று பெயர். நிக்கல் (Nickel) சுத்தமாகவும், வெகு சிறிய அளவிலும் இருக்க வேண்டும். இல்லாவிடில் அது விஷமாக மாறிவிடலாம். இதுமாதிரி எண்ணெயில் அப்ஜனகத்தைச் சேர்ப்பதன் மூலம் உண்டாகும் செயற்கைக் கொழுப்புத்தான் 'வனஸ்பதி' என்ற நாமத்தில் ஏழைமனிதனின் நெய்யாக உலவுகிறது. மேலே சொன்னதுதான் வனஸ்பதி தயாரிப்பதில் உள்ள முக்கிய தத்துவம்.

அடுத்தபடியாக, விலை சரசமாக உள்ள இந்த செயற்கைக் கொழுப்பு எல்லாக் குணங்களிலும் இயற்கைக் கொழுப்பை ஒத்திருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். கொழுப்பு (Fat) மனித உடலில் ஜீரணமாவதற்கு அதன் உருகும் சிதோஷ்ணம் 37°c அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும். தவிர எண்ணெயைத் திட பதார்த்தமாக மாற்றும் பொழுது, அதிலுள்ள எல்லாக் குணங்களும் மாறுபடாமல் அப்படியே இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். நீண்ட ஆராய்ச்சிகளுக்குப்பின் செயற்கை நெய் எல்லா விதங்களிலும் இயற்கை நெய்யை ஒத்திருப்பதாகக் கண்டு பிடிக்கப்படவே, செயற்கைக் கொழுப்புச் செய்யும் தொழிலானது இந்தியாவில் முன்னேற ஆரம்பித்து, சுமார் 30 கோடி ரூபாய் பெறுமான வனஸ்பதி உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். நெய்ப் பஞ்சத்தை இந்தியாவினின்றும் ஒழிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அரசாங்கம் இன்னும் 40 கம்பெனிகள் உண்டுபண்ணப் பண உதவி செய்யத் திட்டம் போட்டு, 1950க்-குள் நெய்ப் பஞ்சம் ஒழிய ஒத்தாசை செய்வதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் 'நல்ல காரியத்திற்கு எப்பொழுதுமே தடங்கல்கள்' ஏற்படுவது போல, சிலர் முட்டுக்கட்டை போட ஆரம்பித்தனர். இயற்கை நெய் வியாபாரம் செய்பவர்கள் தங்களுடைய வியாபாரம் குறைந்து தங்கள் வியாபாரத்தின் வாயில் மண் விழுந்துவிடும் என்று கதறினர். இதே சமயத்தில் புனாவிலிருந்தும், இஸாட் நகரத்திலிருந்தும் (Izatnagar) சில ஆராய்ச்சியாளர்கள் வனஸ்பதியை உபயோகிப்பதின் மூலம் சிலகாலத்திற்குப் பின் கண் பார்வை போய்விடும் என்று கூக்குரலிட ஆரம்பித்தனர். இந்த விஞ்ஞானிகள் கூறுவதில் கொஞ்சம் உண்மை இருக்கலாம். ஏனெனில் இவர்கள் ஆராய்ந்த 'வனஸ்பதி' சுத்தமாக இல்லாததுதான் காரணமாகும். பண ஆசை கொண்ட சில முதலாளிகள் செயற்கைக் கொழுப்புச் செய்யும் பொழுதே சில மலிவான கடின பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கலந்து விடுகின்றனர். இன்னும் சிலர் செயற்கைக் கொழுப்பைச் சிறந்த முறையில் நேர்மையாகச் செய்வதில்லை. ஆகவே வனஸ்பதி கெட்டு விடுகிறது. இது மாதிரி மோசமான, தீமைவிளைவிக்கும் கலப்பின் மூலம் தான் இந்தத் தொழிலும், இது போன்ற இதர தொழில்களும் இதுவரை முன்னேறாமல் தடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே அரசாங்கத்தார் சிறந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு பம்பாய், பெங்களூர், கல்கத்தா, கூனூர் முதலிய இடங்களில் வனஸ்பதியைப் பற்றி ஆராய்ச்சி நடத்தச் சொல்லியிருக்கின்றனர். இந்தத் தொழிலின் கதி மேற்குறித்த ஆராய்ச்சியின் முடிவைப் பொறுத்திருக்கிறது.

ஒரு ஆராய்ச்சியில் எலிகளுக்கு (White rats) அனேக விதமான ஆகாரங்களோடு இந்தச் செயற்கை நெய்யையும் சேர்த்துக்

கொடுத்து, அவைகளினிடையே உண்டாகும் மாறுதல்களையும், அவைகளுக்குப் பிறக்கும் குஞ்சுகளுக்கு உண்டாகும் மாறுதல்களையும் மூன்று தலைமுறைக்குக் கண்டு பிடிக்கப் போகின்றனர்.

மற்றொரு ஆராய்ச்சியில், 15 வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு வனஸ்பதியால் ஆகிய ஆகாரங்களைக் கொடுத்து, அவர்களின் தேக சுகம் பாதிக்கப்படும் விதத்தையும், வபை, புரதம் முதலியவை அவர்களின் உடலில் மாறுபாடு அடையும் விதத்தையும் (Metabolism of Fat, Proteins etc.) ஆராயப் போகின்றனர்.

இந்த இரண்டு ஆராய்ச்சிகளின் மூலமும் கெடுதல் ஒன்றும் இல்லை என்று தெரிந்தபின் தான், இந்தத் தொழிலை வளர்ச்சியடையச் செய்யப்போகின்றனர். இந்த ஆராய்ச்சிகள் முடியும் வரையில் தற்காலிகமாக வனஸ்பதி தொழிலாளர்களுக்குக் கீழே கண்ட இரண்டு விதிகளை அனுசரிக்குமாறு அரசாங்கத்தார் உத்தரவிட்டு இருக்கின்றார்கள்:—

1. செயற்கை நெய்யின் உருகும் சீதோஷ்ணம் (Melting point) 37°c குறைந்து இருக்கவேண்டும்.

2. அதில் 5 சத விகிதம் நல்லெண்ணெய் (Seasame oil) கலந்து இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கலப்பைக் கண்டு பிடித்து விடலாம்.

இந்தச் சமயத்தில் வனஸ்பதி தொழில் முன்னேற, பங்களூர் இரசாயனக்கூடத் தலைவர் டாக்டர் வி. சுப்பிரமணியம் (Dr, V. Subramaniam, Head of the Biochemistry Department, Indian Institute of Science, Bangalore) கூறியிருக்கும் யோசனை குறிப்பிடத்தக்கதாகும். அவர் சரசமாகக் கிடைக்கும் பல எண்ணெய்களை ஒன்று சேர்த்து, க்ளைஸரைட்ஸ்களை (Glycerides) அதிகப்படுத்தி, திடமாக்கி, வெளியிலிருந்து விடமின் A, D (Vitamin A and D)-களைச் சேர்த்தால், அது சிறந்த மாறு நெய்யாகும் என்று நினைக்கின்றார்.

ஆகவே வனஸ்பதித் தொழில் முன்னேற வேண்டுமாயின், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்தி, கிடைக்கும் பல்வேறு எண்ணெய்களைக் கொண்டு சிக்கனமான முறையிலும், கெடுதல்கள் இல்லாமலும், சிறந்த முறையிலும் தயார் செய்து, அவைகளில் மனித உடலுக்குக் கெடுதல் செய்யும் வஸ்துக்கள் உள்ளனவா என்று ஆராய்ந்து, பின்னர் மிருகங்களுக்கு (Rats etc) வெகுகாலம் கொடுத்து, அவைகளின் தேக சுகம் கெடுகிறதா, இல்லையா என்று ஆராய்ந்த பின்தான் மக்கள் உபயோகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அதிகப் பண ஆசைப் படாமல் சுத்தமான பொருளை உற்பத்தி செய்வதுடன், ஒவ்வொரு தடவையும் அது சுத்தமாயிருக்கிறதா என்று பரிசோதனை நிலையங்களில் ஆராய்ந்து பின்னர் ஜனங்களின் உபயோகத்திற்கு அனுப்பினால்தான், நம் மக்களுக்கு நம் நாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களில் நம்பிக்கை உண்டாகும். அப்பொழுதுதான் இந்திய கைத்தொழில் ஓங்கும்! எவ்வளவுதான் இந்திய கைத்தொழில் முன்னேற அரசாங்கம் உதவி செய்தாலும், மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும் வரை அவர்கள் வெளி நாட்டைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பர்.

ஆகவே முதலாளிகள் செய்யவேண்டியதெல்லாம், அவர்கள் உற்பத்தி செய்யும் செயற்கைக் கொழுப்பில் உடலுக்குத் தீங்கு செய்யும் தன்மை ஏதும் இல்லை என்று மக்களும், அரசாங்கமும் உணரும் முறையில் பொருள்களை உற்பத்தி செய்வதே. இந்த விஷயத்தில் இந்திய முதலாளிகள் சிரத்தை காட்டுவார்களாயின், என் தர்ம பத்தினியைப்போன்ற குடும்பஸ்திரீகள் வனஸ்பதியைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்ராயத்தை உண்மையாக்குவதோடல்லாமல், நம் நாட்டில் நெய்ப் பஞ்சம் ஒழிய உதவுவோர்களாவார்கள். அப்பொழுது ஒன்றுக்கு 10 டின்களாக வாங்கி, அவர்களின் பணப்பை பெருக என்னைப்போன்ற கிருகஸ்தர்கள் தயாராயிருப்பார்கள் என்று முதலாளி வர்க்கத்திற்கு உறுதி கூறுகிறேன்.

# கழுவேற்றிய கனவு

**வே. ரங்கராஜன்**

"நந்தபாலா! ஏன் நகைக்கிருய்?" என வினவினுர் ஆனந்தர். மறைவாகச் சிரித்ததை குரு அறிந்துகொண்டாரே என்று நந்தபாலர் துணுக்குற்ருர். அவரால் சரியாகப் பதில் கூறமுடியவில்லை. மனதில் எழுந்த எண்ணங்கள் குழம்ப, "...... இல்லை ...... இப்பரந்த வெளியிலே தாங்கள் புத்தவிகாரம் நிர்மாணம் செய்ய நினைப்பது......" என, மேலே சொல்லலாமா? வேண்டாமா? என்ற குறிப்புடன் ஆனந்தரைப் பார்த்தார்.

"உணர்கிறேன். தோட்டம் நிலைப்பதற்குள் தென்னம் பிள்ளைகள் வாங்குவதைப் போலவோ, ஆண்டிகள் கூடி மடம் கட்ட எண்ணுவது போலவோ இருக்கிறதல்லவா?"

"மன்னிக்கவேண்டும்!...... அவ்வித எண்ணங்கள்தான் என் மனதில் எழுந்தன!" என்ருர் நந்தபாலர், வினயத்துடன்.

மகவின் மனதை அறியும் தாயைப் போல் சீடரின் உள்ளத்தை அளந்து வைத்திருந்தார், குரு. தம் எண்ணத்திற்கு முரணுன எண்ணம் கொண்டதற்காக அவர் சினங்கொள்ளவில்லை. நந்தபாலரின் வயதிற்கும் அனுபவத்திற்கும் உரிய சிந்தனை அதுதான் என்பதை அவர் உணர்ந்திருந்தார். பரிபக்குவம் அடைந்த குருவின் நிலையுடன் உயர்ந்து நின்று பேசுவதைப் போல் பாசாங்கு செய்யாது தம் மனதில் எழுந்ததைப் பளிச்சென்று சொன்னதில் அவருக்குச் சற்று திருப்தியுங்கூட.

"நந்தபாலா! முட்செடியும் கருவேல மரங்களும், மேடும் பள்ளமுமாக உள்ள இப்பரந்த வெளியிலே புத்த விகாரம் தோன்றப்போவதும், பிக்ஷுக்கள் கூடி தர்மமும் சாந்தியும், அன்பும் அருளும் வளர்க்கப்போவதும் உண்மை. நம் வேத கால முனிவர்கள் நினைத்ததைச் செய்ய வல்லவர்கள் என்று நீ கேள்விப்பட்டதில்லையா?"

"ஆம், இப்போது அவை....."

" 'கனவாய், மெல்லப் பழங்கதையாய்ப் போயினவே!' என்று சொல்லப் போகிருய்!—இல்லை. இமயம் உள்ள அளவும்......புத்தர் பெயர் நில உலகில் நிலைத்திருக்கும் வரையிலும்...... மனிதனும் மலரவன் கணைகளும் உள்ள காலம் மட்டும் 'தவம்' என்றமார்க்கம் நிலைத்துத்தான் இருக்கும். நீயும் நானும் காவியுடை கட்டிக்கொண்டு நாட்டின் புறத்தே வெகு தொலைவில் உள்ள இவ்வெளியில் சுற்றிவருவது எதனுல்? யானை தன் சக்தியை உணர்வதில்லை. விஷய சுகங்களில் ஈடுபட்டு உழலும் மனிதனும் அப்படித்தான்!......" என்று சொல்லிக் கொண்டே கண்ணெட்டும் தூரத்தில் இருந்த பெரும் ஆலமரத்தைச் சுட்டிக்காட்டினுர், ஆனந்தர். தொடர்ந்து "அந்த மரத்தை உள்ளடக்கித்தான் விகாரத்தின் புறமதில் இருக்கவேண்டும்!" என்று சொன்னுர்.

"நல்லது. அந்தத் தனி மரம் நீண்ட காலமாக நின்றுகொண்டிருக்கவேண்டும்! அதன் அடி மரத்தையும், விழுதுகளையும் பார்த்தீர்களா!.........ஆனுல்......" என்று தயங்கினுர் நந்தபாலர்.

ஆனந்தர் தம் சீடரைப் பார்த்து முறுவலித்தார். 'ஏன் இந்தத் தயக்கம்? சொல்ல வேண்டுவதைச் சொல்லலாமே! நாம் சினங்கொண்டதுண்டா? சினம் துறவிக்கு நோயல்லவா!' என்பதை அவர் கண்கள் பேசாது பேசின. நந்தபாலர் வினயத்துடன், "அவ்வளவு விஸ்தாரமான இடம் வேண்டுமா? அதை உள்ளடக்கிக் கட்டுவதாயிருந்தால் பிரம்மாண்டமான விகாரம் நிர்மாணிக்க வேண்டுமே!" என்ருர்.

"ஆம்! சற்றுப் பெரிதாகவேதான் அமையும். அப்படி அமைய வேண்டு

மென்றுதான் நான் விரும்புகிறேன். குறைந்தது ஓராயிரம் பிக்ஷுக்களாவது தங்கியிருந்து தவம்செய்ய வசதி இருக்க வேண்டும்!''

"ஓ! அப்படியானால் வேண்டியதுதான் .........ஆனால்.........மன்னிக்க வேண்டும். பொறுக்கி எடுத்தால் ஒரு நூறுபேருக்கு மேல் உண்மைத் துறவுபூண்ட பிக்ஷுக்கள் கிடைக்கமாட்டார்களே! காவி உடுத்துப் புத்தர் பெயரைச் சொல்லிக் கொண்டு வயிறு வளர்ப்பவர்களை எல்லாம் வளைத்து மடத்தில் சிறை செய்யப் போகிறீர்களா? சரியான தண்டனை!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார், நந்தபாலர். ஆனந்தரும் புன்னகை செய்தார்.

"துறவிகளைப்பற்றி வேடிக்கையான கதை சொல்லுவதுண்டே, தெரியுமா?''

"'போலித் துறவு பூண்டவுடனேயே அரச குமாரியும் நாட்டில் பாதியும் கிடைத்தபொழுது, உண்மையாகவே துறவு பூண்டால் சுவர்க்கத்தில் எவ்வளவு சுகத்துடன் வாழலாம்!' என்று உண்மையாகவே துறவு பூண்ட வேஷதாரியின் கதையைத்தானே சொல்லுகிறீர்கள்!''

"ஆம்! இப்போது தமிழ் நாட்டில் சைவம் செழிக்க ஆரம்பித்துவிட்டது. பௌத்த பிக்ஷுக்களைச் சைவர் அவமதிக்கின்றனர். வெறும் வேஷதாரிகள் சிலரால் இது அதிகமாகிறது. ஓரிரு உண்மைத் துறவிகளும் மனிதரிடையே வசித்துப் புத்தரைப்போதிக்கக் கூசுகிறார்கள். இதற்குப் பரிகாரமாகத்தான் புத்த விகாரம் நிர்மாணம் செய்ய விரும்புகிறேன். விகாரத்தில் பிக்ஷுக்களுக்குச் சகல சௌகர்யங்களும் செய்துகொடுக்கப்படும். அத்துடன் அவர்கள் குறித்த ஒழுங்கு முறைகளுக்கும் வகுத்த நியதிக் கட்டுப்பாடுகளுக்கும் உள்ளாக வேண்டும். அதிகம் சொல்லுவானேன்? கயா விகாரத்தில் இருந்ததைப்போல் இருக்க வேண்டும்.—உண்மைத் துறவிகள் பதின்மருடன் கலந்து பழகினால் பல நூறு வேஷதாரிகள் மனதும் மாறக் கூடும். உடனடியாக மாறாவிட்டாலும், ஆசிரம வாழ்க்கையும் கட்டுத் திட்டங்களும் காலமும் மாற்றிவிடும்''.

"இருக்கலாம். ஆனால் கயாவில் ஏனோ எனக்குச் சாந்தி உண்டாகவில்லை; அங்கு குறைபாடுகளும் உள்ளன. குறிப்பாக, துறவுகாத்த குமரிகளின் கண்கள், வாடைக் காற்றில் அலமரும் தீபச் சுடரைப்போல் என் சிந்தையை அலக்கழித்தன. அதனால்தான் நான் தங்களைத் திரும்பும்படி அவ்வளவு துரிதப்படுத்தினேன். பிக்ஷுக்கள் குமரி பிக்ஷுணிகளுடன் கலந்து பழகியது எனக்கு உடன்பாடாக இல்லை. நாம் திரும்பும் வழியில் பராபரியாக, 'எல்லாம் வேஷமப்பா! காவிக்குள்ளே கன்னியை மறைத்துக்கொண்டு குடித்துக் கொம்மாளி போடுகிறார்கள்! புத்தர் இருந்தால் இதையெல்லாம் சகிப்பாரா?' என்று பாமரர் பேசிச் செல்லக் கேட்டோமே!''

"உணர்வேன். பூர்வாசிரமத்தில் இக்கட்டையும் அவ்வுணர்ச்சிகளுக்கு வசமானதுண்டு! அதனால் அது ஒரு பெருங் குறையல்ல. ஆசிரம வாழ்க்கையில் பெண்கள் இடையூறு அல்ல. உதவி என்று சொல்லவேண்டும். காபாலிக சைவ மதத்தில் 'மதுவும் மங்கையும் மயானனும்' என்று சொல்வார்கள்! அஷ்டாங்க சித்தியும் கைவரப்பெற்ற காபாலிக சந்நியாசி ஒருவர் பூர்வாசிரமத்தில் என்னைத் தம் சிஷ்யனாக்கிக் கொள்ள முயன்றார். அப்போது நான் அவரிடம் இம் முக்கோட்பாடுகளுள் நடுநாயகமான மங்கையைக் குறித்து என் ஐயத்தைக் கேட்டேன். அவர், "மனிதரின் மனம் சிருஷ்டியின் பீஜம். ஏனைய புலன்களை அடக்கி வசமாக்கிவிடலாம். மனம் தன் போக்கில் செல்வதில் மந்த கஜத்தைப் போன்றது; வசப்படாததில் காற்றைப்போன்றது; அறிவைச் சூழ்ந்து நின்றும் அந்தகாரத்திற்கு அழைத்துச் செல்லவே விரைவதால் நய வஞ்சக நண்பனைப் போன்றது! நாடி நாடி அலையும் பொருளை அப்புறப்படுத்திவிடுவதால் அது அடங்கிவிடாது.

'சீ; இது இவ்வளவுதான்!' என்ற கசப்பு உண்டாகவேண்டும். அதன்பிறகு மனம் அதை நாடாது. நாங்கள் இதைத்தான் சொல்கிறோம். நாங்கள் பௌத்தரையும் ஜைனரையும் சைவ வைணவத் துறவிகளையும்விட வெகு விரைவில் யோக சித்தி பெற்றுவிடுவது இதனால்தான்!'' என்று சொன்னார்.

"நான் அதை ஒப்புக்கொள்ளமாட்டேன். விளக்கு இல்லாத இடத்தில் விட்டில்கள் சாவதில்லை. 'சீ! இது தீ! இதை அணுகிச் செத்த நம் இனம் கோடானு கோடியல்லவா?' என்று அவை அணுகாமல் இருப்பதில்லை. இவ் விஷயத்தில் மனிதனின் புலன் பகுத்தறிவை எப்போதும் வென்றுவிடுகிறது... ஆகவே—"

'பொறு!' என்று சைகை செய்தார் ஆனந்தர். "நாம் வந்த காரியத்தை விட்டு வேதாந்த விசாரத்தில் இறங்கி விட்டோம்! இதைச் சாவகாசமாய்ப் பேசுவோம். காபாலிகர் கொள்கையும் தவறு, நீ சொல்வதும் பிழை. இதற்கு இடையிலே உள்ள நிலையான உண்மையை வேத உபநிஷத கால முனிவர்களும் நம் பௌத்த பிக்ஷுக்களும் கண்டுள்ளனர். அதைப் பின்பு விளங்கச் சொல்கிறேன். —அதோபார்! இங்கு நிர்மாணமாகப் போகும் விகாரத்திற்கும் வைகை நதிக்கும் இரண்டு நாழிகை நடைத்தூரம் இருக்குமல்லவா?"

"ஆம்! அவ்வளவுதான் இருக்கும். பார்வைக்குச் சற்றுத் தூரமாகத் தோற்றுகிறது. பழகினால் சரியாகிவிடும்!"

"நல்லது. இதுவே சரியான இடம். நெடுமாற பாண்டியனின் அனுமதிபெற்று விகார நிர்மாண வேலையைத் தொடங்க வேண்டியதுதான்!" என்று சொல்லி விட்டு ஆனந்தர் வந்த வழியே திரும்பத் தொடங்கினார். நந்த பாலர் பின் தொடர்ந்தார்.

## 2

ஆனந்தர் அறுபது வயது கடந்தவர், புத்த சங்கத்தில் சேர்ந்து துறவு பூண்டு நாற்பது ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. பஞ்சாயத்தார்களுடன் —(ஐம்புலன்)— முஷ்டியுத்தம் செய்து, ஓரளவு வெற்றி கண்டு, சாந்த சமநிலையை அடைந்து விட்டார். இனிமேல் அவர் சாந்திக்கு இடையூறு எதுவுமே இல்லை. வட நாட்டுக்கும், கடல் கடந்தும் சென்று பௌத்த புண்ணிய பூமிகளைக் கண்டு வந்துவிட்டார். தவவலியால் அவர் உடல் கட்டுக் குலையாமல் இருந்தது. மனதிலே தீவிர திட சங்கற்பமும் கர்மயோக வீர்யமும் நிலைத்து இருந்தன. அவர் பௌத்தபுண்ணிய யாத்திரை தொடங்கிய பொழுது தமிழ் நாட்டில் பௌத்தம் தழைக்கும் என்று நம்பிக்கை இருந்தது. ஆனால் முப்பது வருஷங்களுக்குப் பிறகு நிலை முற்றிலும் மாறிவிட்டது. சைவம் செழிக்கவும் பௌத்தம் க்ஷீணிக்கவும் தொடங்கிற்று. புத்த போதனையில் தீவிரப் பற்றுக்கொண்ட ஆனந்தர் மனதிலே இது பெரும் சோர்வை உண்டாக்கிற்று. புத்தமதம் தென்னாட்டில் நிலைக்க வேண்டுமானால் ஸ்திரமான ஆக்கவேலைகளைச் செய்ய வேண்டுமென அவர் எண்ணினார்.

கயா, அநுராதாபுரம் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ள புத்த சங்க மடங்களைத் தமிழ் நாட்டிலும் நிறுவ வேண்டுமென்று எண்ணினார்.

மதுரை, காஞ்சி, திருவாரூர் ஆகிய மூவிடங்களில் நிறுவவேண்டுமென்பது அவர் கனவு. முதல் காரியமாக மதுரையில் கட்டுவதற்குத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார். வடநாட்டில் இருந்த பௌத்த மடாலயங்கள் பொருள் கொடுத்து உதவும் நிலையில் இல்லை. அங்கு அவ்வப்போது அரசியல் மாறுதல்கள் நடந்து கொண்டிருந்தன. நடைமுறை நிர்வாகம் நடப்பதற்குத் தான் அம்மடாலயங்களுக்குப் பொருள் வசதி இருந்தது.

சைவமும் வைணவமும் தழைக்கத் தொடங்கியவுடன் பௌத்தர்களை ஆதரிக்கும் அரசர் தமிழ் நாட்டில் எவரும் இல்லை. இந்நிலையில் ஆனந்தர் ஒரு மகத்தான காரியத்தைத் தொடங்கியிருப்பது நந்த பாலருக்குச் சரியெனப் படவில்லை.

ஏனெனில் ஆனந்தரிடம் கேவலம் பத்துச் செப்புக் காசுகள்கூட இல்லை என்பது நந்தபாலருக்குத் தெரியும். அவர் காசு பணத்தை விரும்புவதில்லை; சேமித்து வைப்பதுமில்லை. ஓரிரு சமயங்களில் நீண்ட யாத்திரை தொடங்கியபொழுது நந்தபாலர் சில பொற்காசுகளைச் சேமித்து எடுத்துவர எண்ணியதைக் கண்டு ஆனந்தர் நகைத்தார். "மடியில் பாம்பைக் கட்டிக்கொண்டு அஜைசக்தி யோகம் செய்ய முயல்வாய் போல் இருக்கிறதே!" என்று சூசகமாகச் சொன்னார்.

அப்படி இருக்கும்போது புத்த விகாரம் நிர்மாணிப்பதென்றால் பெரும் பொருள் வேண்டுமே? பௌத்த பிக்ஷுக்களின்மீது மக்கள் கொண்டிருந்த நல்லெண்ணம் மாறிவந்த அக்கால நிலையில் யார் பொருள் கொடுப்பார்கள்? மக்கள் பொருள் உதவியும் அரசர் கொடை ஆதரவும் இன்றி மிகப் பிரமாண்டமான காரியத்தை எப்படிச் செய்து முடிப்பது? அதுவும் இன்னல்கள் மலிந்த சூழ்நிலையில்!— சைவரும் வைணவரும் முன்பே சைவப் பள்ளிகளும் வைணவ மடங்களும் நிறுவி, நான்மறையும் வாய்மொழியும் பரப்பி வந்த சமயத்தில்! — இவர்கள் சும்மா இருப்பார்களா?

* * *

ஆனந்தர் தீவிர சிந்தனையில் ஈடுபட்டு மௌனமாக நடந்தார். மாலைக் கதிரவன் மலைவாயை நோக்கி விரைந்துகொண்டிருந்தான்.

ஆனந்தரின் சீரிய தவ வொழுக்கத்தையும் கர்ம சக்தியையும் நந்தபாலர் அறிவார். அவர் செய்ய நினைத்த எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர் என்பதும் தெரியும். ஆனால் அவர் இப்போது கனவு காணும் காரியம் சக்திக்கு மீறியதாகப்பட்டது நந்த பாலருக்கு. பொன்னும், பொருளும், படையாட்களும் ஆக்கினையும் ஒருங்கேபெற்ற மன்னன் ஒருவன் மனம் வந்து செய்ய நினைத்தால் ஆகும்; அக் காரியத்தை ஆண்டி ஒருவனே செய்ய நினைத்தால்!

தம் மனதில் எழுந்த எண்ணங்களை நந்தபாலரால் மேலும் அடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. "நெடுமாறனிடம் இடம் யாசிக்கப் போவதாகச் சொன்னீர்களே! விகார நிர்மாணத்திற்குப் பெரும்பொருள் வேண்டுமே! பொருள் சேர்த்துக்கொண்ட பின்பு இடம் கோரினால் நல்லதல்லவா? இடம் பெற்றுப் பொருள் இன்மையால் திருப்பணி செய்யாமல் விட்டுவிட்டால் சைவரும் வைணவரும் பழித்துப் பேச இடமேற்படுமே!" என்று சொன்னார்.

சிந்தனை தோய்ந்த ஆனந்தரின் முகத்தில் மீண்டும் ஒரு இள நகை அரும்பி மறைந்தது. "நம் அரிய தவவொழுக்கம்


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

| | |
|---|---|
| ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:- | சென்ட்ரல் ஆபீஸ்:- |
| மாயவரம் | மதராஸ் |

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் ... | ரூ. 18,75,000 |
| ரிஸர்வ் பண்டு ... ... | ரூ. 10,00,000 |

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

இருக்கும்போது பணம்தானா கிட்டாப் பொருள்? தவத்தால் செய்ய முடியாதது எது? உனக்குப் பாடஞ் சொல்லிய "வேண்டிய வேண்டியாங்கு எய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப்படும்!" என்ற குறள் வாக்கியத்தை வெறும் சொல்லடுக்கு என்றா நினைக்கிறாய்? பணத்தை நாடி நாம் செல்ல வேண்டியதில்லை. பணம் நம்மை நாடி வரும். பணம் பண்ணும் வகையறியாது துறவு பூண்டவன் சுகி; வகை பல அறிந்து, துச்சமெனத் தள்ளி, விரதம் பூண்டவனே யோகி.—நாம் நிர்மாணிக்க விரும்பும் விகாரத்தைப்போல் நூறு கட்டி முடிக்கப் போதிய பொருள் மதுரை நகரிலே இருக்கிறது. நாம் மதுரை சென்று ஓரிடத்தில் தங்கி மருத்துவத் தொழிலை ஆரம்பித்தால் நாம் விரும்புவதற்குமேல் பொருள் குவித்துவிடலாம். எனக்குத் தெரிந்தவைகளை நானே சொல்லிக் கொள்வது தற்பெருமையாகுமென நான் இதுகாறும் ஒன்றும் கூறிக்கொள்ளவில்லை. புத்த பிக்ஷுக்களுடன் நீண்ட காலப் பழக்கத்தால் மனிதருக்கு அவசியமான சில காரியங்களைப் பழகிக்கொண்டிருக்கிறேன். அவைகளைச் சொல்கிறேன் கவனமாகக் கேள்!" என்று சொல்லி மேலும் நடப்பதை நிறுத்தி நந்தபாலரைத் திரும்பிப் பார்த்தார் ஆனந்தர். சாந்தம் தவழ்ந்த அவர் முகத்தில் அஸ்தமன சூரியனின் செவ்வொளி படர்ந்து பிரகாசிக்கவைத்தது.

நந்த பாலர் பயபக்தியுடன் குருநாதரைப் பார்த்தார். பொருள் சேர்க்க வழியும் இருக்கிறது என்றவுடனே அவருக்கு உற்சாகம் உண்டாகியது; ஆர்வம் துளிர்விட்டது.

நம்மைச் சுற்றியுள்ள பச்சிலை மூலிகை வகைகளைக் கொண்டு குஷ்டம் முதல் பிளவை நோய்வரை குணப்படுத்தும் ஆற்றல் எனக்குண்டு. நோய்களைச் சிருஷ்டிக்கவும் கூடும்; போக்கவும் கூடும்! மற்றது ஜோஸ்யம். ஏடுகளைப் படித்தும் பிக்ஷுக்களிடம் பாடங்கேட்டும் இதன் நுணுக்கங்களை அறிந்துள்ளேன். கை ரேகை பார்த்து நடந்ததையும் நடப்பதையும் நடக்கவிருப்பதையும் சொல்லக் கூடும். மற்றது ரசவாதம். வித்தை தெரியாமல் வேஷமிட்டு ஏமாற்றும் ரசவாதமல்ல. ரசவாதம் யோக சித்தியைப் போல் உண்மையானது; கடினமுமானது. அதுவும் செய்ய இக்கட்டையால் ஆகும். கடைசியாகக் காயகல்ப சிகிச்சை. இது பிக்ஷுக்களின் பாசுபதாஸ்திரம்! என்னைப் போன்று ஓரிருவரே அறிவர். இப்போது இதை அறிந்தவர் பாரதத்தில் எவரும் இல்லை. சாவக விகாரத்திலே நாக நந்தியடிகள் என்ற பிக்ஷு உள்ளார். அவர் அறிவார். அவரிடமே நான் சில ஐயங்களை நிவர்த்தித்துக் கொண்டேன். இவ்வித்தைகளால் பெரும் பொருள் திரட்ட முடியாதா? புத்த விகாரம் நிர்மாணிக்கும் ஒரு மாபெரும் நல்ல காரியத்திற்கு நான் எதைச் செய்யவும் தயங்கப் போவதில்லை!" என்று சொல்லி மௌனமானார் ஆனந்தர்.

நண்பனைப் போல் எளிமையுடன் பழகிய குருநாதர் மாசற்ற தவவொழுக்கத்துடன் கடினமான கலைகளையும் கற்று உணர்ந்து அடங்கியவர் என்பதை அறிந்ததும் நந்தபாலர் நாவடங்கி அவரைப் பின் தொடர்ந்தார்.

3

மறுநாள் மதுரை நகர் ராஜவீதி வழியே ஆனந்தரும் நந்தபாலரும் அரண்மனையினின்றும் திரும்பி வந்துகொண்டிருந்தனர். நெடுமாறனின் கம்பீரத் தோற்றமும், சைவ நெறி ஒழுகிய போதிலும் ஆனந்தரிடம் பேசிய பணிவும் தன்னடக்கமும் நந்தபாலருக்கு உற்சாகத்தையளித்தன.

தடையெதுவுமின்றி, ஆனந்தர் யாசித்த பிரதேசத்தைப் புத்தவிகார நிர்மாணத்திற்குத் தானம் செய்தான் நெடுமாறன். அரசனின் பெருந்தன்மையை ஆனந்தர் அறிவார். ஆகவே அவர் முகம் எப்போதும் போல் சலனமற்று, துக்கமும் மகிழ்ச்சியுமற்ற ஓர் நிலையில் இருந்தது. இராஜவீதியிலே ஓர் விடுதியில் வைத்தியசாலை வைத்து அதன் மூலம் பொருள் திரட்டவும் அரசரின் அனுமதி வேண்டினார்.

நெடுமாறன் சற்றுச் சிந்தித்தான். மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்தான். பிறகு அனுமதி வழங்கினான்.

ஆனந்தர் மருத்துவச்சாலை அமைப்பதைக் கேள்விப்பட்ட பௌத்த பிக்ஷுக்கள் அவரிடம் வந்து குழுமினர். ஆனந்தர்

அவர்களை இனிய முகத்துடன் வரவேற்று, தனித்தனியான பொறுப்புக்களை வரையறை செய்து கொடுத்தார். மருத்துவச் சாலையின் வரவு செலவு கணக்குகளை நிர்வகிக்கும் பணியை நந்தபாலருக்களித்தார்.

4

மருத்துவச் சாலையின் பெயர் மதுரை நகர் எங்கும், பாண்டி நாடு முழுதும், சோழ சேர நாடுகளிலுங்கூடப் பரவியது. கண் வைத்தியம் செய்வதில் ஆனந்தரின் திறமையைப் புகழ்ந்தனர். இழந்த கண்ணொளியை மீண்டும் பெற்ற ஏழைகள் புத்துயிர் பெற்றவர்களைப்போல் ஆனந்தரின் பாதங்களில் விழுந்து வணங்கிவிட்டுச் சென்றனர். 'கண்கண்ட தெய்வமல்லது வேறு தெய்வம் வேண்டோம்!' என்று சொல்லிப் பௌத்த மதத்தில் சேர்ந்துகொண்டனர் சிலர்.

மதுரைப் பெருங்குடி வணிகர் மருதனார் தம் நாற்பதாவது வயதிலே கண்ணொளியிழந்தார். மிக அருகில் உள்ள பொருள்கள்தாம் அவர் கண்களுக்குப் புலனாயின. மருத்துவர் பலர் சிகிச்சை செய்தும் குணம் காணவில்லை. இதனால், அரசருக்கு நிகரான பெருஞ் செல்வம் படைத்த மருதனாருக்கு வாழ்விலே ருசியில்லை. கடவுளை வழிபட்டுக் கண்ணொளி வேண்டிக் கரைந்தார். மதுரைக் கோவில் முழுதும், கோபுரங்களிலும், விளக்கெண்ணெய் இடும் திருப்பணியைத் தாம் செய்வதாக ஏற்றுச் செய்துவந்தார்.

ஆனந்தரின் நேத்திர சிகிச்சை பலன் தருவதாகக் கேள்வியுற்ற மருதனார் தம் மாளிகைக்கு வந்து சிகிச்சை செய்யுமாறு அவரை வேண்டினார்.

கண்களைப் பரிசோதித்து, "நாளை மூலிகை பிழிந்து கட்டுகிறேன்!" என்று சொன்னார் ஆனந்தர்.

'எத்தனை கட்டுக்கள்! பிழிந்த மூலிகைச்சாறு கொஞ்சமா? என்னமோ பார்ப்போம்!" என்று நினைத்தபோதிலும், "ஆகட்டும், கட்டாயம் வாருங்கள்! என் கண்ணொளிக்குத் தங்களையே நம்பியுள்ளேன்!" என்று உபசாரமாகச் சொன்னார் செட்டியார். வியாபார விவகாரங்களில் அப்படிப் பேசிப் பேசிப் பழகிய அவரால் இதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மருதனார் சம்பிரதாயமாகச் சொன்ன போதிலும் ஆனந்தரின் மனதிலே அவை ஆழப் பதிந்தன. அவருடைய நெற்றி நரம்புகள் புடைத்தன. காற்றின் சலனமற்ற கர்ப்பக் கிரகத்தினுள்ளே நிலையாகக் கூம்பி நின்று எரியும் தூங்கா விளக்கின் சுடர்போல, மனம் ஒரு முகமாக நிலைத்துச் சிந்திக்கத் தொடங்கியது.

மருத்துவச் சாலைக்குச் செல்லும் திசையை விடுத்து சிறுமலைக் காட்டை நோக்கி நடந்தார். சூரியன் அஸ்தமிக்க இன்னும் இரு நாழிகை இருந்தன. புத்த பகவானின் கிருபையால் போலும், ஆனந்தர் குறிப்பாகத் தேடிச் சென்ற அபூர்வ மூலிகை அவர் கண்முன் தென்பட்டது.

மூலிகைச் செடியருகில் அடையாளமாகத் தம் கைக் கம்பை நட்டுவிட்டு, வேறு பல மூலிகைகளைச் சேகரிக்கத் தொடங்கினார். மருத்துவ சாஸ்திர ரீதியிலே ஒவ்வோரு மூலிகையையும் சேகரித்ததில் கால தாமதமாயிற்று. அஸ்தமன மானவுடன் தம் கைக் கம்பு நட்ட இடத்திற்கு வந்தார், நகம் பட்டுச் சிதில மாகாமல் அச்செடியை வேருடன் பெயர்த்து எடுத்துக்கொண்டு, இருட்டு முன் மதுரை அடைய வேகமாக நடந்தார்.

மறுநாள் காலை மருதனார் மாளிகை சென்று அவர் கண்களில் பச்சிலை பிழிந்து, கட்டும் கட்டினார். மூன்றும் நாள் கட்டவிழ்த்தவுடன் மருதனார் ஆனந்தத்தில் மெய்மறந்துபோனார். "புத்த பகவானின் கருணையே கருணை!" என்று வியந்தார். "என் கண்ணொளியை அளித்தது போல் ஆத்மவொளியையும் கொடுத்து, பிறவிக் கடலைக் கடக்க அருள் புரியுங்கள்!" என்று சொல்லி ஆனந்தரை வேண்டினார்.

மறுநாள் மதுரை நகர் முழுவதும் மருதனார் புத்த மதத்தில் சேர்ந்துவிட்ட செய்தியே யாவர் வாயிலும் பேச்சாக இருந்தது. மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலயத்திற்குத் தீபமிடும் திருப்பணியை அன்றுமுதல் நிறுத்திவிட்டார் மருதனார். ஆனந்தரின் வேண்டுகோளுக்கிணங்க, புத்த விகாரத் திருப்பணிக்கு ஆவனவற்றைச் செய்வதாக வாக்களித்தார். பூர்வாங்க வேலைகளும் மறுநாள் ஆரம்பமாயின.

சைவ மடங்களுக்கும் வைணவ மடங்களுக்கும் இச்செய்தி பரவிற்று. மீனாக்ஷி

ஆலயத்திற்குத் தீபவொளி இல்லாமல் போனதைப்பற்றி வைணவர்கள் உள்ளூர சந்தோஷப்பட்டுக்கொண்டனர். ஆனால் நிலைமை இப்படியே போனால்?......என்ற பயமும் அவர்களுக்கு எழுந்தது.

திடீரென மருதனார் எண்ணெய் வார்ப்பதை நிறுத்தினதால் அன்று மதுரைக் கோவில் இருண்டு கிடந்தது. கர்ப்பக்கிரகத்தில் இருந்த தூங்கா விளக்கு மட்டுமே எரிந்துகொண்டிருந்தது.

'என்ன அக்கிரமம்? நாம் முதலில் சந்தேகித்தது சரியாகவே போயிற்று!' என்று சைவர்கள் ஆர்ப்பரித்தனர். மருதனார்மீது அவர்கள் கோபப்படவில்லை. அந்த வஞ்சக ஆனந்த பிக்ஷுவின் "சூழ்ச்சி"யை அவர்கள் வெறுத்தார்கள்.

அன்றே, சைவர் தனியேயும், வைணவர் வேறுமாக, நெடுமாறனிடம் முறையிட்டனர்! உடனே ஆனந்த பிக்ஷுவின் மருத்துவச் சாலையைக் கலைத்துவிட வேண்டுமென்று விஞ்ஞாபித்தனர். அரசன் செவி சாய்த்து, ஆவன செய்வதாக வாக்களித்தான்.

பின்னும் இரண்டு நாட்களில் எதிர்பாராத சம்பவமொன்று நிகழ்ந்தது. 'கலைச் செல்வி, கணிகையர் திலகம், அழகுக்கு அழகுசெய்யும் ஆரணங்கு' என்று பல்லோரும் புகழ்ந்த தாசி மீனாக்ஷியின் செய்தி அது.

செல்வம் கொழித்து வாழ்ந்தாள் தாசி மீனாக்ஷி. பொன்னும் மணியும் நவரத்தினங்களும் பேழை பேழையாக வைத்துக்கொண்டு அவள் வாசலில் காத்து நின்றனர் காமுக வணிகர். அவர்களை அவள் அலக்ஷியமாகப் பார்ப்பாள். மனமிருந்தால் வரவேற்பு; இல்லாவிட்டால் அவமதிப்பு. சுவர்க்க வாசல் கதவு திறந்து உள் நுழையும் பேரானந்தம் அடைந்தனர் அவள் மாளிகையுள் செல்லும் காமுகர்.

அத்தகைய மீனாக்ஷிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! அவள் மாளிகை ஹதாகதப்பட்டது. உடையொரு கோலமாய், தலைவிரி மேனியளாய் ஆகாத வார்த்தைகளைப் பேசி ஆர்ப்பரித்தாள் அவள்.

மதுரை நகரிலே பெயர் பெற்ற மாந்திரீக தாந்திரீகர்களை அழைத்து வைத்தி



யம்செய்து பார்த்தாள் மீனாக்ஷியின் தாய். ஒரு வாரகாலம் செய்தும் பலன் இல்லை. நாளுக்கு நாள் பைத்தியம் மிகுந்து சகிக்க முடியாத நிலைக்குப் பெருகியது. பைத்தியம் கண்டது தெய்வக் குற்றமோ என்று ஐயுற்றாள் தாய். சைவப் பெரியார்களிடம் சென்று தன் மகளைக் குணப்படுத்தும்படி வேண்டினாள். "அது அவள் கர்ம பலன். அனுபவிக்கத்தான் வேண்டும்! தேவார திருவாசகங்களைப் பாடி சிவபூஜை செய்து வா! குணமாகலாம்!" என்றனர்.

வைணவப் பெரியார்களிடம் சென்று தன் மகளின் பித்தம் தெளிவிக்கும்படி கேட்டாள். "நீச காரியங்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட அவள் உடல் தீண்டாத சரீரத்திற்குச் சமமானது. ஆகவே நாங்கள் நெருங்கியோ தீண்டியோ வைத்தியம் செய்வதற்கில்லை. நூற்றெட்டுத் திருப்பதிகளுக்கும் அழைத்துச் சென்று புண்ணிய புஷ்கரிணிகளில் ஸ்நானம் பண்ணி வை. பித்தம் தெளியும்!" என்றனர்.

ஓடிந்த உள்ளத்துடன் திரும்பும் பொழுது அவளுக்கு ஆனந்த பிக்ஷுவின் நினைவு வந்தது. அவருடைய மருத்துவச் சாலைக்குச் சென்று, தன் மகளின் பித்த நிலையைக் கூறினாள். அத்துடன் மற்ற வைத்தியர் மாந்திரீகர் சிகிச்சை எதுவும் பலனளியாமல் போனதாகவும் சைவ வைணவப் பெரியார்கள் கைவிரித்து விட்டதாகவும் சொன்னாள்.

ஆனந்தர் அவளுடன் சென்று மீனாக்ஷிக்குச் சிகிச்சை செய்தார். ஓர் உலர்ந்த வேரைச் சுட்டு அதன் புகையை மோக்கும்படி செய்தார்.

ஒருவார காலத்தில் மீனாக்ஷி பழைய நிலையை அடைந்தாள். இச் செய்தியும் இத்துடன் மீனாக்ஷியும் பிக்ஷுணியாக மாறி, தன் சொத்து முழுவதையும் புத்த விகார நிர்மாணத்திற்குத் தானம் செய்து விட்ட சேதியும் மதுரை நகர் முழுதும் வாய்மொழியாகவே உடனே பரவின. ஒற்றர்களின் மூலம் அரசர் செவிக்கும் எட்டியது.

5

சைவரும் வைணவரும் ஒன்று சேர்ந்து ஆனந்த பிக்ஷுவின் "சூழ்ச்சி" நாளுக்கு நாள் அதிகரிப்பதாக நெடுமாறனிடம் புகார் செய்தனர். மருத்துவச் சாலையை உடனே கலைத்துவிட வேண்டுமென்றும், புத்தவிகாரம் நிர்மாணம் செய்ய வாக்களித்த நிலத்தையும் மறுத்துவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

அந்தரங்க மந்திராலோசனை கூட்டுவித்து ஆலோசித்தான் நெடுமாறன். மந்திராலோசனையின் முடிவின்படி ஒற்றர் தலைவர் ஆந்தையாரை உண்மை கண்டு உரைக்கும்படி ஏவினான் அரசன்.

* * *

இதைக் கேள்வியுற்ற சைவப் பெரியார்களும் வைணவ முதியவர்களும் கூடி ஆலோசித்தனர். "சூழ்ச்சி"யைச் சூழ்ச்சியால் வெல்லவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

பௌத்த பிக்ஷுவாக இருந்து பின் சைவப் பண்டாரமாக மாறி நாவுக்கரசர் மடைப்பள்ளியில் வேலைபார்த்து வந்த பரமசிவத்தை, கீலக பிக்ஷுவாக மாற்றினர். அவன் செய்யவேண்டிய காரியத்தைத் தெளிவுபடச் சொல்லி, திறமையாகச் செய்துமுடித்தால் பெரிய சம்மானம் கொடுப்பதாகவும் சொல்லி அனுப்பினர்.

பரமசிவம் — கீலக பிக்ஷு — இது போன்ற வியவகாரங்களில் கைதேர்ந்தவன். இப்படி விஷமத்தனமான காரியங்களைச் சாதுர்யமாகச் செய்து முடிப்பதில் அவனுக்கு அலாதி ஆனந்தம். அது அவன் பிறவிச் சுபாவம். முன்பு பௌத்த பிக்ஷுவாக இருந்ததால் நடிப்பு இயற்கையாக அமைந்து விட்டது. ஆனந்தரும் மற்றப் பிக்ஷுக்களும் சந்தேகிக்க இடமின்றி மருத்துவச்சாலையில் பணி செய்யும் பிக்ஷுவாகச் சேர்ந்து கொண்டான்.

* * *

ஒருவார காலத்திற்குப் பிறகு, ஆந்தையார் தாம் நேரே கண்டவைகளை அரசரிடம் சொன்னார்.

ஆனந்தரின் மருத்துவச்சாலையில் கட்டாய மதமாற்றம் நடப்பது உண்மைதான் என்பதைத் தலைமை ஒற்றர் மூலம் அறிந்த நெடுமாறன் சினம் கொண்டான். ஆனந்த பிக்ஷுவையும் மற்றப் பிக்ஷுக்களையும் சிறை செய்து, மருத்துவச்சாலையை மூடிப் பூட்டிவிடும்படி கட்டளையிட்டான்.

மறுநாள் நீதி வழங்க அரியணை அமர்ந்தான் நெடுமாறன். அரச அவையிலே நகரப்பெருமக்கள் திரளாகக் கூடியிருந்தனர். பிரதம ஒற்றர் ஆந்தையார் சாதாரண சைவகுல வேளாளரைப்போல் நான்கு முழ வேஷ்டியும் மூன்று முழத் துண்டுடனும் நின்றிருந்தார். ஆனந்த பிக்ஷுவும் மற்றப் பிக்ஷுக்களும் இடப்புறம் நின்றிருந்தனர்.

நெடுமாறன் ஆந்தையாரை விளித்து, "ஐயா! உமது முறையீட்டைச் சபை அறியக் கூறலாம்!" என்றான்.

ஆந்தையார் மிக வினயத்துடன் கை கட்டி மெய் வணங்கி, "அரசே! நான் ஒரு ஏழைவேளாளன். சென்ற ஒரு வருஷ காலமாகச் சகிக்க முடியாத வயிற்று வலியால் கஷ்டப்படுகிறேன். உட்கொள்ளாத மருந்தில்லை; அனுசரிக்காத பத்தியமில்லை. என்ன செய்தும் வயிற்றுவலி நீங்கவில்லை. இப்படி இருக்கும்போது இதோ தங்கள் முன் நிற்கும் ஆனந்த பிக்ஷுவின் மருத்துவச்சாலையில் சகல வியாதிகளையும் குணப்படுத்தி விடுவதாகக் கேள்விப்பட்டுச் சென்றேன். மருத்துவச்சாலையில் என்னை அனுமதித்து மருந்து கொடுத்தார்கள். மருந்தை உட்கொண்டவுடன் வயிற்றுவலி அதிகமாயிற்று. என்னால் தாளவே முடியவில்லை. அதோ நிற்கும் சீலக பிக்ஷுதான் மருந்து கொடுத்தார்; அவரிடம் சொன்னேன். இதைக்கேட்ட அவர் சிடுத்து விழுந்தார். "ஆமாம்! அப்படித்தான் இருக்கும். புத்த மதத்தில் சேர்ந்துவிடுவதாகச் சத்தியம் செய்! இப்போதே வயிற்றுவலி நீங்கி விடும்படி மருந்து கொடுக்கிறேன்!" என்று சொன்னார். வலியின் கொடுமை தாங்கமாட்டாது நான் சத்தியம் செய்து கொடுத்தேன். பிறகு ஒரு மருந்து கொடுத்தார். வயிற்றுவலி உடனே நின்றது! இதுவே நடந்தது. இதை ஆலோசித்து நீதி வழங்க வேண்டுகிறேன்!" என்று வாக்கு மூலம் கொடுத்தார்.

குன்றென மலைத்து நின்றார் ஆனந்த பிக்ஷு. இருந்தும் அவர் வதனத்தில் புன்னகை தவழ்ந்தது.

அரசர் அழைத்து வினவுமுன் சீலக பிக்ஷு முன் வந்து நின்று, "அரசே, நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். கருணை கூர்ந்து மன்னிக்க வேண்டுகிறேன்!" என்றான்.

"ஆ! கோடரிக் காம்பே!" என்றார் ஆனந்தர். "துரோகி!" என்றார் நந்தபாலர். மற்றப் பிக்ஷுக்கள் திகைத்து நின்றனர்.

"ஆனந்த பிக்ஷு! நீர் கூற வேண்டுவது ஏதேனும் உண்டா?" என வினவினான் நெடுமாறன்.

"அரசப் பெருந்தகையே! கட்டாய மதமாற்றம் புத்தரின் அன்பு நெறிக்கே முரணானது. நான் அதைக் கனவிலும் நினைத்ததில்லை. ஆனால் சீலக பிக்ஷு செய்ததாக ஒப்புக்கொள்ளும் குற்றத்திற்கு நானே பொறுப்பாளி. இங்கே திரண்டுள்ள பிக்ஷுக்களின் குரு, மருத்துவச் சாலையின் தலைவன் என்ற முறையில் குற்றம் யார் செய்யினும் பொறுப்பு என்னுடையது. சேனதிபதி தோல்வியுற்றான் என்று யாரும் சொல்வதில்லை. அரசன் தோல்வியுற்றான் என்று சொல்வதுதான் உலக மரபு. இங்குள்ள பிக்ஷுக்கள் அனைவரையும் மன்னித்து விடுங்கள்! நான் தண்டனையை ஏற்கத் தயாராக உள்ளேன்!" என்றார் ஆனந்தர்.

"புத்தம்! சரணம்!—குருவே! சரணம்!" என்று முணுமுணுத்தனர் மற்றப் பிக்ஷுக்கள்.

"பிக்ஷுக்கள் அனைவரையும் விடுவித்துள்ளேன். இன்னும் ஒருவார காலத்திற்குள் அவர்கள் பாண்டி நாட்டைக் கடந்துவிடவேண்டும். ஆனந்த பிக்ஷு நாளை உதயத்தில் கழுவேற்றப்படுவார்!" என்று நீதி வழங்கினான் நெடுமாறன்.

"குருவே சரணம் கச்சாமி!
குருவே சரணம் கச்சாமி!"

என்று பிரலாபித்தனர், பிக்ஷுக்கள்.

"சிவோகம்! சிவோகம்!" என்று ஆர்ப்பரித்தனர், சைவர்கள்.

"நாராயண! நாராயண!" என்று சந்தோஷித்தனர், வைணவர்.

* * *

ஆனந்தர் கழுவேறிய கழுமரத்தின் கீழ்கிடந்த புத்தம் புதிய ஓலைத் துணுக்கு ஒன்றை எடுத்துச் சென்று அரசரிடம் சமர்ப்பித்தனர், கழுமரக் காவலர்.

அதில்,

"ஒற்றெற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினுல் ஒற்றிக் கொளல்!"

என எழுதப்பட்டிருந்ததைப் படித்த நெடுமாறன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

# கட்டழகி தவமணி தேவி தன் மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பைத்தான் நம்புகிறார்






அதிரூபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்க இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மைவாய்ந்த பூரணப் பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவறாமல் சுத்தம் செய்து கொள்ளும்படி உபதேசிக்கிறார்.

# லக்ஸ் டாய்லட் சோப்

*சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!*

LTS. 174-23 TM

# பக்த சிகாமணி ஸேனன்

**கலாதாஸன்**

மொகலாய சக்ரவர்த்தி அக்பரைப் பற்றிக் கேள்விப் படாதவர்களிருக்க மாட்டார்கள். விசாலமான மனதோடு கூடியவர். பிரஜைகள் இடத்தில் அன்புள்ளவர். மகம்மதியர்களையும், ஹிந்துக்களையும் ஒன்றுபோலாதரித்தவர். தமது ராஜ்ய காரியங்களில் ஹிந்துக்கள் அநேகம்பேர்கள் கலந்துகொள்ள இடங்கொடுத்தவர். அக்ரமமான ஜிஸியா முதலிய வரிகளை நீக்கினவர். இன்னும் அநேகவிதங்களில் அவரது பரந்த இதயமும் கூர்ந்த புத்தியும் வியக்தமாயிருக்கின்றன. ஒரு பெரிய மகான் என்று எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி ராஜ்யத்தை ஆண்டுவந்தார். அவரது மந்திரியாயிருந்த அபுல்பாஸல் (Abul Fuzal) எழுதியிருக்கும் நூலிலிருந்து அம்மகானுடைய அந்தரங்க விசேஷங்கள் வெளியாகின்றன. அவர் ஒரு யோகி என்றே கூறலாம். ராஜ்ய பரண காரியங்களில் செலவழித்தது போகப் பாக்கியுள்ள நேரங்களில் பலவித தத்துவ ஆராய்ச்சிகள் செய்து வந்தார். பற்பல மத நூல்களைப் படித்து, அவைகளுடைய ஆதாரக் கொள்கைகளையறிந்து, மதங்கள் வெளிப்படையாக வேறுபட்டிருப்பதாகத் தோன்றினாலும் உண்மையில் அப்படியல்ல, இறைவனை அறியப் பலவித வழிகள், எல்லா மதங்களுக்கும் உத்தேசமொன்றுதான் என்பதை உணர்ந்தவர். இதை ஜனங்கள் அறிந்து தங்களிடையில் உள்ள மதத்துவேஷத்தைப் போக்க வேண்டுமென்கிற உத்தம உத்தேசத்தோடு தின்இலாஹீ (Divine Faith) என்ற ஒரு கொள்கையை உபதேசித்தார். எல்லா மதங்களுக்கும் பொதுவாயுள்ள தத்துவங்கள் தாமிதற்கு ஆதாரமாயிருந்தன.

இந்த் மஹானுக்கு ஸகாயமாக இருந்து அவருடன் ஒத்துழைக்க அபுல் பாஸல், அபுல் பாலை என்று மந்திரி திலகங்கள் இருந்தார்கள்; பாஸல் பெரிய யோகி, ஞானி; பாலை பெரிய பக்தன், கவி. இவர் தவிர அரண்மனையில் சக்ரவர்த்திக்கு ஊழியம் செய்கிறவர்களில் சிலர்கூட அம்மகானுக்கேற்றபடி குணமடைந்திருந்தார்கள்.

அக்பருக்கு க்ஷவரம் செய்யும் வேலையில் நியமிக்கப்பட்டிருந்த ஸேனன் என்ற நாவிதன் ஒரு விசேஷ ஜீவன். பல ஜன்மங்களில் பாடுபட்டுழைத்து ஆத்ம பக்வத்தை ஸம்பாதித்தவன். உயர்ந்த கிருஷ்ண பக்தன். டில்லி நகரம் முழுவதுமவன் கியாதி பரந்திருந்தது. அவனுக்கேற்ற ஒரு பத்னியும் வாய்த்தாள். அவளும் நல்ல குணமுள்ளவள், ஈச்வர பக்தி நிறைந்தவள். ஸேனன் பெரிய யோகி. 'தான் கிருஷ்ணனுடைய ஸேவகன்; தான் செய்யும் சகல காரியங்களும் கிருஷ்ணனுடையவை' என்ற போதத்தோடு தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அவனுக்கே அர்ப்பணம் செய்தவன். அதனால்தான் என்ன செய்வதாயிருந்தாலும் அதை நன்றாக, விமர்சையாக, குற்றங் குறையில்லாமல் செய்து முடிப்பான்.

தினம் விடியற் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, ஸ்நானாதிகளைப் பூர்த்திசெய்து, தனது பூஜா கிருஹத்திற்குள் அமர்வான். இவனுக்கு முன்னாலேயே எழுந்து அவன் பத்னி அவனது பூஜைக்கு வேண்டிய சகல ஸாதனங்களையும் தயாராக வைத்திருப்பாள். தானும் ஸேனனோடுகூடப் பூஜையில் பங்குகொள்வாள். முறைப்படி பூஜைகளை முடித்துப் பலவித ஸ்தோத்திரங்களால் இறைவனைத் துதித்து, இருவரும் ஆனந்தத்தில் மூழ்குவார்கள். அதன் பிறகு அந்த அம்மாள் தனது கிருஹகிருத்யங்களைக் கவனிக்கச் செல்வாள். ஸேனன் தியானத்தில் அமர்வான். தியானம் முடிந்தபிறகு சக்ரவர்த்திக்குக் கைங்கர்யம் செய்வதற்கு அரண்மனைக்குப் புறப்படுவான். அவன் தொழிலுக்கு வேண்டிய கருவிகளுள்ள அடப்பத்தை அவன் பத்னி தயாராக எடுத்து வைத்

திருப்பாள். அதை எடுத்துக்கொண்டு தன் வேலைக்குச் செல்வான். சரியாக 9 மணிக்கு அரண்மனையில் தன் தொழிலுக்காக ஏற்படுத்தப்பட்ட அறையில் அவனைக் காணலாம். ஒரு நாளாவது இதில் தவறுவதே கிடையாது. கடிகாரம் போல் கணக்காக நடக்கும். தைலம், வெந்நீர், துவால் (Towel) முதலிய வைகளைத் தயாராக்கி வைப்பான். சரியாக 9½ மணிக்குச் சக்ரவர்த்தி வருவார். ஸேனன் தன் தொழிலை நடத்துவான், அவன் ஒரு யோகியானபடியால் அவன் செய்யும் காரியம் எல்லாம் முதல் தரமாகத்தானிருக்கும். ஒரு யோகியின் முக்யமான லக்ஷணமிது. பகவான் கீதையில் "योगः कर्मसु कौशल" என்று உபதேசித்திருப்பதின் அர்த்தம் இது தான். "செய்யும் காரியத்தைச் செவ்வனே செய்வது யோகம்" என்றார் கண்ணபிரான். இந்த உபதேசத்தைக் கைப்பிடித்தவன் ஸேனன்.

அக்பருக்கு ஸேனனிடத்தில் மிகுந்த அன்புண்டு. அவனுடைய வேலைத் திறத்தினால்மட்டுமல்ல, அவனுடைய உத்தம குணத்தால் அக்பருக்கு அவனிடத்தில் ஒரு விசேஷ பிரீதி ஏற்பட்டது. அவனுடன் அடிக்கடி பேசுவார். பல விஷயங்களைக் குறித்துக் கேட்பார்.

'இனம் இனத்தோடு' என்பதுபோல, நல்ல விசால மனதும் ஆத்ம பக்குவமுமுள்ள இரண்டு ஜீவன்கள் ஸந்தித்தால் கேட்பானேன். அந்தரங்கமாகச் சில யோக ரஹஸ்யங்களைப் பற்றிக்கூட பேசுவதுண்டு. ஸேனனிடத்தில் சக்ரவர்த்தி இத்தகைய அன்பு வைத்திருப்பது அரண்மனையில் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அக்காரணத்தினால் ஸேனன் மீது சில பேர்களுக்குப் பொறாமையுமிருந்தது.

தன் வேலை முடிந்தபிறகு சக்ரவர்த்தியோடு கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவரிடம் விடைப்பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்புவான். மாத்யான்னிக ஸ்நானம் செய்து, மாத்யான்னிக பூஜையை முடித்துக்கொண்டு போஜனம் செய்வான். பிற்பகலில் பல வித பாராயணங்கள் நடத்துவது வழக்கம். ஜனங்கள் கூடுவார்கள். அவர்களுக்குப் பாகவதம் முதலிய புராணங்களைப் படித்துப் பொருள் விளக்குவான். சாயந்திரம் பூஜை, பிறகு பஜனை. இந்தப் பஜனைக்கு ஏராளமாகக் கூட்டம் கூடும். அநேகம் பேர்கள் அதில் பங்கு கொள்வார்கள். மெய்மறந்து ஆடிப்பாடி ஆனந்த ஸாகரத்தில் மூழ்குவார்கள். தினம் தவறாமல் இப்படி நடந்துவரும்.

ஒரு நாள் வழக்கம்போல் காலையில் ஸேனன் தியானத்திலமர்ந்தான். தியானத்தில் மெய்மறந்து ஸமாதி நிலையையடைந்தான். உபாதிகளுடைய உணர்ச்சியைக் கடந்தான், தன்னிஷ்ட தேவதையிடத்தில் லயித்தான். வெகு நேரம் அப்படியே இருந்து விட்டான், தன் நினைவே இல்லை. அவனுடைய பத்னி பார்த்தாள், இவ்வளவு நேரம் இப்படி, தியானத்திலிருந்தது கிடையாது. பூஜாகிருஹத்திற்குச் சென்று நோக்கினாள். ஸேனனுடைய நிலையைக் கண்டாள். தன்னை மறந்து ஆனந்தத்தில் லயித்து ஸமாதியிலிருப்பதை அறிந்தாள். முகத்தி லென்றுமில்லாத ஒரு திவ்ய தேஜஸ் பிரகாசிப்பதைப் பார்த்தாள். கண்களில் ஆனந்த பாஷ்பம் நிறைந்திருப்பதையும் கண்டாள். ஒரு பக்கத்தில் சந்தோஷம், மற்றொரு பக்கத்தில் பீதி ஏற்பட்டது. "இப்படி தன்னை மறந்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும் பாக்யம் யாருக்குக் கிடைக்கும், என் நாதனுடைய பக்தி விசேஷத்தாலல்லவா இந்த அபூர்வ அனுபவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. அவர் பக்தியின் மஹிமையே மஹிமை. நான் என்ன பாக்யம் செய்தேன் இவரை என் கணவனாக அடைய!" என்று ஒருபுறம் சந்தோஷம். "ஆனால், அரண்மனைக்குப் போக நேரமாகிறதே, அங்கே குறித்த நேரத்திற்குப் போகாமற் போனால் என்ன ஏற்படுமோ" என்ற பயம் மற்றொரு புறம். "என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்தாள். என்ன வந்தாலும் சரி, தியானத்தைக் கலைக்கக் கூடாது. ஈசன் விட்ட வழி விடட்டும்" என்று தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டாள். ஆனால் மனது கேட்கிறதா? சஞ்சலப் பட்டுக் கொண்டே இருந்தது. உள்ளே போவதும், வெளியே வருவதுமாக இருந்தாள். ஒரு வேலையும் ஓடவில்லை. நேரம் ஆகஆக அவள் உள்ளம் துடிக்கத்

தொடங்கிற்று. "ஈசா, நீ தான் துணை. எனக்கொன்றும் தோன்றவில்லை" என்று அப்படியே அயர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

நிற்க, அரண்மனையில் வழக்கம்போல் 9 மணிக்கு வரும் ஸேனன் அன்று வரவில்லை. அரண்மனைக் காரியங்களைக் கவனிக்கும் அதிகாரி ஆச்சரியம் அடைந்தான், ஒரு நாளும் இப்படி நேர்ந்ததில்லை. "இருக்கட்டும், ஏதோ சக்ரவர்த்தி தன்னிடம் கொஞ்சம் பிரியமாயிருப்பதால் இவ்வளவு தென்பா, தைரியமா, துணிவா! இவனுடைய திமிரை அடக்க வேண்டும்," என்று எண்ணம் கொண்டு, மூர்க்கத்தனத்துக்குப் பெயர் பெற்ற இரண்டு சிப்பாய்களை உடனே சென்று, ஸேனனை கட்டிப் பிடித்து இழுத்துக்கொண்டு, வரும்படி உத்தரவு கொடுத்தனுப்பினான். அவர்களும் மிக்க உற்சாகத்துடன் புறப்பட்டார்கள். ஸேனன் வீட்டை அடைந்தார்கள். ஸேனன் மனைவி அவர்களைக் கண்டாள், திடுக்கிட்டாள், அவர்களுடைய அட்டகாசத்தைக் கண்டு நடுங்கினாள். "ஸேனன் எங்கே? உடனே வரச்சொல், க்ஷவரம் செய்து பிழைக்கும் இந்த மசகத்துக்கு இத்தனை திமிரா, எங்கே அவன்?" என்று கர்ஜித்தார்கள். பதில் சொல்லத் தெரியாமல் தத்தளித்து கொண்டு நிற்கும் அந்தப் பெண்மணி அவர்கள் கால்களில்விழுந்து கெஞ்சினாள். "எனது நாதன் ஈச்வரத்தியானத்திலிருக்கிறார், தம்மை மறந்து ஸமாதியிலிருக்கிறார். அவரை இந்தச் சமயத்தில் உணர்த்துவது சரியல்ல, மன்னிக்க வேண்டும்" என்று மன்றாடினாள். அந்த மூரடர்கள் அதைக் கவனிக்கவில்லை, உள்ளே நுழைந்தார்கள். அந்தச் சமயத்தில் ஸேனனுடைய தியானம் கலைந்தது. எழுந்து வெளியே வந்தான், அங்குள்ள காட்சியைக் கண்டான். உடனே நடந்ததென்ன என்பதை அறிந்து கொண்டான். சிப்பாய்களைப் பார்த்து "அப்பா, நான் செய்தது பெரிய தவறுதான். இந்தக் குற்றத்திற்குச் சக்கரவர்த்தி என்ன தண்டனை விதித்தாலும் அதை நான்


# MEHTA'S SPECIALITIES

***Well-known for their efficacy and Medicinal values***

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

ஏற்கவேண்டியதுதான்'' என்று கூறி, தன் பத்னியிடம் "இறைவன்மீது பாரத்தைப் போட்டு, அவனையே அடைக்கலமாகக் கொண்டு தைர்யமாக இரு'' என்று ஸமாதானம் சொல்லி, படர்களுடன் புறப்பட்டான். அவர்கள் ஸேனனது கைகளைப் பின்புறமாகச் சேர்த்துக் கட்டி விலங்கு போட்டு, தெரு வழியே இழுத்துச் சென்றார்கள்.

அரண்மனையில் சக்கரவர்த்தி வழக்கம் போல் ஒன்பதரை மணிக்கு க்ஷவரம் செய்வதற்கேற்பட்டுள்ள அறைக்கு வந்தார். அங்கு வழக்கம்போல் ஸேனனும் தைலம், வெந்நீர் முதலிய பொருள்களுடன் கத்தியை மூர்ச்சையாக்கிக் கொண்டு தன் வேலையைத் தொடங்கத் தயாராய் நின்றான். அரசன் ஆஸனத்தில் அமர்ந்தார், ஸேனனும் தன் பணியை நிறைவேற்றத் தொடங்கினான். ஸேனனுடைய கை அரசன் மீது பட்டமாத்திரத்தில் அரசனுடைய உடல் சிலிர்த்தது. ஏதோ ஒருவிதமான உணர்ச்சி ஏற்பட்டது. அந்த உணர்ச்சி மிக்க இன்பகரமாயிருந்தது. இது வரையில் இந்த மாதிரியான உணர்ச்சி ஏற்பட்டதில்லை. சக்கரவர்த்தி அதிசயித்தார். ஸேனன் முறைப்படி தன் வேலையைச் செய்தான். ஆனால் அன்று அவன் செய்யும் வேலையில் ஒருவித புதுத் திறம் தோன்றிற்று. வெகு நேர்த்தியாயிருந்தது. வேலை நடத்துவதே தெரியாதபடி அவ்வளவு மிருதுகரமாஸுக்காகவும் இருந்தது. சக்கரவர்த்திக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஸேனனைப்பார்த்து, "ஸேனா, இன்றைக்கென்ன விசேஷம்? உன் வேலை அபூர்வ சாமார்த்தியம் வாய்ந்திருக்கிறது. என் உடலில் இதுவரை நானுணர்ந்தறியாத ஒருவித புது இன்ப உணர்ச்சி உண்டாகிறது! ஏன் இது வரையில் இத்தகைய திறத்தைக் காட்டாமல் ஒளித்து வைத்திருந்தாய்?'' என்று கேட்டார். ஸேனனும், "அரசே, ஒன்றுமில்லை, எல்லாம் தங்களுடைய அபிமானம்தான்; தங்களுடைய விசால ஹிருதயந்தான்; தங்களுக்கென் மீதுள்ள அன்புதான் அதற்குக் காரணம்'' என்று சொல்லித் தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினான். அக்பரும் அடக்க முடியாத ஆச்சரியத்தோடு அந்தப் புது உணர்ச்சியில் மூழ்கி இருந்தார்.

தமது சந்தோஷத்தைக் காட்ட விரும்பி, தம் கையிலணிந்துள்ள கணையாழியைக் கழற்றி ஸேனனிடம் கொடுத்து, "எனது வெகுமானத்திற்கடையாளமாக இதை வைத்துக்கொள்'' என்று அக்பர் கூறினார். ஸேனன், "அரசே, தங்களுடைய அபிமான மெனக்குப் போதும். அதைவிடப் பெரிய பொருளொன்றுமில்லை. தங்கள் கணையாழியை நானணியத் தகுந்தவனல்ல'' என்று சொல்லியும், அரசன் பிடிவாதமாக "இதை நீ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று சொல்லி அந்தக் கணையாழியைத் தாமே அந்த ஸேனனது அடப்பப் பெட்டியில் வைத்தார். மேலும் ஸேனனை நோக்கி, "இந்தக் கணையாழியின் பெருமை எவ்வளவு என்று நான் சொல்லாமலே உனக்குத் தெரியும். இன்றைய தினம் நீ எனக்களித்திருக்கும் ஆனந்தத்திற்கு இதுகூடத் தகுந்த வெகுமதியாகாது'' என்றார். ஸேனன் வேலையிலீடுபட்டான். அரசன் தற்செயலாகப் பக்கத்தில் கீழே வைத்திருக்கும் தைலத் தாம்பாளத்தைப் பார்க்க நேர்ந்தது. அதில் ஸேனனுடைய பிரதி பிம்பம் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன் சக்கரவர்த்திக்குத் தூக்கிவாரிப் போட்டது. தலையை உயர்த்தி ஸேனனைப் பார்த்தார். எப்போதும் போலுள்ள ஸேனனைத்தான் கண்டார். ஆனால் பிரதி பிம்பத்தைப் பார்த்தாலோ, அதி சுந்தரமான உருவம்; நீல ஒளி நாலு பக்கமும் ஜ்வலிக்கிறது. கண்களைக் கவரும் படியான காந்தி, பெரிய மூர்க்கனையும் வசப்படுத்தி அவனது மூர்க்கத்தனத்தை யகற்றும் வசீகரமான புன்னகை, தலையில் ஜாஜ்வல்யமான நவ ரத்னங்களாலிழைத்த கிரீடம், நெற்றியில் அழகான திலகப் பொட்டு, ஹரிச்சந்தனம் பூசப்பெற்ற விசாலமான மார்பில் துவளும் வனமாலை, காதுகளில் லேசாக ஆடிக்கொண்டிருக்கும் குண்டலங்கள், புஜங்களில் பலவித கங்கணங்கள், இடுப்பில் மின்னும் பீதாம்பரம், கால்களில் சதங்கை, கையில் மட்டும் க்ஷவரம் செய்யும் கத்தி. இப்படிப்பட்ட அதிசயத்தைப் பார்த்தார், பிரமித்தார், மெய்மறந்தார், சித்தப் பிரமை கொண்டவன்போல் மேலும் கீழுமாக நோக்கினார். ஒன்றும் புரியவில்லை. அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

ஸேனனும் தன் வேலையை முடித்துக் கொண்டு, எப்போதும் போல் பொருள்களை ஒதுக்கி வைத்துவிட்டு, அவசரமாக வெளியே சென்றான். ஸேனன் சென்ற பிறகுதான் அக்பருக்கு ஸ்வய உணர்வு வந்தது. வழக்கமாக ஸேனன் வேலை முடிந்த பிறகு கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு போவது வழக்கம். அன்று திடீரென்று போனதால் அரசன் ஆச்சரியமடைந்து "ஸேனா, ஸேனா" என்று கூப்பிட்டார். ஸேனன் வரவில்லை.

அரசன் கூப்பிடுவதைக் கேட்டு வெளியில் நின்றுகொண்டிருந்த ஸேவகர்கள் உள்ளே ஓடிவந்தார்கள். வெளியிற் சென்ற ஸேனனை உடனே கூப்பிடும்படி அவர்களுக்கு உத்தரவிட்டார். அவர்கள் திகைத்து ஒருவரையொருவர் விழித்துப் பார்த்தார்கள்? "இப்போது தான் வேலையை முடித்துவிட்டு வெளியில் போனான், அதிக தூரம் போயிருக்க முடியாது. உடனே சென்று அழைத்து வாருங்கள்" என்றார் சக்கரவர்த்தி.

ஒரு சேவகன், கொஞ்சம் தயக்கத்துடன், "ஸ்வாமி, மன்னிக்க வேண்டும், இன்று ஸேனன் வேலைக்கு வரவில்லை. அவனையழைத்துவர ஆட்கள் சென்றிருக்கிறார்கள்" என்றான்.

அக்பர் ஆச்சரியம் கலந்த கோபத்துடன் "அடே, உனக்குப் புத்தி ஏதாவது தடுமாறுகிறதோ? ஸேனனாவது வரவில்லையாவது! வழக்கம் போல் வந்து வேலையைச் செய்து விட்டு இப்பொழுது தான் வெளியில் போனான். பயித்தியங்களே, இங்கே நிற்காதிர்கள், உடனே சென்று ஸேனனை அழைத்துவாருங்கள்," என ஆக்ஞாபித்தார்.

ஸேவகர்களும் ஒன்றும் புரியாமல் சென்று எல்லா இடங்களிலும் தேடினார்கள். ஸேனன் வரவில்லை என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனாலரசன் இப்படிச் சொல்லும் போது என்ன செய்வது? ஸேனனை ஓரிடத்திலும் காணோம். யாரைக் கேட்டாலும் ஸேனன் வரவில்லை, திரும்பிப் போகவுமில்லையென்று நிச்சந்தேகமாகச் சொன்னார்கள். கடைசியில் அரண்மனை அதிகாரியிடம் சமாசாரத்தைச் சொன்னார்கள். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "ஒருவேளை இன்று முன்னதாகவே ஸேனன் வந்துவிட்டானோ என்னவோ, நாம் கவனிக்காமலிருந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் ஒருவர் கண்ணிலுமா தென்படாமலிருப்பான்? அது முடியாத காரியம். மேலும் ஒருவேளை அவன் வந்திருந்தாலும் எப்படி நமக்குத் தெரியாமல் வெளியே போகமுடியும். ஏதோ சூதிருக்கிறது," என்று யோசித்துக்கொண்டே அக்பரிடம் சென்றான். தயங்கிக்கொண்டே ஸேனன் அன்று வேலைக்கு வராததைப் பற்றிப் பிரஸ்தாபித்தான். சக்கரவர்த்தி கோபம்கொண்டு, "நன்றாயிருக்கிறது, நீங்கள் அரண்மனையைக் காத்துக் கொள்வது! ஒருவன் வருவது, என்னுடனிருப்பது, பிறகு போவது, இது ஒன்றையுமே கவனிக்காத ஸேவகர்கள் நல்ல ஸேவகர்கள்! இவர்களை வேலையில் வைத்திருப்பதே தவறு. அதிருக்கட்டும் ஸேனன் எங்கே? அவனை இப்போது எனக்குக் காணவேண்டும், அரண்மனை விட்டு அவன் வெளியில் சென்றிருக்க முடியாது, இப்போதுதானிந்த அறையை விட்டு வெளிச்சென்றான். ஊம், ஜல்தி" என்று பரபரப்புடன் சொல்ல, அதிகாரியும் அக்பரைக் கூர்ந்து கவனித்தான். அந்த அறையில் க்ஷவர ஸாமான்கள் வைத்திருப்பதையும் பார்த்தான். அக்பருக்கு க்ஷவரம் செய்திருப்பதையும் வேலை தீர்ந்த பிறகு அந்த வேலைக்குரிய பொருள்கள் இருக்கப்பட்ட நிலையிலிருப்பதையும் பார்த்தான். மனதில் திகிலேற்பட்டது. ஸேனன் வந்ததைத் தாங்களறியாததுமன்றி அவனை இழுத்துவரச் சொல்லி, சிப்பாய்களை அனுப்பினதைப் பற்றிப் பயந்தான். என்ன நேரிடுமோ என்று கவலை கொண்டான். அரண்மனையில் எல்லா இடங்களிலும் ஸேனனைத் தேட ஆளனுப்பினான்; தானும் தேடினான். ஆனால் ஸேனனைக் காணோம்.

இந்தச் சமயத்தில் ஸேனனைக் கொண்டு வரச் சென்ற ஸேவகர்கள் வந்தார்கள். ஸேனனைக் கட்டியடித்துப் பலவித ஹிம்சைகளுக்குள்ளாக்கி இழுத்து வந்தார்கள். அரண்மனை யதிகாரிக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஸேனனது கட்டுகளை அவிழ்த்து, அவனை அரசனிடம் கொண்டு போனார்கள். "ஸேனா, வா, என்ன விசேஷம்? இன்று என்னிடம் விடை பெறாமல் போனாய்!" என்று அன்பு ததும்பும் மொழி


களால் ஸேனனை அரசன் அழைத்தார். எல்லாரும் அதிசயித்தார்கள். ஸேனனுக்குப் பயமேற்பட்டது. கோபம் கரை கடந்துபோனால் ஏளனமாக மரியாதை மொழி கூறுவது உலகவழக்கம். அந்த மாதிரி தன்மீதுள்ள கோபம் முற்றிப் போய் இப்படிப் பரிகாசம் செய்கிறார் அரசனென்று எண்ணி, ஸேனன் நடுங்கினான்.

"அரசே, அறியாத்தனத்தினால் இந்தப் பேதை செய்த பிழையை மன்னிக்க வேண்டும்" என்று தழு தழுத்த குரலில் தட்டுத் தடுமாறிக் கூறினான்.

கைகால்கள் நடுங்குகிறதையும், முகம் பயத்தினால் வெளுத்திருப்பதையும், உடலெல்லாம் நடுக்கத்துடன் வேர்த்துச் சொரிவதையும் அக்பர் கண்டு, "ஸேனா! இதென்ன அசட்டுத்தனம்? எதற்காக இப்படி நடுங்குகிறாய்? இன்று ஏனோ நீ ஒரு தினுசாக நடந்துகொள்கிறாய்? புத்தி ஸ்வாதீனமற்றவன் மாதிரி விழிக்கிறாயே! இன்றைக்கு உனது கைங்கரியம் அபூர்வ திறமை வாய்ந்திருந்தது. அதைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறக்கூட இடம் கொடாமல், வேலை முடிந்தவுடன் வழக்கம் போல் என்னிடம் உத்தரவு பெறாமல், திடீரென்று போய்விட்டாயே. என்ன காரணம்?" என வினவினார்.

ஸேனனுக்குப் பயமதிகரித்தது. தன் தவற்றைக் குத்திக் காட்டுவது போலிருந்தது. அரசன் காலில் வீழ்ந்தான்; "அரசே, நான் தங்களது ஊழியன், தங்களையே அண்டியவன், எனக்குத் தங்களைத் தவிர வேறு கதி கிடையாது. இந்த அடிமையை மன்னித்து ரக்ஷிக்க வேண்டும். வழக்கம் போல் இன்று காலை தியானத்தில் இருந்தேன். ஸமாதி நிலையை அடைந்தேன். வெளியுலக உணர்ச்சியே இல்லாமல் இறைவனது பாதாரவிந்தத்தில் ஈடுபட்டேன். எனக்கொன்றும் தெரியாது. இப்போது இந்த ஸேவகர்கள் என்னை அழைத்து வந்தது தான் தெரியும். என்னை மீறி நடந்த இந்தக் குற்றத்தைத் தாங்கள் மன்னிக்க


பேட்டானைஸ்
செய்யப்பட்ட
கம்பளி ஆடைகள்
தண்ணீரில்
கெடுவதில்லை



அவை
சுருங்குவதில்லை
நீளுவதும்
இல்லை

''பேட்டானைஸ்'' செய்யப்பட்ட நூல்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கம்பளி ஆடைகளை தண்ணீரில் நனைத்து சலவை செய்தாலும் அவை நலுங்காமல் புத்தம் புதிதாக இருக்கின்றன. விசேஷமான ''பேட்டானைஸிங்'' முறையே கம்பளி ஆடைகளை சுருங்காமலும் இழை பிரியாமலும் இருக்க பாதுகாக்கிறது.

நிட்டிங் நூல்கள்

P&B

பேட்டான்ஸ் & பால்ட்வின்ஸ் லிமிடெட் தயாரிப்பு

வேண்டுகிறேன்,'' என்று கண்ணீர் பெருகக் கதறினன். அக்பர் திடுக்கிட்டார். "என்ன ஆச்சரியம்! ஸேனனுக்குப் புத்தி தடுமாற்றமா, அல்லது எனக்குத்தான் சித்தப் பிரமையா?'' என்று எண்ணித் தம் முகத்தைத் தடவிப் பார்த்தார். க்ஷவரம் செய்தது வாஸ்தவம். ஸேனனை அன்புடன் தூக்கியெடுத்தார். "ஸேனு, உனக்கு ஏதோ பிரமை ஏற்பட்டிருக்கிறது. உன்னை மன்னிக்க நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. இங்கு வழக்கம் போல்வந்து எனக்குப் பணிவிடை செய்தாய். அதற்குச் சந்தோஷித்து எனது கணையாழியை உனக்குப் பரிசளித்தேனே, அதுகூட ஞாபகமில்லையா? உன் அடப்பத்தில் நானே அதை வைத்தேனே. அடப்பத்தைப் பார்,'' என்று சொல்லி, ஸேனனுடைய அடப்பத்தைத் திறந்து பார்க்க, அதில் கணையாழி யிருந்தது. "பார்த்தாயா, இப்போதாவது தெரிகிறதா?'' என்று ஸேனனுக்குப் பரிவுமொழி கூறினர். ஸேனனுடைய புத்தி உண்மையாகவே தடுமாறத் தொடங்கிற்று. இதெல்லாம் சொப்பனமோ என்று சந்தேகப்பட்டான். மிரள மிரள விழித்தான். நாலு புறமும் பார்த்தான். தலை சுழல ஆரம்பித்தது. அக்பர் மீண்டும் பேசத் தொடங்கினர். "ஸேனு, அதிருக்கட்டும், நீ உன்னுடைய பிரதிபிம்பத்தைத் தைலத் தட்டில் காட்டினையே, அந்த ரூபத்தை மறுபடியும் காட்டு. இந்த வித்தை உன்னிடம் இருக்கிறதென்று எனக்குத் தெரியவே தெரியாதே! அது மாயமா, மந்திரமா, தந்திரமா, கண்கட்டு வித்தையா? நீ எப்படி அவ்வளவு சுந்தர ரூபத்தைத் தைலத்தில் நான் காணும்படி செய்தாய். அதோ, அந்தத் தைலத் தாம்பாள மிருக்கிறது. மறுபடியும் அதில் அந்த அழகு நிறைந்த நீல வர்ண உருவத்தைக் காட்டு. நான் பார்க்கட்டும், இங்குள்ளவர்களெல்லாருமே பார்க்கட்டும்'', என்று சொல்லி, அந்தத் தாம்பாளத்தை எடுத்து ஸேனனுடைய அருகில் வைத்து, அவனுடைய பிரதி பிம்பத்தைப் பார்த்தார். உடல் நடுங்கி நிற்கும் ஸேனனுடைய உருவம்தான் அங்குத் தென்பட்டது. வேறொன்றும் காணவில்லை.

அக்பர் ஏமாற்ற மடைந்தார். "இதென்னடா மோசம், எங்கேடா அந்த உருவம்? அந்த நவரத்ன மிழைத்த கிரீடம், அந்த மார்பிலூசலாடின வனமாலை, இடுப்பில் துலங்கின பீதாம்பரம், காதில் விளங்கின குண்டலம், அந்த நீல நிற ஒளி எங்கே? இதெல்லாமிப்போ தெங்கேபோச்சு. அந்த உருவம் என் மனதில் அப்படியே பதிந்திருக்கிறதே! அதை மறக்க முடியுமா? கண்டாவர் யார் தான் மறப்பார்கள் அந்த எழிலுருவை? ஸேனு, என்னிடம்விளையாடாதே. என்னை ஏமாற்றாதே. அந்த ஸ்வரூபத்தைத் திரும்ப எனக்குக் காட்டுவாய்'' என்று வற்புறுத்தினர். அப்போதுதான் ஸேனனுக்குத் திடீரென்று உண்மை விளங்கிற்று. துள்ளிக் குதித்தான்.

சக்கரவர்த்தியின் காலில் விழுந்தான். "ஆஹா! ஆஹா! அரசே, தாங்கள் நிகரற்ற பாக்யம் பெற்றவர்கள். தங்களைத் தர்சிப்பதே பெரும் பாக்யம். இன்று நானிங்கு வரவேண்டியதை மறந்து என் னிறைவனது பாதார விந்தத்தில் லயித்திருந்தபோது என்னையன் கண்ணபிரான் இந்த ஏழையின்மீதிரங்கி, எனக்குப் பதிலாக என்னுருவத்தில் இங்கு வந்து, நான் செய்யவேண்டிய வேலையைத்தாமே தங்களுக்கு ஊழியனுயிருந்து செய்திருக்கிறர். தாங்கள் கண்ட ரூபம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வுடையது. முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், யோகிகளும், பக்தர்களும் நாடும் பரம் பொருள், இந்த எளியேனுக்கிரங்கி இங்கு வரவேண்டுமானல், அந்த மூர்த்தியின் கருணையை என்ன என்று சொல்வது! கோடிக் கணக்கான ஜனங்கள் தேடிக் கிடைக்காத அந்தப் புருஷோத்தமன் தங்களுடைய ஊழியனகத் தோன்றி தங்களுக்குப் பணிவிடை செய்யும்படியான பெரும் பாக்யத்தைப் பெற்ற தங்களுடைய பெருமையை என்ன சொல்வது? தாங்கள் புண்யவான், உண்மையான பக்தர். பரம யோகி, உத்தமஞானி,'' என்று ஆனந்தபரவசனுய்க்கூறி, ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்தான். எல்லாரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்கள். அக்பரும் அப்படியே மெய்மறந்து நின்ருர். இந்தச் சேதி எங்கும் பரவ, அரண்மனையிலுள்ளவர்களும் அந்த நகரத்திலுள்ளவர்களும் அரண்மனைவாசலிற்கூடி ஸேனனுடைய பக்திவிசேஷத்தைப் பற்றியும் சக்கரவர்த்தியின் பெரும் பாக்கியத்தைப்பற்றியும் பலவாறு புகழ்ந்தார்கள்.

# நடனகலா



கே. சுந்தரம்மாள்

10

காலச்சக்கரம் இரு முறை உருண்டது. கலாவதி மங்கைப் பருவமடைந்தாள். அவளது ஒவ்வொரு அங்கத்திலும் யௌவனத்தின் சோபை மிளிர்ந்தது. இவளைப் பார்க்குந்தோறும் பாட்டியின் உள்ளம் ஆனந்தத்தையும், சோகத்தையும் மாறி மாறி அடையும். தனது ஜீவனுள்ள பொழுதே கலாவதிக்கு ஓர் ஏற்பாடு செய்துவிட வேண்டுமென்று அவள் மனம் துடித்தது. ஓர் ஜமீனின் குழந்தை போலவே கலா வளர்ந்து வந்தாள். மஹாராஜாவின் ஆதரவில் யாவும் நடந்தாலும் வெளிப் பார்வைக்கு அவர் செய்தார் என்று தெரியாமலே நடந்து வந்தது.

அவள் இருக்கும் வீடு ஓர் பெரிய பங்களாவாக, அந்தஸ்துள்ளதாக அமைக்கப்பட்டது. மோட்டார், சிப்பந்திகள் யாவும் ஆடம்பரமாகவே இருந்து வந்தன. அவள் இனப்பெண்கள் அவள் பக்கம் வருவதற்கே அஞ்சுவார்கள். அவள் தங்களைப்பார்த்தால் அதுவே பெரிய கௌரவம் என்று நினைப்பார்கள். வெளியிடங்களிலும், கல்வித் துறையிலும் பாமாவிற்கு நடக்கும் மரியாதைக்குச் சற்று அதிகமாகவே கிடைக்கும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள்கூடத் தலை வணங்கி மரியாதை செய்வார்கள். அப்படி அமைந்தது அவளின் தோற்றமும் குணமும்.

இந்த நிலைமையில் ஒருநாள் கலாவதியிடம் நீ இனி பொட்டுக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினாள் பாட்டி.

"ஏன் பாட்டி வீணாகக் கவலைப்படுகிறாய்? நமது வாழ்க்கை கௌரவமாக நடக்கப் பணமில்லையா? வசதி யில்லையா? இன்னும் உனக்குப் பணம் வேண்டுமென்றால் நாட்டிய உபாத்தினியாக வேலைபார்த்துக் கொண்டே படிக்கிறேன். இண்டர்மீடியட் முடிந்துவிட்டாலும் மேல் பட்ட படிப்பிற்கும் இவ்வுத்தியோகம் இடைஞ்சலாகாது. நீ என்ன சொன்னாலும் பொட்டும் கிட்டும் கட்டிக்கொள்ளமாட்டேன். இனி இவ்விதமான பேச்சையே எடுக்கக்கூடாது" என்றாள்.

"நீ படிக்கலாம் அம்மா படிக்கலாம். நான் திடீரென்று கண்ணை மூடிவிட்டால் உன்னைப் பாதுகாப்பவர் யார்? ஒருவன் கையில் ஒப்புவிக்கவேண்டும், அல்லது தொழில் முறையில் முன்னேற வேண்டும். அப்படியானால்தான் கவலை இல்லை."

"பாட்டி, கல்யாணம் என்பது தற்சமயமில்லை. ஒரு சமயம் கன்னிப் பெண்ணாகவே இருந்தாலும் இருப்பேன். தொழில் முறை, அது இது என்று கண்ட வார்த்தைகளை என் காதில் போடாதே. நாட்டியத்திற்கே என் வாழ்க்கை அர்ப்பணம்" என்றாள்.

"இதைப்பார் கலா! கடமை, கடமை என்று உன் அப்பாவை விரோதித்துக் கொண்டாள். ஆதிநாளிலிருந்து நாட்டியம் நாட்டியம் என்று பித்துக்கொண்டு, துக்கத்தையே அனுபவித்து உயிரை விட்டாள் உன் தாயார். அவளது கடமையும் நாட்டியமும், என்னையும் உன்னையும் அநாதரவாக விட்டு விட்டு அற்பாயுளில் மடியச்செய்தன. அவள் வாழ்க்கையின் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள்" என்று மோஹினியின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி முடித்தாள். கேட்கும் பொழுதே கண்களில் நீர் ஆறாய்ப் பெருகியது. இதைப் பார்த்த பாட்டி, "வருத்தம் அறிந்து கொண்டாள். இனி தன் சொற்படி நடப்பாள்" என்று

எண்ணி மகிழ்ந்தாள். ஆனால் கலாவின் பதில் அவளைத் திகைக்கச் செய்தது.

"ஏன் பாட்டி, அம்மாமீது குற்றம் சொல்லுகிறாய்? அவள் செய்தது மிகவும் சரி. என் அன்னையின் லக்ஷியத்தை நான் நிறைவேற்றுவேன். 'கடமை' என்று சொன்னதில் தப்பு என்ன? என் தகப்பனார் அவசரப்பட்டு விட்டார், ஆழ்ந்த சிந்தனையற்று விட்டதினால் இவ்விதத் துன்பங்கள் ஏற்பட்டன, ஆனாலும் விதி? அதன்படி தான் யாவும் நடக்கும், 'விதியின் வழி மதி செல்லும்' என்பது ஆன்றோர் வாக்கு. அப்படியிருந்தாலும் விதியென்று வாளாவிருக்காமல், நம்மாலான முயற்சியும் செய்ய வேண்டியதே. பிறகு நடப்பது நடந்தே தீரும். அவ்வளவு தான். யாரையும் குறை கூறிப் பயனில்லை."

"கலா, வீணாக அவளைப்போல் பிடிவாதம் செய்யாதே. உன் வயதில் உன்னைப்போலவே இருந்தாளவள். உன்னைப் பார்க்குந்தோறும் அவளே வந்து விட்டாளென்று தோன்றுகிறது. வீணாகக் கலை கலையென்று அலையாமல் யுவராஜாவின் அன்பைப் பெற வழிதேடு. அப்படியானால் அரசனின் காதலியாக வாழலாம், நானும் நிம்மதியாக, உன் அம்மாவின் குறை உன்னால் எனக்குத் தீர்ந்தது என்று நிம்மதியாகச் சாவேன்" என்றாள்.

"திடுக்கிட்டவளாக, பாட்டி! என்ன கண்டபடி உளறுகிறாய்? அரசனாவது? காதலியாவது? சே, இன்னொரு தடவை இம்மாதிரி பேசாதே. நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தால்தானே வரனைப்பற்றிச் சிந்தனை செய்யவேண்டும். யுவராஜா எப்படிப் பட்டவரென்று நினைத்தாய்? அந்த நாளைப் போல் 'மனைவி நாலு பேர், தாசி நாலு பேர்' என்ற பழக்கம் கொண்டவரல்ல. நேர்மையான முறையைக் கடைப்பிடிப்பார் தெரியுமா? பரந்த நோக்கம் கொண்டவர்" என்றாள்.

"இதற்கு மேலான மேதாவிகளைப் பார்த்திருக்கிறேன், இவனும் மனித உள்ளம் படைத்தவன்தானே. யௌவனாவஸ்தையில் எப்படிப்பட்ட வைராக்கியமும் தகர்த்தெறியப்பட்டுவிடும். அவன் எப்படியாவது போகட்டும், நீ நான் சொன்னபடி நடந்தால் தான் சுகம் பெறுவாய்" என்றாள்.

கலாவின் மனம் சலனமடைந்தது. எது உண்மை எனப் புலனாகவில்லை. சற்று நேரம் சிந்தனை செய்து ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாக, "பாட்டி நாலுநாள் அவகாசம் கொடு; சிந்தனை செய்து பதில் சொல்லுகிறேன்" என்றாள்.

அன்று வெளியில் உலாவப் போகாமல் மேல் மாடிக்குச் சென்றாள். இவள் எதைப் பற்றி யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தாளோ அதே மனோன்மணி அடுத்த வீட்டு மேல்மாடியில் நிற்பதைக் கண்டதும், "இதுவும் பவானி அருள்" என்று நினைத்து, அவள் வீட்டின் பக்கமுள்ள சுவரருகில் சென்று "மனோன்மணி!" என்று அழைத்தாள்.

"யார் கலாவதியா? என்ன அபூர்வமாக இருக்கிறதே மாடி விஜயம்?" என்றாள்.

(இருவருக்குமிடையில் ஐந்தாறு கஜம் தூரமிருந்தபடியினால்)

"அபூர்வமென்ன? இப்படி வரும் நாளும் உண்டு. ஆனால் உன்னைப் பார்ப்பது மட்டும் முடிவதில்லை. நாம் இப்படி நின்று பேசுவது நன்றாக இராது. நீ இவ்விடம் வர முடியுமா? சில விஷயங்கள் பேசலாமென்று நினைக்கிறேன்" என்றாள்.

"முடியுமாவா, உன்னுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கக் கூடியதா? இதோ வருகிறேன்" என்று கீழே சென்றாள்.

கலாவதி ஒரு ஜமீன் குழந்தைபோல் ஆடம்பரத்துடன் வளர்ந்து வந்ததினால், யாவரும் அவளுடன் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. மேலும் அவளுக்குப்பலவித கலைகளில்பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருந்ததினால் பொழுது போக்காகப் பேசுவதென்பதற்கு அவகாசமிருப்பதில்லை. வெகுநாளாக மனோன்மணிக்கு இவளிடம் பழகவேண்டுமென்ற அவா அதிகமானதினால் ஐந்து நிமிஷத்திற்குள் கலா நிற்குமிடம் வந்து சேர்ந்தாள்.

"வா! மனோன்மணி, என்னிடம் பேசுவது என்பது கிடைக்கக் கூடாத சந்தர்ப்பம் என்றாயே. அப்படி என்ன எனக்குக் கொம்பு முளைத்திருக்கிறது?" என்றாள் சிரித்தவாறே அவள் கையைப் பற்றித் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு.

"நமது குலத்தின் கேவலத்தில், அதை உத்தாரணம் செய்ய நீ பிறந்திருப்பதும், தற்சமயம் குலத்திலுள்ளவர்கள்நிலைமைக்கு நீ கொம்பு முளைத்தவள்தான் என்பதில் சந்தேகமென்ன? நீ பாக்யசாலி. மஹாராஜாவின் லக்ஷியப் பெண்ணாக விளங்குகிறாய், நாட்டியத்தில் உனக்கு நிகர் நீயே, தெய்வாம்சம் பெற்றவள்" என்று சொல்லி வரும்பொழுதே இடைமறித்து,

"என்ன மனோன்மணி! அடுக்கிக் கொண்டே போகிறாயே. புகழுரை சூட்டுவது என்ற சங்கல்பத்துடன் வந்தாய் போலும். பரிகாசம் போதும்."

"பரிகாசமா? உண்மையை எடுத்துச் சொன்னேன் கலாவதி! இவையெல்லாம் பெரிதல்ல. எங்களைப் போல் அர்த்தமற்ற பிழைப்புப் பிழைக்காமல், உன் தாயைப் போல் கௌரவமாக வாழப் பிரயாசைப் படு. அவள் அகால மரணமடைந்து போனாலும் அவளின் நேர்மையும், குணமும் இன்றும், என்றும் போற்றப்படும்."

"என்ன மனோன்மணி! இப்படிச்சொல்லுகிறாய்? என் தாய் குலத்தை வெறுத்ததினால் கஷ்டப்பட்டாளென்றும், நீங்களெல்லாம் வெகு ஸௌக்யமாக இருப்பதாகவன்றோ எனது பாட்டி சொல்லுகிறாள்."

"பாட்டிகளுக்கு என்ன வேலை? மூக்கு அறுந்தவன் கதை போல் தங்கள் தவற்றை மெய்யென்று நம்பி, நம்மையும் பின்பற்றத் தூண்டுதல் செய்கிறார்கள். என்ன பிழைப்பு?" என்றாள் சலிப்பாக.

சற்று நேரம் அவளையே உற்றுப் பார்த்த வண்ணமிருந்தாள். பிறகு "மனோன்மணி! ஒரு விஷயம் என் மனதிற்குப் புலனாகாமல் இருக்கிறது. அதை உன்னிடம் கேட்கலாமென்று நினைக்கிறேன். கேள்வி உன் மனதிற்குப் பிடித்தமில்லாவிட்டால் என்னை மன்னித்து விடு. கோபங்கொள்ள மாட்டாயே" என்றாள்.

"கோபமா! கலா, உனக்குச் சந்தேகமேற்பட்டு நான் தீர்ப்பதாக இருந்தால் அதைவிடப் பாக்கியம் வேறு உண்டா? அச்சமில்லாமல் கேள்" என்றாள்.

"நாம் படிக்கும் சில காவியங்களில் 'தாசி பணத்திற்கு இன்பத்தை விற்பவள். அன்பு என்பது பணத்தில்தான்' என்று சொல்லியிருக்கிறதே. அது எவ்வளவு தூரம் உண்மை? உன் தினசரி வாழ்க்கையில் "காதல்" என்பது மனிதனிடத்திலா, பணத்தினிடமா? உன் அனுபவத்தை எனக்குச் சொல்ல வேண்டும். மேலும் எந்தச் சுகத்தில் நீ நிம்மதியைக் காண்கிறாய்?

"நிம்மதி என்று எதைக் குறிக்கிறாய்?"

"காதலில்"


"காதல். அந்தப் பதத்தை நினைக்கக்கூட உரிமை கிடையாது, ஆனால் ஒரு விஷயம். என் உள்ளத்தைச் சொல்லுகிறேன் கேள், உலகில் மானத்தை வேண்டுமானால் விலைக்கு வாங்கலாம். ஹ்ருதயத்தை விலைகொடுத்து வாங்க முடியாது. ஹ்ருதயத்தைக் கொடுத்தே ஹ்ருதயத்தை வாங்க முடியும். கலா ஐந்து வருஷ அனுபவத்தில் நான் கண்ட உண்மை இது. யௌவன ஆரம்பத்தில் சிறு பொழுதில் நிறையப் பணமும் நகையும் கொடுத்து நம்மை நாடிவந்து இன்பமடைந்தவர்களிடம் நாமும் அன்பாகத்தான் இருக்கிறோம் என்று நினைத்தேன். ஆனால் உண்மையான காதலின்பத்தைப் பருகியபின் தாசி என்றால் அவளுக்கும் ஹ்ருதயமுண்டு. உண்மைக் காதலில் அவளுக்கும் உரிமையுண்டு என்ற உண்மை புலனாயிற்று. அதன் விபரமும் கேள்.

"ஒரு கல்யாண வீட்டுப் பந்தலில் பரத நாட்டியமாடிக் கொண்டிருந்தேன். முன் வரிசையில் இருபத்து ஐந்து வயதுடைய ஒரு வாலிபர் உட்கார்ந்திருந்தார். நல்ல சிகப்பல்ல. பொது நிறம். நீண்ட மூக்கு. களைபொருந்திய முகம். அவரை ஒருமுறை பார்த்ததுமே என் மனதில் அதுவரை கண்டறியாத ஓர் ஆனந்த உணர்ச்சி ஏற்பட்டது. அவரும் என்னையே உற்று நோக்கினார். இருவர் கண்களும் அடிக்கடி சந்தித்தன. இதனால் எனக்கு அதிக உத்சாகம் தோன்றவே எனது நாட்டியம் அற்புதமாக அமைந்தது. அந்த இடத்தில் அதற்குமேல் அவரைப்பற்றி என்ன தெரிந்துகொள்ள முடியும்?

"பிறகு அவரின் உருவம் என் மனதை விட்டு அகலவில்லை. பார்க்கவேண்டும் என்ற துடிப்பு. ஒரு விஷயத்திலும் மனம் செல்லவில்லை. என் இன்பத்தை நாடி வருபவர்களிடம் அருவருப்பு இவைகளால் மிகவும் கஷ்டப்பட்டேன். 'அவரை எப்படிக் காண்பது' என்று இரவு பகல் பவானி மாதாவை வேண்டி வந்தேன்.

"மன நிம்மதியை நாடி பார்க்கிற்குச் சென்றேன். அவ்விடத்திலும் ஏகாந்தத்தை நாடி மல்லிகை வீட்டினுள் உட்காரலாமென்று சென்றேன். என்ன ஆச்சர்யம்! என் தெய்வம் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் எழுந்து செல்லப் போனார்.

"சமயத்தைக் கை விட்டால் மறுபடி கிடைப்பதரிது." என்ற தீர்மானத்தில் தைரியத்துடன், 'நான் வந்தால் தாங்கள் எழுந்து போகவேண்டுமென்பது விதியா? இது பொதுஸ்தலம்' என்றேன் குரலில் நடுக்கம் தோன்ற. 'அப்படி யொன்றுமில்லை. அன்னிய ஸ்திரீகளுக்கு விலகுவதே



விதிதான். என்றாலும் உங்களுக்கு விருப்பமானால் இருக்கிறேன்' என்று சிரித்தவாறு எழுந்தவர் மறுபடி உட்கார்ந்தார். சற்று நேரம் பொது விஷயமாகப் பேசினோம். பிரியும் சமயம் "நாளையும் இந்த இடத்தில் தங்களைச் சந்திக்கலாமா?" என்று கேட்டு விட்டேன்,

சற்று நேரம் என்னை உற்று நோக்கி விட்டு, 'சந்திக்கலாம்' என்றார்.

"மறுநாள் பேச்சு அனேக விஷயங்களைச் சுற்றி, தாசி வகுப்பில் வரும்பொழுது 'தாசி என்று தனி வகுப்பாக ஒதுக்கி வைத்தது ஆண் பிள்ளைகளா? சமூகமா' என்று கேட்டு விட்டேன்.

"ஒருவர் மட்டும் காரணமாக முடியாது. ஆண்பிள்ளைகளுக்கு ஆதரவு காட்டியது சமூகம். அதனால் இருவரும் காரணம்" என்றார்.

''ஆனால் தாங்கள் சீர்திருத்தவாதிதானா?'' என்றேன்.

''ஆம் அப்படித்தான் என் நண்பர்கள் சொல்லுவார்கள்'' என்றார்.

''அப்படியானால் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றேன்.

அதற்கு அவர் தமக்குத் தாய் தகப்பன் தம்பி தங்கைமார்கள் இருப்பதாகவும் அவர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்புத் தம்மைச் சார்ந்ததென்றும் அதனால் தம்மை மறந்துவிட வேண்டுமென்றும் சொன்னார்.

''என்னால் தங்கள் குடும்பத்திற்கு யாதொரு இடைஞ்சலும் நேராது. தங்கள் பொருள் எனக்கு வேண்டாம். காதல் பிச்சையை நாடியே என் ஹ்ருதயம் தவிக்கிறது'' என்று அவர் காலைப் பிடித்து, பாதத்தில் முகத்தைப் பதித்துக்கொண்டேன்.

சட்டென என்னைத் தூக்கி அணைத்து முத்தமிட்டார். அதுவரை எத்தனையோ கசடர்களின் கைக்குள் இவ்விதம் அகப்பட்டிருக்கிறேன். ஆனால் இவ்வித இன்பமும் மனோ நிம்மதியும் ஒருநாளும் ஏற்பட்டதில்லை.

பிறகு வீட்டிலுள்ளவர்களின் கண்களில் மண்ணைத் தூவ. அவர் எனக்குத் தமிழ்க் காவியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் என்றும் சங்கத் தமிழ் போட்டியில் பங்கெடுத்துக்கொள்ளப்போவதாகவும் சொன்னேன். அவர் என்னிடமிருந்து பணம் வாங்கமாட்டாராதலால் இவ்வித காரணம் சொல்லி, அவர் வீட்டிற்கே பணமனுப்பலானேன். அன்புப் பரிசென்று அவருக்குகந்த உடைகள் தைத்து அனுப்புவேன். அன்பாகக் கடிந்துகொள்ளுவார். பிறகு எந்தச் சீமானானாலும் நான் இருக்கும் அறைப் பக்கம் வரக்கூடாது என்று சொல்லிவிட்டேன். வீட்டில் சண்டை, பணத்தாசையை அடக்குவதற்காகவே, நாட்டியத்திற்கு எவ்விடத்திலும் ஒத்துக்கொண்டு ஆடுகிறேன். பணம் நிறைய இருக்கிறது. இருந்தும் அவர்களுக்குத் திருப்தியே கிடையாது. இப்படியே இருந்தால் அவர் தாய் தகப்பன் மனங்குளிர நடக்கவேண்டாமா என்பதற்காகவும், என் தூய்மை கெட்டுவிட்டதினால் அவர் குலம் என்னால் விளங்க முடியாதென்பதினாலும் அவர் இனத்தில் கல்யாணம் செய்துகொள்ளும்படி பெண்ணை நானே பார்த்து ஏற்பாடு செய்துவிட்டேன். அவர் முதலில் சம்மதிக்கவில்லை. பிறகு ஒத்துக்கொண்டார். நாளை அவருக்குக் கல்யாணம். மணவறையில் நான் நாட்டியமாடப் போகிறேன். அவர்மீது வைத்த உண்மை அன்பினாலன்றோ, அவர் முன்னேற்றம் ஒன்றையே என்மனம்விரும்பியது. இதில் மனதில் எவ்வளவு இன்பம்!''

''இதனால் உனக்கு நன்மை ஏற்படுமா மனோன்மணி? இனிமேல் உன்னைக் கவனிப்பாரா அவர்?''

''நிச்சயம் கவனிப்பார். சந்தேகமே வேண்டாம், கல்யாணம் ஏற்பாடானதும், அப்பெண்ணினிடம் என் விஷயத்தைச் சொல்லி, ''இதைப்பற்றிப் பின்னால் யாதொரு மனஸ்தாபமும் ஏற்படக்கூடாது'' என்று சொன்னாராம்.

''அப்பெண் ''நான் அவள்கூட வந்திருந்தால்கூட ஆக்ஷேபனையில்லை'' என்று சொன்னாளாம். ''அப்படியொன்றும் வேண்டாம், நான் அவள் வீட்டிற்குப் போய் வருவதைப்பற்றி ஆக்ஷேபனையொன்றும் சொல்லாமலிருந்தால் போதும். அவளிடமிருந்து பொருள் நமக்கு வருமே தவிர, என்னிடமிருந்து ஓர் தம்பிடிகூட வாங்கமாட்டாள்'' என்று சொன்னாராம்,

''அப்படியே நடக்குமென்று நம்புகிறாயா''

''நம்புவதில் தப்பில்லை. அவர் உத்தமமான குணமுள்ளவர். எங்கள் உள்ளன்பு பிரிக்கமுடியாதது. ஓர்சமயம் கால மாறுபாட்டினால் என்னை விலக்கினாலும் அதற்காக நான் வருந்தப்போவதில்லை, பூர்வ ஜன்ம சுகிர்தத்தினால் கொஞ்சகாலமாவது நன்மையை அடைந்தோம் என்ற திருப்தியுடன், காலம் கழிப்பேன், கலைகளிற் சிறந்த நமது சமஸ்தானத்தில், கலையின் உதவியினால் நிம்மதியாகக் காலங்கழிப்பது கஷ்டமல்லவே. அதுவும் உன்போன்றவர்களால், மஹாராஜாவினிடத்தில் சமய உதவி பெறும் வசதியிருக்கும்பொழுது, கவலையென்ன?''

'''மனோன்மணி! இன்று உன்னால் பல விஷயங்களை அறிந்துகொண்டேன். திசை தெரியாமல் அலைந்த என் மனக் கப்பலுக்கு உன் மொழிகள் திசைகாட்டிவிட்டன,'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, கலகலவெனப் பேசிச் சிரித்தவண்ணம் நாலைந்து பெண்கள் அவ்விடம் வந்தார்கள்.

''வாருங்கள்! வாருங்கள்! என்மீது ஏது இவ்வளவு தயவு பிறந்துவிட்டது'' என்றாள் கலா.

''தயவா, நன்றாக இருக்கிறது! அத்தி பூத்தது என்றால் பார்க்கவேண்டாமா?

மனோன்மணியின் வேலைக்காரி, அவள் இவ்விடம் வந்திருப்பதாகச் சொன்னாள். நாங்களும் வந்தோம், ஏது எங்களுடன் பேசுவதற்குக்கூட உனக்கு அவகாசம் கிடைத்ததுபோலும்?" என்றாள் விலாஸினி.

"அவகாசமென்ன? நீங்கள் மாத்திரம் அவகாசமாக என்னுடன் பேச வருகிறீர்களாக்கும்"

"ஏதோ அவரவர்களுக்கு அவரவர்கள் ஜோலி. அதிருக்கட்டும். நாங்கள் வரும் சமயம் ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தீர்களே! என்னவிஷயமென்று அறியலாகுமா?" என்றாள் விலாஸினி.

"ஒரு ரகசியமுமில்லை. நமது பிற்கால வாழ்வை ஒருவிதமாக நிர்ணயிக்க என்ன செய்யலாம் என்பதே" என்றாள் மனோன்மணி.

"ஓ, ரைட், சரியான சமயம்பார்த்து வந்தோம், கலாவதி! அரசாங்கத்தில் அதிக செல்வாக்குள்ள நீ, எங்களுக்கு ஏதாவது மார்க்கம்தேட உதவிசெய்ய வேண்டும். நமது ஈன வாழ்க்கை அடியுடன் உலகை விட்டே ஒழிய வேண்டும்" என்றாள் மாலினி.

"சகோதரிகளே! உங்கள் பேச்சு தேவாமிர்தம்போலிருக்கிறது. மனிதன் தனக்குக் கிடைத்துள்ள சக்தியை நல்லவழியில் பிறர்பொருட்டு உபயோகிப்பதுதான் கடமை. என்னாலியன்ற உதவிசெய்யப் பின்வாங்க மாட்டேன். ஆனால் முதலில் நமக்குள் ஓர் சங்கம் ஏற்படுத்த வேண்டும். ஒன்றுபட்ட மனதுடன் யாரும் ஈனத்தொழிலை விட்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் செய்து அதன்படி நடக்கவேண்டும். சங்கத்தின் ஆதரவில் மணங்கள் நடக்க வேண்டும். நாடகம், நடனம், முதலிய துறைகளில் நாம் முன்னேறவேண்டும். உலகத்துப் பெண் சமூகத்துடன் நாமும் கலந்து பழகவேண்டும். போகப்போக இன்னும் சீர்திருத்தங்கள் ஏற்படலாம். சங்கத்துத் தீர்மானங்களை மஹாராஜாவிற்கு அனுப்பிவைக்கலாம். யுவராஜாவுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தால் நமக்குவேண்டிய வசதி செய்து தரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றாள் கலா.

"அப்படியே செய்வோம். சங்கத்தின் தலைவி நீ தான்" என்றார்கள் யாவரும்.

"அப்படியல்ல. நான் சிறியவள், அப்பதவிக்கு லாயக்கில்லாதவள் நான். தற்சமயம் அனுபவத்திலும், வயதிலும் பெரியவள் மனோன்மணி. அவள்தான் தலைவி" என்றாள்.

சடசடவெனக் கரகோஷம் செய்து, "தலைவி மனோன்மணி வாழ்க. கலாவின் லக்ஷியம் ஓங்குக" என்று சப்தமிட்டார்கள்.

"என்ன இது? இன்னும் சங்கம் ஏற்படவில்லையே" என்றாள் கலா.

"நாளையே சங்கம் ஸ்தாபிதமாகிவிடாதா? கலாவதி! பவானிமாதா கோவிலுக்குப் பக்கத்திலுள்ள உனது கட்டடத்தைச் சங்கம் நடத்தத் தரவேண்டும். அதுதான் வசதியான இடம். அதில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள் மனோன்மணி.

"ஒருவருமில்லை. கோவிலைப்பற்றிய மீட்டிங்குகள்தான் அதில் நடைபெற்று வருகின்றன. அதனால் ஆக்ஷேபணையில்லாமல் நீ அதில் சங்கம் நடத்தலாம்" என்றாள்.

பிறகு சற்றுநேரம் இவ்விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, முதல் நாளன்று கலாவதி அவசியம் வந்து தலைமை வஹிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பிரிந்தார்கள்.

அன்று முதல் கலாவின் குழப்பம் தீர்ந்து முடிவான தீர்மானத்திற்கு வந்தாள். தாசி குலத்திலும் ஓர் பரபரப்பு ஏற்பட்டது. சங்கம்கூட ஆரம்பமானதிலிருந்து அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. ஓர் கூட்டத்திற்கு யுவ ராஜா தலைமை வஹிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கலாவதியினிடம் கேட்டுக்கொண்டார்கள். "கூடிய சீக்கிரம் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றாள்.

மூன்றுமாத விடுமுறையில் சங்கத்தில் பங்கெடுத்து வேலை செய்தாள் கலாவதி. யுவராஜா சுற்றுப்பிரயாணம் சென்றிருந்ததினால் அவரைக் கண்டு பேசும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. கடிதம் எழுதிக்கேட்கும் தைரியமும் ஏற்படவில்லை.

கலாசாலை திறந்த பிறகு இண்டரில் சேர்ந்து படிக்கலானாள் கலாவதி. கலாசாலை திறந்து பதினைந்து நாட்களாகியும் ரவிவர்மனைப் பார்க்கவில்லை. ஊரிலிருக்கிறானோ இல்லையோ என்ற சிந்தனை ஏற்படலாயிற்று. அவசியம் அவனைப் பார்க்கவேண்டும் என்ற அவா அவளை வாட்டினது. அதனால் எங்கே சென்றாலும் அவளையறியாமலே கண்கள் அவனைத் தேடலாயின.

ஒருநாள் பள்ளிக்கூடம் விட்டதும், தலைமை உபாத்தினி வரச்சொன்னதாக, கலாவினிடம் பியூன் வந்து சொன்னான். அவளைப் பார்ப்பதற்காகச் செல்லும்

பொழுது, மாடி வராந்தாவில் ஓர் திருப்பத்தில் திரும்பினதும், ரவிவர்மன் அவளை நோக்கி வந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றுவிட்டாள். அவனைப் பார்க்கும்பொழுது இதுவரை ஏற்படாத ஓர்வித நாணமும் பயமும் அவளைச் சூழ்ந்துகொண்டன. குப்பென உடலெல்லாம் வியர்வை அரும்பிற்று. பேச நா எழவில்லை. ஒன்றும் தோன்றாமல் தலையைக் கவிழ்த்தவாறே நின்றுகொண்டிருந்தாள்.

அருகில் வந்த ரவிவர்மன் "என்ன! கலாவதி! சுகந்தானா? நான் வந்த பிறகு உன்னைப் பார்க்கவே இல்லையே! பாமா கூடப் பார்க்கவில்லை என்று சொன்னாள்!" என்றான் புன்சிரிப்புடன்.

பதில் பேசாமலிருப்பது மரியாதைக் குறைவு என்று மனம் அறிவுறுத்தினாலும் நாக்கு மறுத்துவிட்டது. அதனால் தலையைக் கவிழ்த்த வண்ணம், கால் கட்டை விரலினால் தரையில் கீறிய விதம் நின்றுகொண்டிருந்தாள்.

இவளது மௌனத்தைக் கண்ட ரவிவர்மன் "கலா ஏன் பேசமாட்டேனென்கிறாய்? மூன்று மாதத்தில் ஆளே மாறிப்போயிருக்கிறாய். கட்டழகியாக விளங்குகிறாய். மனமும் மாறிவிட்டதா? கோபமா, பயமா?" என்றான்.

திடுக்கிட்டு, "ஐயோ அப்படியொன்றும் இல்லை. நானும் உங்களைக் காணவே முடியவில்லையே, ஊரிலில்லையோ, என்று நினைத்துக் கொண்டிருந்தேன். திடீரென உங்களைக் கண்டதும் ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. அவ்வளவே" என்றாள் குரலில் நடுக்கம் தென்பட.

"ஓ! சரிதான். அது போகட்டும். எஸ். எஸ். எல். ஸியில் இராஜதானிக்கே முதலாவதாகத் தேறி விட்டாய். நாட்டியமோ சொல்ல வேண்டியதில்லை. சந்திரதாஸ் இன்று உன்னைப்பற்றி மிகமிகப் புகழ்ந்து பேசினார். இனிமேல் கற்க வேண்டுமென்பது பாக்கியே இல்லையாம். வாணியே அவதாரம் செய்திருக்கிறாள் என்று சொல்லிவிட்டார்."

"உண்மையாக அவர் சொன்னாரா? அல்லது............"


பாத்ருடுவின்

**பால சஞ்சீவினி (Regd.)**

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

"நானாகச் சொல்லவில்லை. அது போகட்டும். நான் ஒரு விஷயம் உன்னிடம் கேட்டால் வருத்தப்பட மாட்டாயே?"

"வருத்தமென்ன? தாராளமாகக் கேளுங்கள்."

"சந்திரதாசிடம் நாட்டிய ஆசிரியை உத்யோகம் வேண்டுமென்று கேட்டாயாமே? ஏன்? காரணம் நான் அறியலாகுமா?"

"காரணம் ஒன்றுமில்லை. பொருள் தேடலாமென்பதே!"

"பொருள் தேடவா?" என்று ஆச்சர்யத்துடன் அகல விழித்தபடி கேட்டான்,

"ஏன்? இதில் வியப்பென்ன? கற்றதைப் பிறருக்குச் சொல்லுவது தப்பிதமா?"

"அப்படியல்ல. உத்யோகம் என்று ஏற்பட்டால் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டாக வேண்டும். படிப்பு என்னவாகும்?"

"இரண்டும் செய்யலாமென்பதே எனது உத்தேசம்."

"அப்படி அவசியம் என்ன கலா! மஹாராஜாவின் லக்ஷியப் பெண்ணான நீ பொருள் தேட வேண்டுமென்பது விளங்கவில்லையே. கற்ற வித்தையைப் பிறருக்குக் கற்பிக்க வேண்டியது அவசியமே. அப்படி விருப்பமானல், ஓய்வு நேரங்களில் ஆசிரியருக்கு உதவி செய்யத் தடுக்கவில்லை. ஆனல் உத்யோகம் என்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். தடுக்கவும் செய்வேன். கலா! உன் குறை எதுவானாலும் என்னிடம் தயங்காமல் சொல்லலாம்."

"குறையா? உங்கள் அரசாங்கத்தில் அப்பதமே அகராதியிலிருக்காதே. அப்படியொன்றுமில்லை. எங்கள் இனத்தவர்கள் மஹாராஜாவின் அனுமதியின் பேரில் சேவா விருத்தி என்ற சங்கத்தை ஸ்தாபிதம் செய்திருக்கிறார்கள். அதன் முன்னேற்றத்திற்கு, பொருள் அவசியம். அரசாங்கத்தினிடமிருந்து உதவி கிடைத்தாலும், நான் தேடும் பொருளைச்சங்கத்தில் சேர்த்துவிடலாமென்பதே எனது நினைப்பு."

"சே இதுதானு? வேண்டும் பொருள் கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன். நானே அவர்களுக்குச் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினேன். அவர்களாகவே முன்னின்றது மெத்தச் சந்தோஷமாகப் போய்விட்டது. சங்கம் விருத்தியடைய வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். நீ உத்தியோகம் பார்க்கவேண்டிய அவசியமில்லை. சந்திரதாஸினிடம் வேண்டாமென்று நான் சொல்லிவிட்டேன். கூடிய சீக்கிரம் அகில இந்திய நடன மஹாநாடு கூட்ட ஏற்பாடாகி வருகிறது. அதற்கான முயற்சிகளில் நாம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டாமா? நீதான் அப்பாவின் லக்ஷியப் பெண். முதல் பரிசு உனக்குத்தான்"

"அடேயப்பா! என்ன மனோ ராஜ்யம்! நான் என்ன தெய்வப் பிறவியா? என்னிடத்தில் எவ்வளவு நம்பிக்கை? நான் அதற்குப் பாத்திரவதிதானு என்பதே எனது கவலை."

"சந்தேகமின்றி நீயேதான்."

"சரி. அப்படியே ஆகட்டும். தங்கள் வாக்குப் பொன்மொழிகள். அப்படியானுலும் நான் ஆசிரியை உத்யோகம் வகிப்பதில் தடையென்ன? எனது தந்தையும் தங்கள் தந்தையுமாக எனது உரிமைக்கு விட்ட பொருள்களை சங்கத்திற்குக் கொடுத்தாலும், நான் சொந்தமாகத் தேடிய பொருளைக் கொடுத்தால்தான் உண்மையான உழைப்பு என்று தோன்றுகிறது. அதனுல்......"

"நீ உத்யோகம் பார்க்கவேண்டிய அவசியமில்லை. சொந்த முயற்சியினுல், பொருள் சேர ஓர் உபாயம். நடன மஹாநாட்டில் பரிசுபெற்ற பின்பு, தாசி குல முன்னேற்றச் சங்கத்திற்காக நாட்டியகலா ராணி கலாவதியின் நடனம் ஒவ்வொரு சமஸ்தானம், ஜில்லா, இவைகளில் நடக்க ஏற்பாடு, டிக்கெட்டுகள் ஆயிரம் ஐந்நூறு இந்த ரீதியில், பவானிபுர மஹாராஜா அனுமதியில் மாட்சிமை தங்கிய இராஜப் பிரதிநிதியின் தலைமையில் நடக்கும் என்றால், பணம் லக்ஷம் கோடியாகக் குவிந்து விடாதா? உனது நடனமும் நாலா பக்கமும் பரவும். அதை விட்டு.........".

"வேண்டாம் தங்கள் இஷ்டமே என் பாக்யம்."

"ரைட். உனக்கு விருப்பமானுல் பொழுது போக்காக நாட்டிய வகுப்பிற்குச் சென்று கற்பி. நான் தடுக்கவில்லை", என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் பேசாமல் அவளைப் பார்த்த வண்ணம் நின்றான். சில நிமிஷம் இரு வாயும் பேச மறுத்தன. பிறகு "கலா! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க ஆவலாக இருக்கிறது, வருத்தப்படமாட்டாயே."

"ஏன் வருத்தம்? தயங்காமல் கேட்கலாம்" என்று சொல்லியவாறே மெதுவாக அவனை நிமிர்ந்து நோக்கினுள். அந்தச்

சமயம் இவளையே நோக்கியவாறு அவன் நின்றதினால் இருவர் கண்களும் சந்தித்தன. சட்டெனத் தலையைக் குனிந்துகொண்டாள். தேகமெல்லாம் அதுவரை கண்டறியாத ஓர்வித உணர்ச்சி பரவிற்று. அவள் கண் சந்திப்பினால் மின்சாரம் தாக்கினதுபோல் ஓர்வித இன்ப உணர்ச்சி தோன்றவே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். "இதுவென்ன இதுவரை தோன்றாத ஓர்வித உணர்ச்சி, அவர் ஏதாவது கேவலமாக நினைத்துவிடுவாரோ?" என அவள் மனது கலங்கிற்று. இன்ப உணர்ச்சியில் மெய் மறந்த ரவிவர்மன் 'சே. இப்படி அவளைப் பார்த்த வண்ணம் நின்றுவிட்டோமே. அவள் ஏதாவது கேவலமாக எண்ணிவிட்டால்?' என்ற சிந்தனையில் இயற்கையான ஆண்மையின் சக்தியினால் சற்றுத் தைரியத்தை வருவித்துக்கொண்டு, 'இல்லை, நீ இதுவரை எவ்வளவு உத்ஸாகத்துடனும் உல்லாசத்துடனும் மனம் விட்டுப் பேசுவாய்? குழந்தை உள்ளத்தில் உனது கள்ளமற்ற முகம், இன்று சிம்மத்தின் முன் யானை போல் தோற்றமளிக்கிறது, அது ஏன்?"

"அப்படி ஒன்றுமில்லை. ஆனாலும் என்றும் குழந்தையாக இருக்க முடியுமா? இயற்கையின் செய்கையைத் தடுக்கமுடியாது என்று நினைக்கிறேன்."

"இயற்கையின் செயல்என்பது உண்மை. மூன்றுமாதத்தில் உன் ரூபம் தேகம் யாவும் வளர்ச்சிபெற்றிருக்கின்றன. மனமும் மாறுதல் அடைந்திருக்கிறது என்றாலும் நீ முன்போல் என்னுடன் மனம் விட்டுப் பேசினால்தான் என் மனம் நிம்மதியுறும்."

"கூடிய மட்டும் பிரயத்தனப்படுகிறேன். தங்களிடம் ஓர் வரம்."

"வரமா! அது என்ன சீக்கிரம் கேள்."

"சேவா விருத்தி சங்கக் கூட்டத்திற்கு ஒரு தடவை தாங்கள் தலைமை வஹிக்க வேண்டும் என்பது எங்கள் யாவருக்கும் விருப்பம். தங்கள் பார்வையில், அனுமதியின் பேரில் நடவடிக்கையில் மாறுதல்கள் செய்யவேண்டுமென்பது எங்களது விருப்பம்."

"உங்களதா?" உன்னுடையதா?"

"ஏன்? எங்களதுதான்."

"உன் சொந்த விருப்பமென்றால்........."

"அப்படியே இருக்கட்டும்."

"உங்கள் சங்கத்தின் நடவடிக்கைகளையும், நோக்கங்களையும் நான் நன்றாய் அறிந்துகொண்ட பின்புதான், தலைமை வகிக்க ஒப்புக்கொள்ள முடியும். அதற்காக அவர்கள் எல்லோருடனும் நான் கலந்து பேசுவது என்பது சாத்தியமாகாது. அதனால் நீ மட்டும் என்னைச் சந்தித்து விஷயங்களைச் சொல்லி வந்தால் யாவும் நன்மையாக முடியும். பழையபடி பவானி பார்க்கிற்குப் பாடம் கேட்க வருவதானால் இவ்விஷயத்திற்கும் சாதகமாகும்."

"மன்னிக்க வேண்டும்; தங்களுக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லை. இனிமேல் நாம் அவ்வாறு சந்தித்தால் வீண் அபவாதம்..............."

"சரி, வேண்டாம். இன்னொரு ஏற்பாடு சொல்லுகிறேன். மத்தியானம் இண்டர்வல் சமயம், அல்லது பள்ளிக்கூடம் விட்ட பின்பு, சங்க மஹாலுக்கு வா. அவ்விடம் முக்யஸ்தர்கள்தான் வருவார்கள். நமக்கும் தனிமையிருக்காது, அவர்களும் நம்மை அணுகமாட்டார்கள். அபவாதத்திற்கும் இடமில்லை. விஷயங்கள் பேசலாம். வேண்டிய காவியங்களும் படிக்கலாம்"

"சரி அப்படியே வருகிறேன், பாமாவும் வருவாளா?"

"அவள் வர முடியாது. இவ்விஷயங்கள் புரிய அவளுக்கு வயது வரவில்லை. குழந்தை உள்ளம். உன்னைப்போல் பயமும் நாணமும் இன்னும் ஏற்படவில்லையே" என்றான் புன்சிரிப்புடன்.

வெட்கத்தினால் கன்னம் சிவந்தது. "தலைமை உபாத்தினி வரச்சொன்னாள். போக உத்தரவா?" என்றாள் தலையைக் குனிந்தவண்ணம்.

"சரி. சென்றுவா? நான் கேட்டதை மறந்துவிடாதே. நாளைமுதலே உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன்"

"கரும்பு தின்னக் கூலியா? நமஸ்காரம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நடந்தாள். வராந்தாவின் மறுகோடி சென்றதும் திரும்பினாள். ரவிவர்மன் தன்னையே உற்று நோக்கியவாறு நிற்பதைக் கண்டதும் லஜ்ஜை வந்து சூழ்ந்துகொள்ளவே, விர் எனப் படிகளில் இறங்கிச் சென்றுவிட்டாள்."

(தொடரும்)

# பரலோக வாசலில்



க. கணபதி

அலி இறந்துவிட்டான். எப்படிச் செத்தான் என்று யாருக்குமே நிச்சயமாகத் தெரியாது. அவன் எப்படித்தான் வாழ்ந்தான் என்றாவது யாருக்குந்தெரியுமா? அதுவுந் தெரியாது.

ஆனால், அவன் இறந்ததும் அவன் அதற்குமுன் வழக்கமாகப் போகும் வீடுகளிளெல்லாம் அவன் பெயர் அடிபட்டது. உண்மையில், அவன் எந்த வீட்டிற்குள்ளும், வாசற்படியைத் தாண்டி, அடியெடுத்து வைத்தது கிடையாது. ஆனால் அடிக்கடி போவான்; ஒரு கவள உணவிற்காக, ஒரு துண்டு கந்தலுக்காக, அல்லது மழைக்கு ஒதுங்குவதற்காக. ஆனால், இப்பொழுது அவன் பெயர் எல்லோருடைய நாவிலும் நடமாடுகிறது, அந்தரங்க அறைகளில்கூட.

சிலர், அலி ஒரு தியாகி என்றனர். அவன் தியாகிமட்டுமல்ல; ஒரு பெரிய வீரனுங்கூட, என்று அழுத்தமாக வாதித்தனர் இன்னும் சிலர்.

ஆமாம். அலியை அந்த ஊர் முழுவதும் எல்லோருக்குமே தெரியும், முப்பது வருஷத்திற்கு முன் வந்தான். எப்படி வந்தான்? எங்கிருந்து வந்தான்? தெரியாது. ஆனால், அவன் வந்ததுமே ஏனோ எங்குமே அவனைப்பற்றிப் பேச்சாக இருந்தது. ஒரு குப்பைத் தொட்டியில் கூடியிருந்த நாய்களிடம், ஒரு தரித்திரம் பிடித்த பயல் சண்டை போட்டுக் கொண்டிருந்தானாம்—ஒருவாய் உணவிற்காக. அதைச் சிலர் பார்த்துக்கொண்டே போனார்களாம். அவன் வம்சாவளியைப் பற்றி அறிந்துகொள்ள ஆவல் தூண்ட, குசலம் விசாரித்த அன்பர்களிடம், தன் பெயர் அலி என்று சொன்னானாம். இப்படித்தான் அலி அந்த ஊரில் பட்டணப் பிரவேசம் செய்தது.

அப்படியிருந்தும் அலிக்கு அங்கே செல்வாக்கே கிடையாது. யாரிடமிருந்தும் அவனுக்கு அனுதாபம் கிடைக்கவில்லை. ஒரு காய்ந்த சப்பாத்தியையோ, ஒரு கிழிசல் துணியையோ அவனிடம் விட்டெறிகிறவர்கள்கூட, தரித்திரம் பிடித்த சனியன்; போய்த் தொலைகிறான், என்று சொல்லுபவர் யாருமில்லை. ஒருத்தர்கூட இல்லை. எல்லோருமே அவன் தொந்தர

வைத் தொலைத்துத் தலை முழுகத்தான் நினைத்தார்கள். கிட்டே வந்தால் எட்டு ஊர் நாற்றமடிக்கும் அசங்கியமான உருவத்திடமிருந்து தப்பித்துக்கொள்ளவே விரும்பினார்கள்.

அப்படியெல்லாம் இருந்தும், அலி உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருந்தான். முப்பது நீண்ட வருஷங்களாக ஒவ்வொருவரிடமும் போய், பிராணனை வாங்கித் தன் வரும்படியைத் தண்டிக்கொள்வான்.

ஹபீப் சாகிப், வயிறு நிறையப் புலாவும் கோஃப்டாவும் ஆனந்தமாகச் சாப்பிட்டு விட்டு, தம் நான்காவது மனைவியான அழகிய இளநங்கையுடன், மாடியிலுள்ள சுகமான படுக்கையறைக்குச் செல்வார்.

"யா—அல்லா"—என்ற அலியின் அழைப்பு அந்த மணம் நிறைந்த மண அறைக்குள் வந்து அலறும். ஹபீப் சாகிப்புக்குக் கோபமும் ஆத்திரமும் குமுறும், திட்டுவார். ஆனால், அவனை அனுப்பித்தொலைப்பதற்கு, அவர் மனைவியையும் கீழே அனுப்பித்தானே ஆக வேண்டும். ஏதாவது கொடுத்தாலொழிய அவன் போகவேமாட்டானே.

ரஹீம்கானும், கரீம்கானும் தாதுமியாவின் தோட்டத்தில் உட்கார்ந்தபடி தோட்டத்திலுள்ள மலர்களின் மணத்தையும், அங்கே தமக்கு விருந்தளித்த தனவந்தர் வழங்கிய விருந்தின் சுவையையும் ரசிப்பதோடு ஊர் வம்புகளையும் குஷாலாக அளந்து கொண்டிருப்பார்கள். திடீரென்று எங்கிருந்தோ அவர்கள் பழக்கப்பட்ட அந்த நாற்றம் கிளம்பும். அலியினுடைய ஊளைக்குரலும் அதைத் தொடர்ந்து வரும். அவசர அவசரமாகத் தமது பைகளைத் தடவி, ஏதாவது சில்லரை எடுத்து வேலைக்காரனிடம் கொடுத்து, உடனே அந்த நாற்றத்தைத் துரத்தியடிக்கச் சொல்வார்கள்.

இப்படியே அகப்பட்டதைப் பொறுக்கித்தின்று கந்தைகளைத் தைத்து உடுத்திக்கொண்டு, காலத்தை ஓட்டி விட்டான், முப்பது வருஷமாக. இரண்டொரு சமயங்கூட, நல்ல புதிய உடைகள் சில வற்றை அணிந்து கொண்டு, இறுமாப்புடன் வீதிகளில் உல்லாச நடை போட்டுக் கொண்டு உலவினதுண்டு. ஆனால் சகிக்க முடியாத பிணநாற்றம் 'குப்' பென்று குமட்டும். அதே சமயம் க்வா ப்ராஸ்தானில் சில சவக்குழிகள் தோண்டப்பட்டுக் கிடந்ததாக வதந்தி உலாவியது.

ஒரு நாள், திடீரென்று நகரில் அமைதி குலைந்தது. எங்கும் ஒரே பரபரப்பு. ஆவேசம் கொந்தளித்தது. ஆத்திரம் கட்டுக்கடங்கவில்லை. தெருவெல்லாம் கோஷங்கள், இரைச்சல், கூக்குரல், ஆரவாரம்— ஒரே சப்தம். ஆளுக்கு ஆள் குண்டாந்தடிகளையும், துருப்பிடித்த கத்திகளையும் வீசிக்கொண்டு தெருவெல்லாம் அலைந்தனர். முஸ்லீம்கள் ஹிந்து தெருக்களில் நுழையவே பயந்தார்கள். ஹிந்துக்கள் தங்கள் வட்டாரத்தை விட்டு வெளியே போகத்துணியவில்லை.

அலி ஆஸ்பத்திரிக்கு வந்தான். எப்படி வந்தான் என்று யாருக்கும் தெரியாது. தள்ளாடி நடந்தும், மண்டியிட்டு ஊர்ந்தும், மார்பால் நகர்ந்தும்......எப்படியோ வந்து சேர்ந்துவிட்டான். உடம்பில் பலத்த காயம். ரத்தம் பீரிட்டுக்கொண்டிருந்தது. அவன் இடுப்பில் சுற்றியிருந்த கந்தை வருகிற வழியில் எங்கேயோ நழுவி விழுந்து விட்டது. அவனுக்காக யாரும் அக்கரைப்படவில்லை. அங்கே எத்தனையோபேர் செத்தவர்கள், செத்துக்கொண்டிருந்தவர்கள், படுகாயமடைந்தவர்கள். பிறகு அவன், ஒருவழியாகத் தன் அவதிகளை முடித்துக்கொண்டு உயிரை விட்டதும் அவனை, சவக்கிடங்கில் கொண்டுபோய்ப் போட்டார்கள். அங்கே இரண்டு மாஜி ஹிந்துக்களின் பிணங்களுடன் மூன்றாவது பிணமாகக் கிடந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஹிந்துப்பிணங்களை யாரோ எடுத்துச்சென்று விட்டனர், தடபுடலாகக் கொளுத்துவதற்காக. அலிமட்டும் அங்கேயே கிடந்தான், நிர்வாணமாக, பிணமாக, தன்னந்தனியனாக.

இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் ஹபீப் சாஹிப், கரீம் சாஹிப், ரஹீம் சாஹிப், தாதுமீயா முதலியவர்களுக்குச் செய்தி எட்டியது. அவர்கள் அப்படியே




கலங்கிவிட்டார்கள். அலி அவர்களைச் சேர்ந்தவன். அவர்கள் மதத்தைச் சேர்ந்த சகோதரன். அவனும் தங்களைப் போலவே நபிகள் நாயகம் அவர்களைப் பின்பற்றுகிறவன்.

அன்று பிற்பகல், அவர்களும் அந்த நகரத்திலுள்ள அநேக முஸ்லீம் பிரமுகர்களும் ஒரு தாபூத்துடன் (சவப் பெட்டி) வந்து சேர்ந்தனர், அலியைக் கொண்டு செல்வதற்காக, அவனைக் கவுரவமாகப் புதைப்பதற்காக. அவனைப் பக்கத்திலிருந்த ஒரு வீட்டுக்குக் கொண்டு போனார்கள். அந்த நகரத்தின் பிரதம மௌல்வி அவனை வெந்நீரில் வாசனைச் சோப்பு போட்டுக் குளிப்பாட்டி, பன்னீர் தெளித்தார். ஒரு காஸியைப்போலப் பட்டாடை உடுத்தினர். அத்தர் பூசி ரோஜாப்பூ மாலை போட்டனர். மௌல்வி அவன் காதில் கல்மா ஓதினார்.

அலியுடைய தாபூத் புறப்பட்டது. பின்னால் ஒரு பெரிய கூட்டம் ஊர்வலமாகத் தொடர்ந்தது. அதில் வந்தவர்களெல்லாம், ஒவ்வொருவரும், சில நிமிஷத்திற்காவது சவப்பெட்டியைத் தமது தோளில் தாங்க—நான்—நீ—என்று போட்டி போட்டனர். பெண்கள் திரையிட்ட ஜன்னல்களுக்குப் பின்னால் இருந்தபடியே ஆவலுடன் அலியின் தாபூத்தைத் தரிசித்தனர். அவர்கள் அழகிய உதடு

கள்,—இல்லில்லா—என்று மெல்ல முணுமுணுத்து அசைந்து நெளிந்தது.

க்வாபர் தயாராகிவிட்டது. கச்சிதமாக ஆடையணிந்திருந்த அலியை லேஹத்தில் (உள் சவக் குழியில்) வைத்தனர். அவன் முகத்தை மூடியிருந்த துணி விலக்கப்பட்டது. 14 நூற்றாண்டுகளுக்குமுன் எங்கிருந்து சகோதரத்துவ உபதேசம் வந்ததோ, அந்தப் பரிசுத்தமான தெய்வீக நாட்டின் திசையில் அவன் முகத்தைத் திருப்பி அப்படியே வைத்தனர். மௌல்வி அவசர அவசரமாக ஓதினார்.

லேஹத் மேல் கல் வைத்து மூடப்பட்டது. ஹபீப் சாஹிப், கரீம் சாஹிப், இன்னும் அங்கே வந்திருந்த பிரமுகர்கள் ஆளுக்கொரு பிடிமண் அள்ளிச் சவக் குழியில் போட்டனர். அத்துடன் குழியில் மண்ணைத் தள்ளி மூடினர்.

மௌல்வி தால்க்வீன் சொல்ல ஆரம்பித்து, தமது இறுதிக் கடமையைத் தீர்த்தார்.

பரலோக வாசலில் அலி, மூன்று கேள்விகள் கேட்கப்படுவான். அவைகளுக்கு அவன் சரியாகப் பதிலளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனை வெளியே தள்ளிவிட்டுப் பரலோகக் கதவுகள் மூடிக் கொள்ளும்.

உன்னுடைய கடவுள் யார்?— இது முதல் கேள்வி. மௌல்வி அதற்கான பதிலையும் தாமே சொன்னார்.

அல்லாஹ்—என்று.

உன் மதம் என்ன?

இஸ்லாம்.

உன்னுடைய நபி யார்?

மகம்மது.

ஆனால் ஆறு அடி ஆழத்திற்குக்கீழே— அலி இதையெல்லாம் காதில் வாங்கவில்லை. அசையவில்லை. பதில் சொல்லவுமில்லை.

(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தது)


## அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா:—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ 7—0—0.

குஷ்டம், வெண்குஷ்டம்:—இதை உபயோகித்து ஹக்கீம்கள் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம் விலை ரூ. 3—0—0.

நரை மயிர் நிவாரணி:—ஆயுர்வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ 2—8—0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ 3—8—0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ 5—0—0.

N B பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லாவிட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார்:

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன், குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. ஸ்நானம் செய்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை, இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

Baidya Raj Brij Kishore Ram
RANI GUNJ P. O.
(BURDWAN)

# விசேஷ சலுகை

மிகவும் குறைந்த விலையில் சிறந்த "ஸ்விஸ் மேக்" கைக் கடிகாரம். அனுபவ பூர்வமான திறமை வாய்ந்தது. மிக உயர்ந்த ரகக் கருவிகளால் ஆக்கப் பெற்றதும், ஒவ்வொன்றும் 3 வருடங்களுக்கு உத்திரவாதமுள்ளனவும் 'பிளாஸ்டிக் பாண்ட்' உடன் கூடியது.




No. 113—வளைவு வடிவம்.

| | | |
|---|---|---|
| பிரகாசமான க்ரோமியம் கேஸ் | ... | Rs. 40/- |
| உயர்ந்த ரகம் | ... | Rs. 45 - |
| ரோல்ட் கோல்ட் கேஸ் (10 வருட கியாரண்டி) | ... | Rs. 60/- |
| 15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் | ... | Rs. 75/- |
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | ... | Rs 90/- |



No. 114—'டான்னோ' வடிவம்.

| | | |
|---|---|---|
| பிரகாசமான க்ரோமியம் கேஸ் | ... | Rs. 42/- |
| உயர்ந்த ரகம் | ... | Rs. 46/- |
| ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி) | ... | Rs. 62/- |
| 15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் | ... | Rs. 76/- |
| 15 ஜுவல்ஸ ரோல்ட் கோல்ட் கேஸ் | ... | Rs. 92/- |



No. 115—மெல்லிய தட்டை வடிவம்

| | | |
|---|---|---|
| க்ரோமியம் கேஸ் | ... | Rs. 24/- |
| ,, உயர்ந்த ரகம் (7 ஜுவல்ஸ்) | ... | Rs. 30/- |
| 15 ஜுவல்ஸ க்ரோமியம் கேஸ் | ... | Rs. 38/- |
| ,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி) | ... | Rs. 75/- |
| ,, வாடர் புருப் க்ரோம் | ... | Rs. 75/- |



No. 116—சமகோணச் சதுர வடிவம்.

| | | |
|---|---|---|
| க்ரோமியம் கேஸ் | ... | Rs. 38/- |
| ,, (உயர்ந்த ரகம்) | ... | Rs. 42/- |
| 15 ஜுவல்ஸ க்ரோமியம் கேஸ் | ... | Rs. 65/- |
| ,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி) | ... | Rs. 85/- |

**ஸ்திரீகளின் கைக்கடிகாரம்**

மேற்கண்ட எவ்வித வடிவிலும் கிடைக்கும் (12½% அதிகப்படி)

**அலாரம் டைம்பீஸ்**

Rs. 18/-. உயர்ந்த ரகம் Rs. 22/-

பாக்கிங், தபாற் செலவு வேறு.

மேற்கண்டவற்றில் இரண்டு வகைளுக்கு ஆர்டர் செய்பவர்களுக்கு தபாற்செலவு முதலியன இல்லை

**PIONEER WATCH CO.**

Post Box No. 11428, CALCUTTA.

Show Room 318A; Chittaranjan Avenue.

## மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

## விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது, இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

## வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

## ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

**KAVIRAJ R. N. CHAKRAVARTHI**

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25.

Telephone: South 308

*Stockists:*

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.




# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)

தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

**மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1**

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்





*Stockists:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

**BOMBAY TABLET MANUFACTURING COMPANY,**

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2



எவ்விதமான

வேலைக்கும்

ஈடுகொடுக்கக்

கூடியவை



கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலோ ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப் பாரை ஈடு கொடுக்கவேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்கள் சுளகுப் பாரைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக்கூடியவை.

வெஸ்டுகோஸ்டு, நார்த்தர்ன் சர்க்கார் நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள்:-

**மெஸர்ஸ் V. கனகய்ய செட்டி & கோ.**
105, நைனியப்பநாயக்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.

**மெஸர்ஸ் D. B. மதன் & கோ.**
89, ஸகிண்ட் லேன் பீச்சு,
ஜி. டி. மதராஸ்.

**டாடா அக்ரிகோ**

கருவிகளையே வாங்குங்கள்

**தி டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.**



178055



Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !




**தீவிர ஜீவசக்தியளிக்கும் விடமின்கள் நிறைந்தது**

போர்ன்-வீட்ராவிலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும ஜீவசக்தியும ததும்பச் செய்கின்றன.

## காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

**காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி**

சப்ளைகள் கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept "16" ) தபால் பெட்டி 1417-பம்பாய்.

Regd. No. M. 4405 CAUVERI




# டி. எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

73

**T. S. R. & Co.**

கும்பகோணம்.

Cauveri Colour Press, Kumbakonam